
கல்கி



KALKI ஏப்ரல் 1, 1956 4 அணா


ஓர் அழகு ராணியின் மேனியோடு நீங்களும் விளங்கலாம்!
நாளொரு மேனியாக வனப்பெய்துங்கள்...
ஆம், சோபிக்கும் எழில் மேனி பெற விரும்பும் உங்கள் கனவும் நனவாக முடியும்! குளித்திடும் ஒவ்வொரு தடவையும் ரெக்ஸோனா உபயோகியுங்கள்— அதன் கேடில் சத்து நிறைந்த நுரையை எப்போதும் உங்கள் சருமத்தின் மீது மிருதுவாகத் தேய்த்து, நாளொரு மேனியாக உங்கள் சருமம் மேலும் மேலும் மென்மை மிகுந்த புது வனப் பெய்தும்.
1955 ரெக்ஸோனா அழகுப் போட்டியில் வெற்றிபெற்ற அழகியான "மிஸ். ரெக்ஸோனா"
Rexona
பெரிய சைஸிலும் கிடைக்கும்.
...இயற்கையான வழி
ரெக்ஸோனா
உபயோகித்தல்
கேடில்* கலந்த சோப் இது ஒன்றே.
R.P. 139-50 TM

கல்கி

மலர் 15 இதழ் 35 — மன்மத ஹு பாங்குனி 19

1, ஏப்ரல் 1956

பொருளடக்கம்

"கல்கி"யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்கள்; சம்பவங்களும் கற்பனையே.



குழந்தையின் குதூகலம்
ஆம். குதூகலச் செல்வனின் குதூகலத்திற்குக் கேட்பானேன்! அவன் அப்பா எப்பொழுதும் ஜான்ஸன்ஸ் பேபி பவுடர் வாங்கி வருகிறார். என்ன குளுமை! என்ன மென்மை! அவன் இளம் சருமத்திற்கு எவ்வளவு இனியது!
Johnson's
TRADE MARK
ஜான்ஸன்ஸ் பேபி பௌடர்
இலவசம் குழந்தை பராமரிப்பு புத்தகத்தின் இலவச பிரதிக்கு எழுதுங்கள். பெற்றோர்களுக்கு வேண்டிய அநேக விஷயங்கள் இதில் அடங்கியுள்ளது. சுலபமாகப்படித்து புரிந்து கொள்ளும்படியான இங்கிலீஷ் பாஷையில் எழுதப்பட்டுள்ளது.
ஜான்ஸன் அண்ட் ஜான்ஸன்
(க்ரேட் பிரிட்டன்) லிட்.
பி.ஓ. பாக்ஸ் 1976, டிபார்ட்மெண்ட் 20 A
பம்பாய்
Johnson's
BABY
POWDER



மலர் 15 | தமிழ்த்திரு நாடு தன்னைப் - பெற்ற | மன்மத ௵
இதழ் 35 | தாயென்று கும்பிடடி பாப்பா — *பாரதியார்* | பங்குனி 19

இராணுவச் செலவு

மே மாதம் இரண்டாவது வாரத்தில் விநோபாஜி இந்தப் பிரதேசத்துக்கு வரப் போகிருர். மே மாதம் 27-ந் தேதி வாக்கில் காஞ்சிபுரத்தில் சர்வோதய மகா நாடு கூடப் போகிறது. மகாத்மாவின் நிர்மாணத் திட்டங்கள்தான் சர்வோதய மகா நாட்டின் விஷயம். அதே காலத்தில் மகாத்மாஜி கோரிய ஆதாரக் கல்வி திட்டத்தைப் பற்றிய ஆலோசனையும் காஞ்சிபுரத்து நடவடிக்கைகளில ஒரு முக்கிய அம்சமாக நடைபெறும்.

சமீபத்தில் விநோபாஜி ஒரு பெரிய விஷயத்தைச் சொல்லியிருக்கிருர். பாகிஸ்தானுக்கு அமெரிக்கா கொடுக்கும் இராணுவப் படை உதவியைப் பற்றிய ஒப்பந்தம் முடிவாகியிருக்கிறபடியால், நம்முடைய இராணுவ முஸ்தீபுகளை நாமும் அதிகப்படுத்த வேண்டும் என்று தில்லி பார்லிமெண்டில் பலர் கருதியும் வற்புறுத்தியும் வருகிருர்கள். இந்தப் போக்கு பலம் பெற்று விட்டால், உலகத்தில் மற்றப் பைத்தியக்காரர்களைப் போல் நாமும் பைத்தியம் பிடித்தவர்களாவோம். இது கூடாது என்பது விநோபாஜியின் கருத்து. நாம் உலகத்திற்கு உபதேசம் செய்வதும், திட்டமாக வற்புறுத்துவதும் இந்த ஆயுதப் போட்டிகளை நிறுத்திவிட வேண்டும் என்பதே. நாமும் இந்த வெறியில் சிக்கிப் போய், போட்டி போட்டுக் கொண்டு இராணுவச் செலவை அதிகரித்தோமானுல் நம்முடைய ஏழை நாடு பாரம் தாங்காமல் அமுங்கிப் போகும்! ஆகையால், நம்முடைய உபதேசத்துக்கு இசைந்தவாறு நாமும் நடந்து காட்ட வேண்டும்.

பாகிஸ்தானைக் கண்டு நாம் ஏன் பயப்பட வேண்டும்? பயத்தை ஒழித்துத் தைரியத்தை வெளிப்படையாகக் காட்ட வேண்டும். வெளிப்படையாகக் காட்டுவது எவ்வாறு என்ருல், அண்டை ராஜ்யம் முஸ்தீபுகளை அதிகரிக்கும் போது நாம் இருந்தபடியே இருப்போம் என்று, அதிகரிக்காமல் வைத்து உலகத்துக்குக் காட்ட வேண்டும். இருபாலாரின் ஒப்பந்தம் இன்றியே ஒருதலைத் தைரியத்தைக் காட்ட வேண்டும். இதுதான் காந்தியம். தற்போது விநோபாஜியும் ராஜாஜியும் வற்புறுத்தும் முறையும் இதுவே. பிறருக்கு இந்த முறையை வற்புறுத்தும் போது, நாமும் கடைப்பிடித்துக் காட்ட வேண்டும். மேலும் அமெரிக்கத் தலைவர்கள் வாக்குறுதி தந்திருக்கிருர்கள், இந்தியாவின் மேல் பாகிஸ்தான் பலாத்காரம் செய்வதாக ஏற்பட்டால் தங்களுடைய உதவியை வாபஸ் வாங்கிக் கொள்வதாக.

மற்ருெரு விஷயம் எப்போதும் கவனத்தில் இருக்க வேண்டும். அமெரிக்கா அல்லது ருஷ்யா அல்லது பிரிட்டன் இந்த நாடுகளிலிருந்து நாமாவது பாகிஸ்தானாவது பெறும் ஆயுத உதவிகள் என்னத்துக்கு உதவும்? அந்த ஆயுதங்களுக்கெல்லாம் இயங்கும் சக்தி வெளிநாட்டிலிருந்து வரும் கல்லெண்ணெய். (பெட்ரோலுக்குத்தான் இந்தப் பெயரைத் தமிழில் சொல்லுகிறேம். கிரோஸீனுக்குக் கிராமங்களில் மண்ணெண்ணெய் என்று சொல்வதுபோல், கல்லைத் துளைத்து எடுக்கும் பெட்ரோலுக்குக் கல்லெண்ணெய் என்று சொல்வதும் சரி. பெட்ரோல் என்ருலும்கூட லத்தீனில் இதுவே பொருள். இதற்கு ஆங்கிலத்தில் 'Rock oil' என்றும் சொல்வதுண்டு.)

வெளி நாட்டிலிருந்து பெட்ரோல் வருவதை ஒரு விநாடியில் வெளிநாட்டு யுத்தக் கப்பல்கள் நிறுத்திவிட முடியும். ஏன், ஏற்றுமதியையே வெகு சுலபமாக அவர்களுடைய ஆதிக்கத்திருல் நிறுத்திவிட முடியும்.

பாகிஸ்தானுடைய புது முஸ்தீபுகளைக் கண்டு நாம் பயப்பட வேண்டியதற்குக் கொஞ்சமும் காரணமில்லை. விநோபாஜி சொல்வது போல் நம்முடைய ராணுவச் செலவைப் பாதியாகக் குறைத்துக் கொண்டு விட்டால் நம்முடைய உலகச் செல்வாக்கு இரு மடங்காகும்.

பயமே ராணுவ பலம் போல வேஷம் போட்டு நடிக்கிறது. இந்த வேஷத்தை நாம் அம்பலத்துக்குக் கொண்டு வரவேண்டும். அதற்கு இதுவே சமயம்.

இஸ்லாமியக் குடியரசு

கொஞ்சமேனும் அவசரப் படாமல் எட்டு வருஷங்களுக்கு மேல் பாகிஸ்தானியர் தங்களுடைய அரசியல் நிர்ணயச் சட்டத்தை ஒருவிதமாக முடிவு செய்திருக்கிறார்கள்.

நம்முடைய குடியரசு நிர்ணயத்துக்குப் போட்டியாக அங்கும் ஒரு குடியரசு ராஜ்யம் ஏற்படுத்தி விட்டார்கள். குடியரசுக்கு ஒரு அடைமொழி சேர்த்து "இஸ்லாமியக் குடியரசு" என்று வைத்துக் கொண்டிருக்கிறார்கள். வெறும் காடா துணியல்ல, பட்டுக் கரை போட்ட வேஷ்டி.

இதைக் கண்டு யாரும் பயப்படாமலிருப்பதற்காக ஜனாதிபதி மிர்ஸா அவர்கள் ரேடியோ மூலம் பேசும்போது, "சிறு தொகை ஜாதியினர்க்கு நியாயமும் கருணையும் காட்டப்படும்" என்று உறுதிமொழி கூறினார்.

இத்தகைய உறுதிமொழிகள் பல தடவைகள் கூறப்பட்டிருக்கின்றன. பாகிஸ்தானிலிருந்து அகதிகள் ஓடி வந்து பாரத வங்காளத்தில் அடைக்கலம் புகுவது நின்றபாடில்லை. எது எப்படியாயினும் பாரத ஜனாதிபதியும் பிரதமர் ஜவாஹர்லால் நேருவும் ஆசிகளும் வாழ்த்துக்களும் கூறியிருக்கிறார்கள்.

"நம்மிருவருக்குள் யுத்தம் எப்போதும் இடையாது" என்று உறுதிமொழி பகிரங்கப்படுத்தப் பட்டிருக்கிறது. பாரதப் பிரதமர் நேருவும் பாகிஸ்தான் பிரதமர் முகம்மத் அலியும் பிரதிக்ஞை செய்திருக்கிறார்கள். யுத்தம் இல்லாவிடினும், தலைவலி யிருந்தே வருகிறது. வெளிநாட்டாருடைய உதவியை நாடும் பழக்கம் பாகிஸ்தானுக்கு விட்டபாடில்லை. அது நீங்கும் வரையில் தலைவலி தீராது.

சந்தேக சகுனங்கள்

கொச்சி – திருவாங்கூர் ராஜ்யம் மத்திய சர்க்காரின் நிர்வாகத்துக்கு ஒப்படைக்கப் பட்டு விட்டது. இந்த நிலையில்தான் மலையாள ஜில்லாவும் அதனுடன் இணைந்து போகும். சட்ட சபை முதலிய தொல்லைகள் இராது. சின்ன ராஜ்யங்களின் ஆருடம் இதுவே. ராஜ்யங்கள் சிறுகச் சிறுகப் போட்டிகள் தீவிரமாகவும் கட்சிகள் சமமாகவும் இருக்கும்; எந்த அரசியல் கட்சி நிர்வாகமும் நிலையாக நிற்காது என்கிற உண்மைக்குத் திருவாங்கூர் கொச்சி ராஜ்யத்தின் பரிதாப நிலை ஒரு சான்றாகும். ஜனாதிபதியின் விசேஷ நிர்வாகம் முடிந்த பின்னரும் நிலைமை அதிகமாக மாறுவதற்கு இடமில்லை. இதுவரையில் இடம் கிடைக்கப் பெறாத கம்யூனிஸ்ட் கட்சி இனி மேல் பெருவாரி ஸ்தானங்களைப் பெறுவதற்கும் இடமுண்டு. இல்லாவிடில் கம்யூனிஸ்ட் கட்சியார் ஏன் இந்தப் புது ஏற்பாட்டைத் தீவிரமாக ஆதரிக்க வேண்டும்! தக்ஷிண முக்கோணத்தில் ஒரு பாகம் கம்யூனிஸ்ட் கட்சியின் நிர்வாகத்திலும் மற்றொரு பகுதி ஜாதிபேத வகுப்பு வாதக் கட்சியினர் ஆதிக்கத்திலும் ஒப்படைக்கப்பட்டால் நிலைமை சோதனைக்கு இடமாகும். புது ஏற்பாட்டின் சகுனம் நன்றாக இல்லை.

இந்திய மருத்துவத்துக்கு ஆபத்து!

நாடு சுதந்திரம் பெற்றபின் பல துறைகளில் முன்னேறி விட்டோம். உலகம் வியக்கும் பல காரியங்களைச் சாதித்து விட்டோம். ஆனால் ஒரு விஷயத்தில் மட்டும், நாட்டு மக்களின் நன்மைக்கான வைத்தியத் துறை வளர்ச்சியில் மட்டும் இன்னும் பின் தங்கியே இருக்கிறோம். நமது நாட்டின் சீதோஷ்ண நிலை, நமது மக்களின் வாழ்க்கை முறை, நமது பண்பாடு இவைகளுக்கு ஏற்றவகையில் நமது வைத்தியத்தை வளர்ப்பதற்கு முயலவில்லை.

உலகத்து வைத்திய முறையுடன் ஒப்பிட்டுப் பார்த்தால் நமது இந்திய வைத்தியம் எல்லா வகையிலும் சிறந்தது என்பதற்கு எத்தனை எத்தனையோ சான்றுகளைக் கூறலாம். இதை உலகத்து வைத்திய நிபுணர்கள் அத்தனை பேரும் ஏற்றுக் கொள்கிறார்கள். ஆனால் நமது சுகாதார மந்திரிகள் மட்டும் இந்த உண்மையை ஏற்றுக் கொள்வதில்லை.

சென்னை ராஜ்யத்தில் இந்திய மருத்துவத்துக்காக ஒரு கல்லூரி இருக்கிறது. அதையொட்டி ஒரு ஆஸ்பத்திரியும் இருக்கிறது. அந்த ஆஸ்பத்திரியில் பல அதிசயங்கள் நடைபெற்று வருகின்றன. பிரசித்திபெற்ற சென்னை ஜெனரல் ஆஸ்பத்திரியில் 'இந்த நோய் தீராது' என்று தள்ளிவிட்ட பல நோயாளிகள் இந்திய வைத்தியத்தால் காப்பாற்றப் பட்டிருக்கிறார்கள். பாரிசவாயு என்ற கொடிய நோய்க்கு இந்திய வைத்திய ஆஸ்பத்திரியில் கைகண்ட மருந்து இருக்கிறது. இன்னும் எத்தனை எத்தனையோ கொடிய வியாதிகளுக்கெல்லாம் அற்புதமான மருந்துகள் இருக்கின்றன.

இந்த மருந்துகளின் தரத்தை உயர்த்தி அதை மக்களுக்கு வழங்குவதற்கு வழி செய்ய வேண்டிய சர்க்கார் அதை அடியோடு விட்டு விட்டு மேல் நாட்டு மருந்துகளையே கட்டிக் கொண்டு அழுகின்றனர். இந்திய வைத்திய ஆஸ்பத்திரி என்று பிரமாதமாகப் பெயர் வைத்துக் கொண்டு அதில் மருந்துக்குக்கூட இந்திய வைத்தியம் செய்ய முடியாத நிலையை ஏற்படுத்தி வருகின்றனர்.

ஏற்கனவே இந்த ஆஸ்பத்திரியில் 210 நோயாளிகள் சிகிச்சைபெற வசதி இருந்த போது இந்திய மருத்துவ முறை சிகிச்சைக்காக 155 படுக்கைகள் இருந்தன. இப்பொழுது



'நமது ஐந்து வருஷத் திட்டம்தான் தேசத்தின் தற்காப்புத் திட்டம்' என்று நமது பிரதம மந்திரி ஜவாஹர்லால் நேரு மக்கள் சபையில் அறிவித்தார்.

270 நோயாளிகள் சிகிச்சை பெறப் படுக்கைகள் வளர்த்திருக்கின்றன. ஆனால் இந்திய வைத்திய முறை சிகிச்சைக்கு 126 படுக்கைகள்தான் ஒதுக்கப் பட்டிருக்கின்றன. அதாவது முன்பு இந்த ஆஸ்பத்திரியில் இந்திய மருத்துவத்துக்கு இருந்ததைவிட 29 படுக்கைகளைக் குறைத்து விட்டனர். இந்திய மருத்துவத்தைச் சர்க்கார் எவ்வளவு கவனத்துடன் வளர்த்து வருகிறது என்று தெரிகிறதல்லவா !

இந்திய மருத்துவ முறையில் மருந்து தயாரிப்பதற்காக முன்பு இரண்டு லட்சம் ரூபாய் செலவழித்தார்கள். இப்பொழுது அதை நாற்பதாயிரமாகக் குறைத்து விட்டார்கள். இந்த அளவில் இந்திய மருத்துவ மருந்து வகைகளையும் குறைத்து விட்டார்கள்.

திரிபலா, திரிகடு கூட இல்லாமல் இந்திய வைத்தியம் சர்க்காரின் ஆதரவுடன் நடத்தப் பட்டு வருகிறது! அதே சமயத்தில் இந்திய வைத்தியப் பகுதியின் மற்றொரு கிளையான மேல் நாட்டு முறையில் உள்ள மருந்துகள் மட்டும் 900 இருக்கிறது. இந்திய மருத்துவ மருந்துகளோ 90 கூட இல்லை. இதன் காரணம் என்னவோ ! மேல் நாட்டு மருந்துகளை ஆதரிப்பதில் சம்பந்தப் பட்டவர்களுக்கு ஏதாவது லாபம் கிடைக்கிறதோ என்று பலர் சந்தேகப் படுவதில் ஏதேனும் உண்மை இருக்குமோ என்று ஐயப்பட வேண்டி இருக்கிறது. இந்த லட்சணத்தில் சட்ட சபைகளிலும் இதர இடங்களிலும் இந்திய மருத்துவம் வளர்க்கப்படுவதாக வீண் பிரசாரம் செய்து வருகிறார் நமது சுகாதார மந்திரி. அவர் பேச்சை மட்டும் பத்திரிகைகளில் படித்த மக்கள் "ஏதோ இந்திய வைத்தியத்துக்குப் பிரமாதமாகச் சேவை செய்யப்பட்டு வருகிறது" என்று ஏமாந்து போகிறார்கள்.

இந்த ராஜ்யத்தில் இருப்பது ஒரே ஒரு இந்திய மருத்துவ ஆஸ்பத்திரி. இப்போது அதன் சப்த நாடியும் தளரும் படியான காரியங்களே நடைபெற்று வருகின்றன. இந்தக் குறைகளை உடனே நீக்க முயல வேண்டும். உண்மையிலேயே நாட்டு நலத்தில் அக்கறையுள்ள வைத்திய நிபுணர்கள் அடங்கிய ஒரு குழுவை நியமித்து இந்திய வைத்தியத்தைச் சிறந்த முறையில் வளர்ப்பதற்குப் பாடுபட வேண்டும். அதற்கு முதல் காரியமாக இந்திய வைத்தியக் கல்லூரியிலும், இந்திய மருத்துவ ஆஸ்பத்திரியிலும் ஏற்கனவே இருந்தபடியாவது பாடத் திட்டங்களும், இந்திய மருந்துகளும் உடனடியாக இடம்பெற வசதி செய்ய வேண்டும்.

இதைச் செய்யாத வரை சுதேச பக்தியை வளர்த்து வருகிறோம் என்று கூறுவதில் பொருளில்லை. நமது பெருமைகளையே நாம் தெரிந்து கொள்ளாமல், வெறும் ஞான சூனியங்களாகத்தான் இருந்து வருகிறோம் என்று கூறவேண்டியிருக்கிறது.

என்ன சேதி?

கோயம்புத்தூரில் கூத்து

பாரத நாட்டில் உண்மையான ஜனநாயக ஆட்சி நிலவி வருகிறது என்பதில் ஐயமில்லை. மக்களின் பேச்சு சுதந்திரத்துக்கு அணுவளவும் குந்தகம் ஏற்படவில்லை என்றும் சொல்லலாம். கோயம்புத்தூரில் சென்ற வாரம் நடந்த முஸ்லிம் லீக் மகாநாட்டுச் சொற்பொழிவுகளைப் பார்க்கும்போது இது உறுதியாகத் தெரிகிறது. "இந்தியாவில் முஸ்லிம் லீக் நீடித்திருக்க வேண்டியது அவசியம்" என்று அம் மகாநாட்டுத் தலைவர் ஸ்ரீ எம். முகம்மது இஸ்மாயில் பேசி யிருப்பதி லிருந்து இது தெளிவாகிறது.

"முஸ்லிம் லீக் ஒரு வகுப்புவாத ஸ்தாபனம் அல்ல; தேசிய ஸ்தாபனமே" என்று ஸ்ரீ இஸ்மாயில் தமது தலைமை உரையில் கூறி எல்லோரையும் திக்குமுக்காடும்படி செய்துவிட்டார். ஆம், நூற்றுக்கு நூறு வகுப்புவாதத்தையே அடிப்படையாகக் கொண்டு பல ஆண்டுகளாக வேலை செய்து வந்த ஒரு ஸ்தாபனத்தை "தேசிய ஸ்தாபனம்" என்று ஒருவர் குறிப்பிடுவதாயின், அதைக் கண்டு யார்தான் திகைக்காமல் இருக்க முடியும்? அவரது கூற்றை நம்புவோர் இந்தியாவில் இருப்பார்கள் என்று அவர் எண்ணுவது ஆச்சரியத்திலும் ஆச்சரியம் அல்லவா?

பாரத நாட்டின் சுதந்திரத்துக்காக முஸ்லிம் லீக் போரிட்டதில்லை. முஸ்லிம் லீகின் இலட்சியமான பாகிஸ்தான் ஏற்பட்டுவிட்டது. இந்தியாவில் இன்னும் முஸ்லிம் லீக் இயங்குவதைச் சகித்துக் கொண்டிருக்க முடியாது என்று ஜவாஹர்லால்ஜி போன்ற தலைவர்கள் பல தடவைகள் கூறிவிட்டார்கள். முஸ்லிம் லீக் நீடிப்பதால் இந்தியாவில் உள்ள முஸ்லிம்கள் நலனடைவார்கள் என்று முஸ்லிம் லீக் மகாநாட்டுத் தலைவர் கூறி யிருப்பது சரியல்ல. இந்தியாவில் உள்ள நாலரைக்கோடி முஸ்லிம்களின் நல உரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டுமாயின், அதற்கு முஸ்லிம் லீகைத் தாமதமின்றிக் கலைத்துவிட்டுத் தேசிய ஸ்தாபனத்தில் சேர்ந்து கொள்வதுதான் சிறந்த வழி என்பதை ஸ்ரீ இஸ்மாயிலுக்கும் அவரது சகாக்களுக்கும் சுட்டிக் காட்ட விரும்புகிறோம்.

சர்க்கரையும் உடைத்து!

"**சோ**ழவள நாடு சோறுடைத்து" என்று இத்தனை நாளும் தஞ்சை ஜில்லா வாசிகள் பெருமையுடன் பேசி வந்தார்கள். இனி, "சோழவளநாடு சர்க்கரையும் உடைத்து" என்று இரட்டிப்புப் பெருமையோடு பேசிக் கொள்வார்கள்!

வடபாதிமங்கலம் திரு தியாகராஜ முதலியார், தமது சொந்த ஊரிலே 90 லட்ச ரூபாய் பெறுமானமுள்ள பிரும்மாண்டமான சர்க்கரைத் தொழிற்சாலையை ஏற்படுத்தி விட்டார். அதைச் சென்ற புதன் கிழமை நமது ராஜ்ய முதன் மந்திரி திரு காமராஜ் அவர்கள் திறந்து வைத்தார்.

தஞ்சை ஜில்லாவில் திரு தியாகராஜ முதலியார் சர்க்கரை ஆலைகளை ஏற்படுத்தப் போவதாகச் செய்தி நேற்றுத்தான் வந்தாற் போலிருக்கிறது. அதற்குள் – இன்று – ஆலை வேலை செய்யத் தொடங்கி விட்டது என்ற செய்தியைப் படிக்கும்போது நம்ப முடியாத ஆச்சரியமாக இருக்கிறது. இது திரு வி. எஸ். டி. அவர்களின் அபாரச் செயல் திறமையை எடுத்துக் காட்டுகிறது.

ஆலையின் யந்திரங்கள் மேற்கு ஜெர்மனியிலிருந்து வரவழைக்கப்பட்டு வடபாதி மங்கலத்தில் 5000 ஏக்கரா கரும்புப் பண்ணையுள்ள இடத்தில் நிறுவப் பட்டிருக்கின்றன. இந்த யந்திரங்கள் நிறுவவும், அதை வேலை செய்ய வைத்து, நம் இன்ஜினியர்களுக்குக் கற்றுத்தரவும் ஜெர்மனியிலிருந்தே இன்ஜினீர்கள் யந்திரங்களுடனே வந்துள்ளனர். கரும்புப் பண்ணையில் கரும்புச் சாகுபடியில் உதவ, இருபது விசேஷ உத்தியோகஸ்தர்களையும் இந்திய சர்க்கார் உதவி யிருக்கிறார்கள். கரும்புப் பண்ணையில் வேலை செய்யச் சுமார் 10,000 பேர் தேவைப்படும். ஆலையில் வேலை செய்ய 500 பேர் தேவைப்படும்.

"தஞ்சை வெறும் விவசாயத்தையே நம்பிப் பிழைக்கும் ஜில்லா. அங்கே பெரும் தொழிற்சாலைகள் கிடையாது" என்று வெகுநாட்களாகக் குறை சொல்லி வந்தவர்கள் எத்தனையோ பேர். அவர்கள் குறைகளை நீக்கி விட்டார் திரு வி. எஸ். டி. அவர்கள். இரண்டுகோடி ரூபாய் மூலதனத்துடன் தொடங்கப்பட்டுள்ள இந்தத் திரு ஆரூரான் சர்க்கரைத் தொழிற்சாலை நாளுக்கு நாள் வளர்ந்து அதில் வேலை செய்வோர் அனைவருக்கும் சுகமும் சந்தோஷமும் திரு ஆரூரான் அருளினால் கிடைப்பதாக! பாரத நாட்டின் தொழில் வளம் பெருகுவதாக!

மவுண்ட்பாட்டன் தம்பதிகள்

மவுண்ட்பாட்டன் தம்பதிகளுக்குப் பாரத தேசம் அமோகமான வரவேற்பு நல்கியது. மவுண்ட்பாட்டன் இப்பொழுது



சென்னை விமான நிலையத்தில் மவுண்ட் பாட்டன் தம்பதிகளுடன் ராஜாஜியும் கவர்னர் ஸ்ரீ பிரகாசாவும்

பிரிட்டிஷ் கப்பற்படையின் பிரதம தளபதியாகப் பணி செய்கிறார். அவர் சென்ற வாரம் பாரத கப்பற்படையைப் பார்வையிட வந்தார். அவருக்குத் தில்லியில், பம்பாயில், கொச்சியில் பாரத மக்கள் அன்புடன் வரவேற்று உபசரித்து அனுப்பினார்கள்! இவ்வளவு அன்புக்கும் காரணம் பாரத தேசத்துக்குச் சுதந்திரம் வழங்கிய கை மவுண்ட்பாட்டனின் கை. அவருடைய சலியா உழைப்பினாலும் விடா முயற்சியாலும் நமக்குத் துரித காலத்தில் சுதந்திரம் கிடைத்தது.

இதைவிட, அவர் சாதித்த பெரிய காரியம் பிரிட்டனுக்கும் இந்தியாவுக்கும் என்றும் பரஸ்பர அன்பு நிலவும் வகையில் பாரத சுதந்திரப் பிரச்னையைத் தீர்த்து வைத்ததுதான்.

இதைப்பற்றி எட்டு ஆண்டுகளுக்கு முன் ராஜாஜி கூறிய மொழிகள் இங்கு நினைவுகூர வேண்டும்.

"மவுண்ட்பாட்டன் இந்தியாவுக்குச் செய்துள்ள தொண்டுகளை இங்கே நான் வலியுறுத்த விரும்பவில்லை. ஏனெனில் அதற்கான சான்றுகள் ஏராளமாகக் கூறப்பட்டு விட்டன. ஆனால் அவர் பிரிட்டனுக்குச் செய்துள்ள மகத்தான சேவையையே குறிப்பிட விரும்புகிறேன். 'அரும்பாடுபட்டுக் கிளைவும் ஹேஸ்டிங்ஸும் வென்று நிர்மாணித்த சாம்ராஜ்யத்தை லார்டு மவுண்ட்பாட்டன் எறிந்து விட்டு வந்து விட்டாரே' என்று சர்ச்சில் எண்ணலாம். ஆனால் அடிப்படை உண்மை என்னவென்றால், யுத்தகாலத்திலும், லார்டு மவுண்ட்பாட்டனுக்கு முந்தி கவர்னர் ஜெனரலாக இருந்தவர்கள் காலத்திலும் நிலவிவந்த வெறுப்பு, கசப்பு, விரோதம் யாவும் போக்கி, அந்த இடத்தில் அன்பும் பரஸ்பர நல்லெண்ணமும் வளரச் செய்த பெருமை மவுண்ட்பாட்டனையே சாரும்.

"அப்படியானால் ஹேஸ்டிங்ஸும் கிளைவையும்விட மகத்தான சேவை மவுண்ட்பாட்டன் செய்தார் என்று ஆகவில்லையா? இதுதான் எல்லாத் தொண்டுகளையும்விட மகத்தான சேவை! எதிர்காலத்தில் சாம்ராஜ்ய ஆதிக்கம் முக்கியமானதாகக் கருதப்பட மாட்டாது. எத்தனை நாட்டு மக்களின் நல்லெண்ணமும் அன்பும் பெற்றிருக்கிறோம் என்றுதான் கேட்கப்படும். அவைதான் முக்கியமாக இருக்கும். அதனால் தான் அவருக்கு முன்னாலிருந்தவர்களை விட லார்டு மவுண்ட்பாட்டன் தன் தாய் நாட்டுக்குப் பெரிய சேவை செய்திருக்கிறார் என்று சொல்லுகிறேன்!"

இரு நாடுகளிடையே பரஸ்பர நல்லெண்ணத்தை வளர்த்த லார்ட் மவுண்ட் பாட்டன் தம்பதிகளுக்குப் பாரத மக்கள் என்றும் மகிழ்ச்சியுடன் நினைவு கூருவார்கள் என்பதில் சந்தேகமென்ன?

கம்பன் விழா

காலையில் கிழக்கே சூரியன் உதிக்கத் தவறினாலும் தவறி விடலாம். வானம் பொய்த்தாலும் பொய்த்துவிடலாம். ஆனால் காரைக்குடியில் கம்பன் விழா ஆண்டுதோறும் நடப்பது தவறியதில்லை.


1938-லிருந்து தொடர்ந்து காரைக்குடி கம்பன் கழகத்தார் வெகு சிறப்பாகக் கம்பன் விழா நடத்தி வரும் விஷயம் தமிழ் கூறும் நல்லுலகம் நன்கு அறிந்த விஷயம். இவ்வளவு சிறப்புக்கும் பெருமைக்கும் காரணம் அதன் செயலாளராகப் பணியாற்றி வரும் திரு சா. கணேசன்தான். அவர் கம்பன் புகழ்பாடி, கன்னித் தமிழ் வளர்ப்பதையே தமது வாழ்வின் லட்சியமாகக் கொண்டு விட்டவர். அப்படிப்பட்ட தீர புருஷர் மேற்கொள்ளும் எப்பணிதான் சிறக்காது!

இந்த ஆண்டு கம்பர் விழாவின் முதல் நாள் தலைவர் திரு கே. சந்தானம் அவர்கள் ஒரு முக்கிய விஷயத்தைச் சுட்டிக் காட்டியிருக்கிறார்.

"இங்கிலாந்தில் ஒருவருக்கொருவர் இதர துறைகளில் மன வேறுபாடுகளும் கருத்து வேறுபாடுகளும் இருக்கலாம். இருப்பினும் ஆங்கிலக் கவியான ஷேக்ஸ்பியரைப் படிப்பதிலும் உலகெங்கும் பரப்புவதிலும் ஒருமைப்பாடு அவர்களிடையே காண்கிறோம். அதைப்போல நாம் கம்பனின் காவியமான ராமாயணத்தைத் தமிழ் மக்கள் நன்கு


ஆசிரியர்
சோமு
எழுதும்
சரித்திரத் தொடர்கதை
கடல்
கண்ட
ஏப்ரல்
15உ
கலீக்
தமிழ்ப் புத்தாண்டு மலரில்


மணியம்
கனவு
ஆரம்பமாகிறது



திருவாரூர் சங்கீத மும்மூர்த்திகள் ஞாபகார்த்த சபையின் ஆதரவில் மார்ச் மீ 16உ முதல் 18உ வரை மூன்று தினங்கள் ஸ்ரீ முத்துஸ்வாமி தீக்ஷிதர் ஜயந்தி விழா சிறப்பாக நடைபெற்றது. ஸ்ரீ தீக்ஷிதர் பிறந்த மனையில் அலங்காரமாக அமைக்கப்பட்ட பந்தலில் மூன்று தினங்களும் பல சங்கீத வித்வான்களின் கச்சேரி நடைபெற்றது. கடைசி நாள் அன்று ஆலத்தூர் திரு வேங்கடேசய்யர் அவர்களின் சங்கீதக் கச்சேரியுடன் விழா இனிது முடிந்தது.

சென்னைப் பல்கலைக் கழக வடமொழி ஆராய்ச்சியாளர் டாக்டர் வி. ராகவன் தலைமையில் 'ஹிந்து'ப் பத்திரிகை துணை ஆசிரியர் திரு என். ரகுநாத ஐயர் விழாவை ஆரம்பித்து வைத்துப் பேசுவதையும், ஸ்ரீ தீக்ஷிதர் வழிபட்ட விக்கிரகங்களுக்கும், ஸ்ரீ சக்கரத்துக்கும், அவர் வாசித்த ஸ்ரீராம வீணைக்கும் அலங்காரம் செய்து ஸ்ரீ முத்துஸ்வாமி தீக்ஷிதரின் பேரன் திரு பாலுசாமி தீக்ஷிதர் பூஜை செய்வதையும் மேலே படத்தில் காணலாம்.

கற்றறிந்து உலகெங்கும் பரப்ப வேண்டும். எத்தனை எத்தனை வேறுபாடுகள் இருப்பினும் அவற்றைக் களைந்தெறிந்து ஏகோபித்த அபிப்பிராயத்துடன் முயற்சி எடுத்துக் கொள்ள வேண்டும். அப்போதுதான் உலகில் தமிழ் மக்கள் உன்னத புருஷர்களாக வருவார்கள்" என்று கூறியிருக்கிறார்.

கவிச்சக்கரவர்த்தி கம்பன், கதை நடத்தும் முறையிலும், கையாளும் உத்திகளிலும் சொல்லாட்சியிலும், கவிதைத் திறனிலும், உலக மகா கவிஞர்களுக்கெல்லாம் மேலானவன் என்று பன்மொழிப் புலவர் வ. வே. சு. ஐயர், பன்முறை பல சான்றுகளுடன் எடுத்துக் காட்டியிருக்கிறார். எனவே, திரு சந்தானம் கூறுவது போல் தமிழர்கள் ஒற்றுமையுடன் ஒரே குறிக்கோளுடன் கம்பனை உலக மாந்தருக்கு எடுத்துச் சொல்ல முனைந்தால், ரசிகமணி டி. கே. சி. யின் வாழ்க்கை இலட்சியமே நிறைவேறியதாகும். கம்பன் உண்மையிலேயே கவிச் சக்கரவர்த்தி என்பதை யாவரும் உணர்ந்து தெளிவார்கள்.

பஸ் நிர்வாகம்!

சென்னை சர்க்காரின் பஸ் நிர்வாகம் பல ஆண்டு காலமாகச் சீர்கெட்ட நிலையிலேயே இருந்து வருகிறது.

பஸ் நிர்வாகத்தை எந்த வேளையில் ஏற்றுநடத்தத் தொடங்கினார்களோ தெரியவில்லை. சட்டசபை அங்கத்தினர்கள், பத்திரிகையாளர்கள், பொது மக்கள், பஸ் பிரயாணிகள், பாதசாரிகள் எல்லாருடைய சாபத்துக்கும் தாக்குதல்களுக்கும் அசையாமல் கலங்காமல் ஈடு கொடுத்துக் கொண்டு வருகிறது. சர்க்கார் நிர்வாகத்தின் திறமையற்ற போக்கைக் கண்டிக்கப் பலரும் பஸ் சர்வீசையே உதாரணம் காட்டுகிறார்கள். சர்க்காரின் தேசியக் கொள்கையைக் கண்டித்து எழுதவும் காரசாரமாகத் தாக்கவும் பஸ்ஸைத்தான் முக்கிய விஷயமாக எடுத்து கொள்கிறார்கள்.

பல ஆண்டுகளுக்கு முன் ஓடத் தொடங்கிய சர்க்கார் பஸ்கள் இன்னமும் உயிரை வைத்துக் கொண்டு ஓடத்தான் செய்கின்றன! சிற்சில சமயங்களில் நடு ரோடுகளில் நெடிய பெருமூச்சு விட்டுச் சத்தியாக்கிரகமும் செய்கின்றன. ஆனாலும் அவற்றை யார் விடுகிறார்கள்! 'விடேன் தொடேன்' என்று தள்ளிக் கொண்டாவது காரியாலயத்துக்கும் வீட்டுக்கும் போய்க் கொண்டுதான் இருக்கிறார்கள்!

சாதாரணமாக, திறமையான ஸ்தாபனங்களில் ஒரு பஸ்ஸை நாலு அல்லது ஐந்து வருஷங்களுக்கு மேல் உபயோகிப்பதில்லை. அப்படி உபயோகித்தால் அவை வெறும் தகர டப்பாக்களாகத் தான் இருக்க முடியும். அவற்றைக் கட்டிக்கொண்டு காலந் தள்ள வேண்டியதாய்த் தான் இருக்கும்.

சென்னை சர்க்காரிடம் இப்போது ஏறக்குறைய ஐந்நூறு பஸ்கள் இருக்கின்றன. இந்த ஐந்நூறு பஸ்களில் 305 பஸ்களே

ரோடுகளில் ஓடுகின்றன. இவற்றிலும் பெரும் பகுதி கோபால ரெட்டியார் காலத்திய பஸ்கள்! அதாவது எட்டு வயதை முட்டிவிட்ட கிழடு தட்டிய வாகனங்கள்.

சென்னை மாகாணத்தில் சர்க்காரைத் தவிர, தனிப்பட்ட முதலாளி ஸ்தாபனங்களும் கோவை, மதுரை போன்ற இடங்களில் பஸ் சர்விஸ் நடத்துகின்றன. அங்கெல்லாம் நடத்தப்படும் பஸ் சர்விஸுகள் மிக ஒழுங்காகப் புகாருக்கு இடமில்லாமல், பொது மக்கள் விரும்பிப் பிரயாணம் செய்யும் வகையில் அமைந்திருக்கின்றன. பழைய தகர டப்பா பஸ்களோ பெருமூச்சு விட்டு அலறும் பஸ்களோ அங்கெல்லாம் கிடையாது. தென்னிந்தியாவில் பிரசித்தி பெற்ற பஸ் ஸ்தாபனம் ஒன்று தன்னுடைய பஸ்களை நாலு வருஷங்களுக்கு மேல் உபயோகிப்பதில்லை. நாலு வருஷங்கள் சேவை செய்த பஸ்களுக்கு ஓய்வு அளித்துப் பென்ஷன் கொடுத்து ஷெட்டுக்கு அனுப்பி விட்டு அவற்றுக்குப் பதிலாகப் புதிய பஸ்களை ஓட்ட ஆரம்பிக்கிறது.

இங்கே, சென்னை நகரத்தில் மீண்டும் மீண்டும் பொதுமக்களைத் தன்னைச் சொல்லியாவது பழைய பஸ்களின் பிராணனையே வாங்குகிறார்கள். காரணம்?......

போதிய பஸ் இல்லாததுதான். அதாவது பற்றாக்குறைதான்.

சென்னை நகரத்தின் போக்குவரத்து நெரிசலைச் சமாளிக்கக் கூடிய அளவுக்குச் சென்னை சர்க்காரிடம் பஸ்கள் இல்லை. அதனால் பழைய பஸ்ஸையே விடுகிறார்கள். ரொம்ப அழகாயிருக்கிறதல்லவா?

சர்க்காரின் பஸ் நிர்வாகத் திறமையைப் பரிசோதிக்க இதற்கிடையில் இன்னொரு இடைஞ்சலும் ஏற்பட்டது. அது, சென்னை நகர ரோடுகளில் ஓடிக் கொண்டிருந்த டிராம் வண்டிகள் திடீரென்று நின்று விட்டதுதான். இதன் பலனாக, பஸ் பிரயாண நெருக்கடி மேலும் அதிகமாயிற்று. அந்த நெருக்கடி இன்னும் தீர்ந்தபாடில்லை.

சமீபத்தில் பஸ் மந்திரி பரமேசுவரன், "இன்னும் ஆறுமாத காலத்தில் பஸ் நெருக்கடி தீர்ந்துவிடும். பஸ் போக்குவரத்தும் குறையற்றதாகி விடும். மேலும் 140 பஸ்களுக்கு ஆர்டர் கொடுத்திருக்கிறோம். அவை வந்து விட்டால் நெருக்கடி தீர்ந்து விடும்" என்று கூறியிருக்கிறார்.



இன்னும் 140 பஸ்கள் வந்து விடுவதில் மட்டும் நெருக்கடி தீர்ந்து விடாது என்பது நிச்சயம். குப்பைத் தொட்டியில் எறியவேண்டிய பஸ்களும் நிறைய இருக்கின்றன. அவை எத்தனை என்பதைக் கணக்கெடுத்து அவற்றுக்குப் பதிலாகவும் புதிய பஸ்களைப் போட்டாக வேண்டும். இது ரொம்ப முக்கியமான விஷயம்.

இதைவிட முக்கிய விஷயம் பஸ் போக்குவரத்து நிர்வாகத்திலுள்ள குறைபாடுகள். இந்தக் குறைபாடுகளைத் தொழில் முறை அனுபவசாலிகளைக் கொண்டு ஆராய்ந்து உடனடியாகப் பரிகாரம் தேடவேண்டும். அதற்கான வழிமுறைகளை பஸ் மந்திரி பரமேசுவரன் வகுத்துக் கொண்டிருக்கிறார் என்று அறிந்து மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறோம்.

சென்னை நகரத்தில் பஸ்ஸுக்காக ஒருவர் கூடக் **காத்து நிற்பதில்லை** என்று சொல்லும்படி நிர்வாகத்தை பஸ் மந்திரி சீர்திருத்துவாரா?

ராக கன்னி

நம்முடைய சங்கீதத்தில் ராகங்களின் அமைப்பு ஓர் அதிசயம். எத்தனையோ பல நூற்றுண்டுகளாக ராகங்கள் என்றும், அவற்றின் இனப் பிரிவுகள் என்றும் திட்டவட்டமாக வகைப்படுத்தி அவற்றிற்குத் தனியான வடிவங்களையும் ரூபங்களையும் தெளிவான முறையில் ஆக்கி வழங்கி யிருக்கிறார்கள், நம்முடைய முன்னோர்கள். ஆயிரக்கணக்கான வருஷங்களாகத் தோடி என்றும் சங்கராபரணம் என்றும் பைரவி என்றும் வழங்கி வருகிற ராகங்களுக்கு, மனித உருவைப் போலத் தனித் தனியான உருவங்கள் நின்று நிலைத்து வந்திருக்கின்றன. நாம் சந்தித்த ஒரு மனிதரை மீண்டும் பார்க்கும் போது, இனம் கண்டு பிடித்து விடுகிறோம் அல்லவா, அதைப் போல இந்த ராகங்களையும் பல நூறு வருஷங்களாக நாம் இனம் கண்டு பிடித்து இவற்றோடு பழகி வருகிறோம். கண்ணுக்குத் தெரிகிற அடையாளத்தைப் போல, காதுக்குத் தெரிகிற அடையாளமும் வடிவமும் இந்த ராகங்களுக்கு அமைந்திருக்கின்றன. இவற்றை யெல்லாம் பார்க்கும்போது, ஒவ்வொரு ராகத்துக்கும் மூக்கும் விழியும் முகமும் அங்கங்களுமே உண்டு என்று சொல்ல வேண்டும். இந்த முறையில் ஓவியர் கனுதேசாய் அவர்கள் நமது நாட்டு ராகங்களுக்கு, அவற்றின் அமைப்பையும், சாயல்களையும் வைத்து அவற்றிற்கு உருவம் கொடுத்துச் சித்திரமாக வரைந்திருக்கிறார். இந்த வாரத்துக் 'கல்கி' அட்டையிலே காட்சிதரும் மூவர்ண ஓவியம் தோடி ராகத்தின் உருவம்.

தோடியைக் கேட்கும் போது ஏற்படுகிற இதய உணர்ச்சிகளும், பாவங்களும் ஒளி வடிவமாக நம் கற்பனையில் எப்படி நிற்கின்றன என்பதை வர்ணத்திலே தருகிறார் கனுதேசாய். மான்களும், வீணையின் ஒலியும், மேனியின் வளைவு நெளிவும் தோடி ராகத்தின் மென்மையையும், அதன் அங்க அசைவுகளையும் நம் கண்முன்னே நிறுத்துகின்றன. செவிக்கு ஒரு கண் இருந்தால், அந்தக் கண்ணுக்கு முன்னால் தோடி ராகம் இந்த வடிவத்திலேதான் நிற்கும் என்று சொல்லத் தோன்றுகிறது இந்தச் சித்திரம்!

ஓவியர் கனுதேசாயின் நுட்பமான இந்தக் கலைக்கு இன்னொரு சிறந்த உதாரணமாக மற்றொரு அற்புதமான ஓவியம், 'கல்கி' தமிழ்ப் புத்தாண்டு மலரின் முகப்புப் படமாக வருகிறது என்பதையும் நேயர்களுக்கு மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறோம்.

மணிக்கூணி

"அறுபத்து மூவர் திருவிழாவின் போது நடைபெற்ற பூமிதானக் கண்காட்சிக்குச் சுமார் பதினைந்தாயிரம் பேர் வந்திருந்தனர்." —செய்தி

பதினைந்தாயிரத்து அறுபத்து மூன்று பேர் என்பது சரியான கணக்காகும்.

★

"புதிதாக வெளியாகியுள்ள பாகிஸ்தான் தேசப் படத்தில் ஜூனகாடும், காஷ்மீரும் பாகிஸ்தானைச் சேர்ந்த பிரதேசம் என்பதைக் காட்ட அந்தப் பிரதேசங்களுக்குப் பச்சை வர்ணம் தீட்டப்பட்டிருக்கிறது."

—செய்தி

இது பச்சைப் பொய் என்பது சொல்லாமலே விளங்குகிறதல்லவா!

★

"விளையாட்டுச் சீட்டுக் கட்டுகளை ஒருவர் புதுச்சேரியில் இருந்து கள்ளத்தனமாகக் கடத்திச் சென்றார். எல்லைத் துருப்புகள் அவரைப் பிடித்து விட்டனர்." —செய்தி

எப்போதுமே சீட்டு விஷயத்தில் துருப்புகள்தான் பெரிய எதிரி!

★

"ஐந்தாண்டுத் திட்டங்கள் சம்பந்தமாகப் பல கோடி ரூபாய்களை நான் ஏட்டில் தான் பார்க்கிறேன். ஒரு கோடியைக் கூட கண்ணால் பார்த்ததில்லை." —ஒரு எம்.எல்.ஸி.

திட்டங்களின் ஒரு கோடியைத்தான் இப்போது காணமுடியும். முழுதும் பூர்த்தியானால் அவற்றைக் காணக் கண் கோடி வேண்டும்!

★

"ஓடும் ரயிலில் ரயில்வே சாதனை பற்றிய சினிமாச் செய்திப் படங்களைக் காட்டுகிறார்கள்." —செய்தி

பேஷ்! ஓடும் ரயிலில் சினிமாச் செய்தியைப் பார்க்கும் போது சினிமாச் செய்தியில் ஓடும் ரயிலையும் பார்க்கலாம்.

★

"கிராமங்களில் எண்ணெய் ஆட்டும் செக்குத் தொழிலுக்கு மத்திய சர்க்கார் மான்யம் உதவும்." —செய்தி



மான்யத் தொகையைச் செக்காக உதவ மாட்டார்கள் என்று நம்புகிறோம்.



குலதெய்வம்

சரவன்

"கிண், கிண், கிண்..."

வீதி வழியே தமக்கே உரிய ஆரவாரத்துடன் இரண்டு தீயணைக்கும் லாரிகள் பறந்து சென்றன. மக்கள் எல்லாரும் பரபரப்புடன் வெளியேவந்து லாரிகள் சென்ற திசையை நோக்கினர்கள். பிரும்மாண்டமான தீ ஜ்வாலை! வானமெங்கும் ஒரே புகை மண்டலம்! மக்கள் ஓலமிட்டுக் கதறும் மனத்தைப் பிளக்கும் கோரச் சத்தம்!

"ஐயோ! என் செல்வமே! உன்னை இதற்கா வளர்த்தேன்? இத்தனை வருஷங்கள் கழித்து அருமையாய்ப் பிறந்த என் கண்ணே! உன்னை உயிரோடு போகக்கி விட்டேனே! என்னை மலடியாகவே வைத்திருக்கக் கூடாதா ஆண்டவனே! எனக்குக் குழந்தையை ஏன் கொடுக்கணும்? தெய்வமே! என் நெஞ்சு குமுறுதே! உனக்குக் கண் இல்லையா?"

பார்த்தவர்களை யெல்லாம் உருக்கியது பச்சையம்மாள் பதறும் காட்சி! சிலருடைய முயற்சியினால், அவள் அவ்விடத்திலிருந்து அப்புறப் படுத்தப்பட்டு ஒரு தனிமையான இடத்துக்குக் கொண்டு போகப்பட்டாள். தீயணைக்கும் யந்திரங்கள் தங்கள் வேலையைத் துரித கதியில் துவங்கின.

பச்சை யம்மாள் வெகு காலம் மலடியென்ற பட்டப் பெயரைத் தாங்கி யிருந்தாள். அவள் கணவன் வெள்ளைச்சாமி தனக்கு ஒரு குழந்தை இல்லையே என்ற தாபத்தினால் தன் மனைவியை வெறுக்கக் கூடச் செய்தான். ஏன்? வேறொரு பெண்ணை மணக்கவும் நிச்சயம் செய்து விட்டான். அச்சமயம் தான், தன்னுடைய மனைவி கர்ப்பம் தரித்திருக்கிறாள் என்ற விவரம் அவனை ஆனந்த சாகரத்திலே ஆழ்த்தி விட்டது.

தனக்கு மக்கட் பேறு இல்லையே என்ற தாபம் அவனுக்கு மட்டுந்தானா? பச்சையம்மாளுக்கு இல்லையா? பாவம்! அவள் வேண்டிக் கொள்ளாத தெய்வம் இல்லை. போடாத பூஜை இல்லை. கடைசியில் அவள் பங்கில் தெய்வம் இருக்கத்தான் செய்தது.

ஒரு அழகிய ஆண் குழந்தையைப் பெற்றுத் தந்தாள் பச்சையம்மாள் தன் கணவனுக்கு. வெள்ளைச்சாமி ஆனந்தக் கூத்தாடினான்.

"ஏ பிள்ளை! நான் அசட்டுத்தனமா கண்ணாலம் கட்டிக்கிட்டிருந்தா என்ன ஆகி யிருக்கும்? பத்து வருசம் பொறுத்தவன், இன்னும் கொஞ்சம் பொறுத்துப் பார்க்கிறதற்கு எனக்குத் தோணலியே. பார்! நல்ல வேளை! என் ஆசையைத் தீர்த்து வைச்சதோடு, நம் குடும்பத்திலே இன்னொரு ஆள் சேர்ந்தால் ஏற்படும் செலவையும் மிச்சப்படுத்தினயே!" என்று தன் நன்றியைத் தெரிவித்தான் வெள்ளைச்சாமி.

குழந்தையைச் சீரும் சிறப்புமாய் வளர்த்தாள் பச்சையம்மாள். முதல் பிறந்த நாளைப் பிரமாதமாகக் கொண்டாடினான். அதற்காகத் தன் தங்கையையும் வரவழைத்திருந்தான்.

நாளை குழந்தைக்குப் பிறந்த நாள். திடீரென்று வெள்ளைச்சாமிக்கு வெளியூர் போக வேண்டிய நிர்ப்பந்தம், தவிர்க்க முடியாமல் போய் விட்டது. அவனுடைய எஜமானர் அவசரமாய் வெளியூர் பயணம் போக வேண்டியிருந்ததால், அவனும் உடன் புறப்பட வேண்டிய தாயிற்று. எஜமானனிடம் நிலைமையைச் சொல்லி நின்று விடப் பார்த்தான். ஆனால் துணிவு ஏற்படவில்லை. எஜமானர் மகா முரட்டுப் பேர்வழி. அவரிடம் கேட்பானேன், அவர் கோபத்துக்கு ஆளாவானேன்? பிழைத்துக் கிடந்தால், குழந்தையின் இரண்டாவது பிறந்த தினத்தை இன்னும் விமரிசையுடன் கொண்டாடினால் போச்சு—என்று சமாதானப்படுத்திக் கொண்டு அவருடன் புறப்பட்டு விட்டான்.

பச்சையம்மாளுக்குத் தன் கணவன் குழந்தையின் பிறந்த தினத்துக்கு உடன் இல்லையே என்ற குறை இலேசாய் உண்டு. எனினும், இந்தக் காலத்திலே வயிற்றுப் பிழைப்பை யல்லவா முதலில் கவனிக்க வேண்டி யிருக்கிறது என்ற உண்மையை உணர்ந்து, தன்னைச் சமாதானப் படுத்திக் கொண்டாள்.

குழந்தையின் பிறந்த நாளைக்குத்தான் அருமைக் கணவன் அருகில் இல்லையெனினும், தன் உடன்பிறந்த தங்கை வந்திருப்பது பெரிய ஆறுதலாய் இருந்தது பச்சையம்மாளுக்கு.

அன்று குழந்தையின் பிறந்த தினம் கொண்டாடப் பட்டது. உடன் இருந்த பதினேழு குடும்பத்தைச் சேர்ந்த குழந்தைகளுக்கெல்லாம் தின்பண்டங்கள் கொடுத்து மகிழ்ந்தாள் பச்சையம்மாள். அன்று தன் குழந்தையைப் பார்க்கப் பச்சையம்மாளே ஆச்சரியப்பட்டாள். எண்ணெய் நீராடிப் புதுச் சட்டை அணிந்து, நெற்றியில் திலகம் இட்டுத் தலைவாரிப் பூ வைத்து அலங்கரித்த அக்குழந்தை எல்லாருடைய கண்களையும் கருத்தையும் கவரக்கூடிய பொருளாய்த் தானிருந்தது. 'குழந்தைக்குத் திருஷ்டி விழாமலிருக்க வேணுமே' என்று கூடப் பயந்து விட்டாள் பச்சையம்மாள்.

சட்டென்று அவளுக்கு ஒன்று ஞாபகம் வந்தது. தன் தங்கை மலடியாயிற்றே. அவள் கண் பட்டு விட்டால்? ஐயோ! தான் ஏன் அவளை வரவழைத்தோம்? மலடியின் கண்பட்டுத் தன் குழந்தைக்கு ஏதாவது நோய் நொடி வந்து வாட்டப் போகிறதே என்று கவலைப் பட்டாள் தாய். கூடியவரையில் தன் தங்கை குழந்தையை எடுத்துச் சீராட்டா வண்ணம் பார்த்துக் கொண்டாள்.

"அக்கா! குழந்தையை என்னிடம் கொடேன்" என்று வலுக் கட்டாயமாய் வாங்கிக்கொண்டாள் ராஜி. பச்சையம்மாளால் ஒன்றும் பேசமுடியவில்லை.

அன்று மாலை பச்சையம்மாள் தண்ணீர் கொண்டு வரக் குழாய்க்குச் சென்றாள். திரும்பியபோது, தன் தங்கை குழந்தையை மடியில் வைத்துக் கொண்டு, கண் கலங்க உட்கார்ந்திருப்பதைக் கண்டாள்.

"ஏ ராஜி! நல்லா இருக்குது நீ உட்கார்ந்திருக்கிற மாதிரி! நல்ல நாளும் கிழமையுமாகக் குழந்தையை மடியிலே வெச்சிக்கிட்டு ஏன் அழுகிறே!" என்று கேட்டாள் துடிப்புடன்.

"இல்லே, அக்கா! நாம் குழந்தையைப் பார்த்துக்கிட்டே என்னமோ யோசனை பண்ணினேன். இப்படி எனக்கும் ஒரு குழந்தை பிறக்காதா! நாமும் ஒரு தாயாக ஆகமாட்டோமா என்று நினைத்தேன்!" என்றாள் உணர்ச்சியுடன் ராஜி.

அப்பொழுது பச்சையம்மாளின் முகம் போன போக்கைப் பார்க்க ராஜிக்குக் கஷ்டமாயிருந்தது. அந்தப் பேதைப் பெண் தன் மனத்தில் உள்ள குறையை அப்படியே வெளிப்படுத்தி விட்டாள். அக்காவின் குழந்தையிடம் அவளுக்குத் துளிக்கூட வெறுப்பு கிடையாது. அந்தக் குழந்தையையே அவள் தன் குழந்தையாகத்தான் பாவித்து வந்தாள். அப்படியிருக்க அக்காவின் மனம் வேதனைப்படும் விதத்தில் தான் ஏதோ பேசி விட்டதை நினைக்க அவள் மனம் வேதனையில் வெந்தது. இனிமேல் தான் அங்கிருப்பது சரியல்ல என்று முடிவு செய்து கொண்டாள்.

மறுநாள் காலை, ராஜி தன் அக்காளிடம், "அக்கா! நான் இன்று சாயங்காலம் ஊருக்குப் போய் வாரேன்" என்றாள்.

"என்ன அவசரம்? இன்னும் ரெண்டு நாள் இருந்துட்டுப் போயேன்!" என்றாள் பச்சையம்மாள்.

"இல்லே, அக்கா! அவரு திட்டுவாரு. உடனே வந்துடச் சொல்லி யிருக்காரு!" என்றாள். அன்று மாலை விளக்கேற்றும் நேரத்தில் கிளம்பினாள் ராஜி. குழந்தையை

ஆசையுடன் நோக்கினான். அவன் நோக்கு பச்சையம்மாளை என்னவோ செய்தது!

"அக்கா! நான் போய் வாரேன். குழந்தையைச் சாக்கிரதையாகப் பார்த்துக்கோ!" என்று இழுத்தவாறு கிளம்பினான். சற்றுத் தூரம் அவனுடன் சென்று வழியனுப்பி விட்டுத் திரும்பிய பச்சையம்மாள், குழந்தையைத் தூளியில் விட்டுத் தூங்கப் பண்ணினாள். விளக்கைக் குழந்தைக்குச் சற்று அருகில் வைத்து விட்டு, கடைக்குச் சென்றாள், சாமான் வாங்கிவர. கடையில் சாமான் வாங்கிக் கொண்டிருந்தபோது, திமுதிமு என்று ஜனங்கள் சேருவதைக் கண்டு என்ன, ஏது என்று திரும்பிய பச்சையம்மாள், "ஐயோ! வெள்ளைச்சாமி குடிசை தீப்பிடிச்சுடுத்தாம்" என்று கத்திக் கொண்டு ஓடியதைக் கேட்டாள். அவ்வளவுதான்; சாமான்களைப் போட்டு விட்டு, "ஐயோ! என் ராஜா!" என்று வெறி கொண்டவள் போல் ஓடினாள். அவள் தன் குடிசைக்கு வந்து பார்த்த போது தன் குடிசை மட்டுமில்லை. அருகில் இருந்த மற்றக் குடிசைகளும் பற்றி எரிவதைக் கண்டாள்.

"ஐயோ என் குழந்தை தூங்குதே! நான் என்ன பண்ணுவேன்? யாரும் காப்பாத்த மாட்டீங்களா?" என்று கதறினாள்.

தீ ஜ்வாலை யாரையும் அருகில் அண்ட விடவில்லை. தன் பயங்கரமான தாண்டவத்தைச் செய்து கொண்டிருந்தது. பெற்ற குழந்தையை உயிருடன் பறி கொடுத்த தாய்க்கு யாரால் ஆறுதல் கூற முடியும்? அவளுக்கு ஏற்பட்ட வெறியில், தானும் அதே தீயில் குதித்து விடலாமா என்று ஆவேசம் வந்து விட்டது. அவளைச் சிலர் தடுத்து நிறுத்தியிரா விட்டால், அந்தக் காரியத்தை அவள் செய்திருக்கக் கூடும்!


"பச்சையம்மா! பச்சையம்மா!"

குரல் வந்த திசையை நோக்கினாள் பச்சையம்மாள்.

"பச்சையம்மா! உன் மவன் உன் வயித்திலே பாலை வார்த்துட்டான்!"

அவள் பிரமித்தாள். என்ன சொல்கிறார்கள் அவர்கள்?

"பச்சையம்மா! உன் குழந்தை சேமமாயிருக்குது! அதோ கொண்டுவரா பாரு!"



ஒரு காலத்தில் பஸ் கண்டக்டர் பிரயாணிகளை வருந்தி அழைத்துக் கொண்டிருந்தார். இப்போது இட நெருக்கடி காரணமாக, பஸ் ஸ்டாண்டில் நூற்றுக்கணக்கான பேர் பஸ்ஸுக்காகத் தவம் கிடக்கிறார்கள்!

கண்களை அகல விரித்தபடியே, தொலைவில் நோக்கினாள் பச்சையம்மாள்.

"ஆ! என்ன? ராஜியா?"

ராஜி பரக்கப் பரக்கக் குழந்தையுடன் ஓடி வந்தான்.

"அக்கா! நல்ல காரியம் பண்ணினே! இப்படித்தான் குழந்தைக்கிட்ட விளக்கை வெச்சிட்டு, வெளியே போவாங்களா?" என்றான் ராஜி, ஆண்டவனுக்கு அஞ்சலி செய்யும் குரலில்.

பச்சையம்மாளுக்குத் தன்னெதிரில் நடப்பதெல்லாம் கனவு போலிருந்தது. "ராஜி! நீ ஊருக்குப் போகலை?" என்றாள் வியப்பும் களிப்பும் கொண்டு.

"அதை ஏன் கேட்கிறே? நான் போறதுக்குள்ளே ரயில் போயிட்டுது. ஆகையாலே திரும்பினேன். ஆனால், ரயில் தப்பிப் போனதும் நல்லதுக்குத்தான்னு இப்போது தெரியுது. இல்லாட்டி நம் கண்ணைக் காப்பாத்தி யிருக்க முடியுமா?" என்றான் ராஜி.

அப்போதும் பச்சையம்மாளுக்கு ஒன்றும் விளங்கவில்லை. அவள் விழிப்பதைக் கண்ட ராஜி கூறினான்.

"அக்கா! நான் திரும்பி வந்தேன். நீ வீட்டிலே இல்லை. குழந்தை தூளியில் அசைந்து கொடுத்தது. எடுத்துக் கொண்டு கோயிலுக்குப் போனேன். அப்போது குழந்தையின் பக்கத்தில் விளக்கு எரிந்து கொண்டிருந்தது. நான் திரும்புறத்துக்குள்ளே இத்தனை நாசம் ஏற்பட்டுட்டுது.

எல்லாம் நீ செய்த வேலைதான். அந்த விளக்கின் அருகில் இருந்த ஓலையில் தீப் பிடித்துத்தான் இத்தனை அமர்க்களம் ஏற்பட்டு விட்டது. ஏதோ நம் துலுக் காணத்தம்மன் அருள்தான் குழந்தை பிழைச்சதுன்னு எண்ணிக்கணும்!''

பச்சையம்மாளின் உள்ளம் எப்படித் தான் நெகிழ்ந்து விட்டது! தன் தங்கை யின் கண்பட்டுக் குழந்தைக்கு ஏதேனும் இன்னல் நேருமோ என்று பயந்தவளுக்கு, அதே தங்கைதான் தன் குழந்தையைக் காப்பாற்றிக் கொடுத்தாள் என்று பிரத் யக்ஷமாய் உணர்ந்த பின், ராஜியினிடம் அவளுக்கேற்பட்ட அன்பைச் சொல்ல வேணுமா?

ராஜியைப் பச்சையம்மாள் தன் உடன் பிறந்த தங்கையாய் மட்டும் கருதவில்லை; தன் குல தெய்வமாகவே போற்றினாள்!

டி. கே. சி. விழா

தமிழ் மக்கள் தமிழ் வளர்த்த பெரியார்களை நன்றியுணர்ச்சியுடன் நினைத்து அவர்களுக்கு விழா எடுத்து மகிழ்ந்து வருவது தமிழகத் துக்குப் புதியது அல்ல. ஆனால் இடைக்காலத் தில் எப்படியோ அந்த நல்ல வழக்கம் தமிழ் மக்கள் மத்தியில் மறைந்து கிடந்தது. இப் பொழுது காலம் மாறிவிட்டது. தமிழ் மக்கள் தங்கள் மொழியையும் அதை வளர்க்கும் பெரியோர்களையும் போற்றிப் புகழ்ந்து விழாக் கொண்டாடி அதன் மூலம் தமிழ் வளர்க்க ஆரம்பித்து விட்டார்கள்.

குற்றாலத்திலே ஒரு விழா நடைபெற்றது. குற்றாலம் என்றால் எப்படிப்பட்ட குற்றாலம்!

"கொல்லை முல்லை
மெல்லரும்பீனும் குற்றாலம்"

"கூதல்மாரி நுண்துளி
தூங்கும் குற்றாலம்"

"தேனருவி திரையெழும்பி
வானின்வழி ஒழுகும்"

என்பன போன்ற அருமையான தமிழ்ப் பாடல்களைப் பெற்றது திருக்குற்றாலம். குற்றா லத்தை யடுத்த பொதிகை மலையிலேதான்,

"என்றுமுள தென்தமிழ்
இயம்பிஇசை கொண்ட"

அகத்திய முனிவர் முற்காலத்தில் தமது சீடர்க ளுடன் வீற்றிருந்து செந்தமிழை வளர்த்தார்.

அதே குற்றாலத்தில்தான் நமது ரஸிகமணி திரு டி. கே. சி. அவர்களும் வாசம் செய்து அகத்தியரைப் போலவே அமுதத் தமிழ் வளர்த்து வந்தார்கள்.

அவர்களுடைய நினைவு விழா மார்ச் 18-ந் தேதி கல்கி ஆசிரியர் திரு சோமு அவர்கள் தலைமையில் வெகு சிறப்பாக நடைபெற்றது. விழாவுக்கு ஏராளமான தமிழ் அறிஞர்கள், ரஸிகர்கள், பிரமுகர்கள் திரளாக வந்திருந்து சிறப்பித்தார்கள்.

ரஸிகமணி அவர்கள் தம் வாழ்நாளில் எப் படிப்பட்ட அருமையான சேவை செய்திருக் கிறார், தமிழ் மக்களிடம் எவ்வளவு அன்பு கொண்டிருந்தார் என்பதை அன்றையத் திரு விழா நிதர்சனமாக எடுத்துக் காட்டிக் கொண் டிருந்தது. அன்று விழாவுக்கு வந்திருந்த அத்தனை பேரும் ரஸிகமணி டி. கே. சி. அவர்களிடத்திலும், தெய்வத் தமிழினிடத்தி லும் மாறாத பக்தி கொண்டவர்கள்.

நேரிலே வந்து கலந்து கொள்ள முடியாமல் தமிழ் நாட்டை விட்டு ஆயிரம் மைல், இரண் டாயிரம் மைல்களுக்கு அப்பால் உள்ள ரஸிக மணியின் அன்பர்கள், தமிழ் வளர்க்கும் அறிஞர்களிடமிருந்தெல்லாம் ஏராளமான கடிதங்கள் வந்து குவிந்தன.

ரஸிகமணி அவர்களின் பல்கலைக் கழகத்திலே பயின்ற அந்த ரஸிகர்களின் கடிதங்கள் ஒவ் வொன்றும் ஒரு தனி இலக்கியமாகத் திகழ்ந் தது. சிலர் கவியே இயற்றி அனுப்பி வைத் திருந்தார்கள். அவைகள் ஒவ்வொன்றும் படித் துப் படித்து அனுபவிக்க வேண்டியவைகள் தான். இதோ ரஸிகமணியிடம் பக்தி பூண்டு, அவர் வளர்த்த தமிழில் வளர்ந்த ஒரு ரஸிகர் இயற்றியுள்ள கவிதையைப் பாருங்கள். தமிழ் நாட்டை விட்டு ஆயிரத்து ஐந்நூறு மைல் களுக்கு அப்பால் பாரதத்தின் தலைநகரான புது தில்லியில் இருந்தாலும் அவருடைய மனம் குற்றாலத்தில் ரஸிகமணியின் விழாவிலேயே சுற்றிச் சுற்றி வருவதைப் பாருங்கள்.

மன்னவன் கம்பன் பாட்டை
மகிழநான் பாடும் போது
அன்னவர் குரலும் கூடே
அமைந்தொலி செய்யக் கேட்பேன்
இன்னமு(து) உண்ணும் போது
இன்னுரை நிகழும் போது
அன்னவர் அன்புப் பண்பை
அனைவரும் அறியச் செய்வேன்

இந்த அற்புதமான கவியைத் திரு சுந்தா அவர்கள் ரஸிகமணி டி. கே. சி. விழாவுக்கு அனுப்பி வைத்திருந்தார்.

விழாவில் ரஸிக மணி அவர்கள் பல கோணங் களிலே காட்சி தந்தார்கள். தமிழ்ச்சையிலே தோன்றினார்கள், திருவள்ளுவமாலையில் திகழ்ந் தார்கள், ஆனந்த தத்துவமாக ரஸிகப் பெரு மக்கள் எல்லாரையும் ஆட்கொண்டார்கள். இத்தனைக்கும் மேலே எல்லாருடைய இதயத் திலும் கொலுவீற்றிருந்தார்கள்.

இந்த அருமையான விழாவை நடத்துவதற்கு ஏற்பாடு செய்து கோலாகலமாக நடத்திய அன்பர்கள் அத்தனை பேருக்கும் தமிழ் மக்கள் சார்பாக நன்றியையும் பாராட்டுதலையும் தெரி வித்துக் கொள்கிறோம்.

டி. கே. சி. விழாக் காட்சிகள் சிலவற்றை எதிர்ப்பக்கத்திலுள்ள படங்களில் காணலாம்.

—போட்டோ : எம். எஸ். மணி





டி. கே. சி. விழா

1. விழாத் தலைவர் ''கல்கி'' ஆசிரியர் திரு சோமு அவர்கள் தலைமையுரை நிகழ்த்துகிறார். 2. திரு ஐ. ஏ. சிதம்பரம் பிள்ளை வரவேற்புரை கூறுகிறார். 3. திரு ஏ. வி. பால்நாடார் ரசிகமணி அவர்களின் திருவுருவப் படத்தைத் திறந்து வைக்கிறார். 4. விழாவில் கலந்து கொண்ட தமிழ்ப் பெருமக்களின் முன்னால் திரு கு. அருணாசலக் கவுண்டர் ''ரசிகமணியும் தமிழிசையும்'' என்பது பற்றி விரிவுரை நிகழ்த்துகிறார். 5. திரு சேது ரகுநாதன் ''டி. கே. சி. யும் திருவள்ளுவ மாலையும்'' என்னும் பொருள் பற்றிப் பேசுகிறார். 6. திரு எஸ். மகாராஜன் ''டி. கே. சி. என்ற ஆனந்த தத்துவத்''தை எடுத்து விளக்குகிறார். 7. திரு பி. என். சுப்பிரமணிய பிள்ளை டி. கே. சி.யைப் பற்றிய சில நினைவுகளைக் கூறுகிறார். 8. சாத்தூர் ச. பா. பிச்சைக் குட்டிக் குழுவினரின் 'சீதா கல்யாணம்' வில்லுப் பாட்டு நிகழ்ச்சியில் தலைவர் திரு சோமு அவர்கள் பாராட்டுரை வழங்குகிறார்.





வட இந்திய யாத்திரை 36

பூஞ்ச் நகரிலிருந்து காஷ்மீரத்தின் தலை நகரான ஸ்ரீநகருக்கு விமானப் பிரயாணம் நாற்பது நிமிஷங்கள்தான். ஆனாலும் விமானம் உயரக் கிளம்பிய பிறகு நேயர்கள் ஒரு வாரமல்லவா காத்திருக்க வேண்டியதாயிற்று. மாநிலத்திலேயே சிறந்த மனோகரமான இமய மலையின் சிகரத்துக்கு மேலே ஒரு வாரமென்ன! வாழ்நாள் பூராவும் கழிக்கலாம்.

விமானத்தில் இருந்த கண்ணாடி ஜன்னல் வழியாகப் பார்த்தால் விமானம் உயரக் கிளம்பிப் பறப்பது நன்றாகத் தெரியும். ரம்மியமான பூஞ்ச் நகரம், அதன் கம்பீரமான கட்டடங்கள், எல்லாம் ஆகாயத்தில் இருந்து பார்ப்பதற்கு எவ்வளவு அழகாக இருக்கின்றன! நகரத்தைச் சுற்றி விருக்கும் செல் வயல்கள் சிறு சிறு பாத்திகளாகத் தெரிகின்றன. அவைகளுக்கு இடையில் வளைந்தும் நெளிந்தும் ஓடும் ஆறுகள், சின்னச் சின்னக் கிராமங்கள், சீடைமரக் காடுகள் எல்லாம் தெரிகின்றன. இப்போது காட்சி மாறுகிறது; அந்தக் காடுகள் மட்டும்தான் தெரிகின்றன. அதுவும் ஏதோ பொம்மைக் காடுகள் போலச் சின்னஞ் சிறு காடுகளாகத் தெரிகின்றன. என்ன காரணம்? விமானம் வானத்தில் மிக உயரத்துக்கு வந்து விட்டதோ! ஆமாம்; விமானம் இரண்டாயிரம் அடி, மூவாயிரம் அடி, ஐயாயிரம் அடி என்று மேலே, மேலே, மேலே உயரக் கிளம்பி விட்டது என்பதை விமான ஓட்டி சொல்லிக் கொண்டே வந்தார்.

ஐயாயிரம் அடிக்கு மேலே செல்லும்போது விமானம் மேக மண்டலத்துக்குள் அல்லவா புகுந்து செல்கிறது! மேக மண்டலத்தில் விமானம் பறப்பதற்குத் திணறுகிறது.

மேக மண்டலத்தைப் பூமியில் இருந்து அண்ணாந்து பார்த்து அநுபவித்து வந்தவர்களுக்கு அதன்மீதே பிரயாணம் செய்தால் எப்படி இருக்கும் என்பதைச் சொல்ல வேண்டுமா! வெள்ளை மலர்க் கூட்டமோ அன்னப் பறவைகளின் அணிகளோ என்று பிரமையூட்டுவது போலிருந்தன மேகக் கூட்டங்கள். அதற்குள் செல்லும் போது ஏதோ ஒரு புது உலகத்தில் சஞ்சரிப்பதாகவே இருந்தது. இப்போது விமானம் மேக மண்டலத்துக்கும் மேலே சென்று விட்டது. இந்தச் சமயத்தில் விமானத்தின் சிறு ஜன்னல்களைத் திறந்தார்கள் பத்திரிகையாளர்கள். அதன் வழியாகக் குளுகுளு என்று குளிர்ந்த காற்று வீச ஆரம்பித்து விட்டது. அந்தக் காற்று பட்ட இடமெல்லாம் அப்படியே உணர்ச்சி அற்றுப் போய் விட்டது. இமயமலைச் சிகரங்களுக்கு மேலே வீசுகின்ற காற்றல்லவா! அதனால்தான் அத்தனை குளிர். சட்டென்று ஜன்னலை மூடி விட்டோம்.

இப்போது ஏராளமான மேகக் கூட்டங்கள் படிப் படியாக விமானத்துக்குக் கீழே மிதந்து சென்றதைப் பார்த்துப் பத்திரிகையாளர்கள் மெய்மறந்து போனார்கள். ஆகா! அதன் அழகை எப்படி வர்ணிப்பேன்! இப்போது விமானம் பன்னிரண்டாயிரம் அடிக்கும் மேலே வானவீதியில் பவனி செல்ல ஆரம்பித்து விட்டது. இமய மலையின் தோற்றம் மாறிவிட்டது. இதுவரை இமயமலையில் தெரிந்து வந்த தேவதாரு மரக்காடுகளும், சீடைமரக் காடுகளும் இப்போது அடியோடு மறைந்து விட்டன. இமய மலையில் எங்கு பார்த்தாலும் பனி மூடியிருக்கிறது. வெள்ளிப் பனி மூடிய பீர்பஞ்சால் சிகரத்துக்கும் மேலே விமானம் சென்று விட்டது.

இமயமலையின் அழகை, பீர்பஞ்சால் சிகரத்தின் எழிலைக் கண்கொட்டாமல் திறந்த வாய் மூடாமல் பத்திரிகையாளர்கள் பார்க்கத் தொடங்கி விட்டனர். அடாடா! பனி மூடிய இமயமலையின் சிகரத்துக்கு மேலே பறக்கிறோம் என்பதை நினைத்தபோது பத்



காஷ்மீரத்தின் தலைநகரம்



திரிகையாளர்களுக்கு ஒன்றுமே பிடிபடவில்லை. எல்லாரும் தங்கள் இடங்களை விட்டு எழுந்தார்கள். தங்களை மறந்து எதை எதையோ பாட ஆரம்பித்து விட்டார்கள். எங்களுடன் வந்த பத்திரிகையாளர்களில் ஒருவர் "இதன் வழியாக இலங்காபுரி மன்னன் ராவணன் சென்றபோது சாம வேதத்தைப் பாடினானாம். நானும் பாடப் போகிறேன்" என்று சாம வேதத்தைக் கணீரென்ற பெரிய குரலில் உற்சாகமாகப் பாட ஆரம்பித்தார்.

விமானத்தின் சத்தம் அவருடைய கம்பீரமான குரலுக்குச் சுருதி கூட்டியது போலிருந்தது. அவர் பாடிய பாடலின் பொருள் தெரியவில்லை. ஆனாலும் அந்த சாம கானத்தில் இருந்த வர்ணிக்க முடியாத இனிமையும் சுகமும் மனத்தைக் கவர்ந்து இழுத்தன. ராவணனுடைய சாம கானத்தைக் கேட்டுப் பரமேசுவரன் மயங்கிப் பிரத்தியட்சமானதில் வியப்பொன்றுமில்லை!

இதற்குள்ளாகச் சில உற்சாகிகள் தாங்கள் இருந்த இடத்தை விட்டு விமான ஓட்டியின் அறைக்குள்ளேயே சென்று விட்டார்கள்.





விமான ஓட்டியின் அறையிலிருந்து இரு புறத்தையும் பார்த்தால் கண்ணுக்கு எட்டிய தூரம் வரையில் பார்க்கும் இடமெல்லாம் இமயமலையின் எழில் மிக்க சிகரங்கள் காட்சி யளித்தன. வெள்ளிப் பனிமலையின் அழகைப் பரிபூரணமாகப் பார்த்து அனுபவிக்க முடிந்தது. பனி மூடிய சிகரங்கள் சில இடங்களில் உருகிச் சிறு சிறு அருவிகளாகப் பெருகி ஓடும் அழகைப் பார்ப்பதற்குப் பதினாயிரம் என்ன, நூறாயிரம் கண்கள் வேண்டும்! அவை அப்படி உருகிப் பெருகி ஓடியதற்கு பத்திரிகையாள நண்பரின் சாம கானம்தான் காரணமா யிருக்க வேண்டும்.

என்ன ஆச்சரியம்! இமயமலையின் அழகு திடீர் திடீர் என்று மாறுகிறது. ஆமாம், இரு நூறு மைல் வேகத்தில் வானத்தில் பறக்கும் விமானம் கணத்துக்குக் கணம் இமய மலைப் பகுதியில் எத்தனையோ மைல்களுக்கு அப்பால் சென்று கொண்டல்லவா இருக்கிறது! நாம் இதுவரையில் பார்த்த பனி மூடிய சிகரங்கள் எங்கே! விமானம் மீண்டும் மேக மண்டலத்தில் அல்லவா சிக்கிக் கொண்டது. விமானம் மேக மண்டலத்தை விட்டுக் கீழே அல்லவா இறங்குகிறது. ஆமாம்! இப்பொழுது விமானம் கீழே பூமண்டலத்தை நோக்கி வேகமாக இறங்கிக் கொண்டிருக்கிறது என்பதைத் தெரிந்து கொள்ள முடிகிறது.

இமய மலையின் பனி மூடிய இடங்கள் மறைந்து விட்டன! மலையில் பச்சைப் பசேல் என்று காடுகள் தெரிகின்றன. ஆ! இப்போது விமானம் காஷ்மீரத்தில் பறக்கிறது! பூமிதேவியின் என்றும் இளமையான உருவை இங்கே காண முடிகிறது. பூமித் தாய் இந்த இடத்தில்தான் தன் நிறமும் ஒளியும் குன்றாமல் அழகுடன் திகழ்கிறாள். வயல் வெளிகள் பாத்தி பாத்தியாகத் தெரிகின்றன. அதன் தண்ணீரில் சூரியனின் பொற் கிரணங்கள் பட்டு எத்தனை எத்தனையோ ஜால வித்தைகள் காட்டுகின்றன. வைரங்களும் வைடூரியங்களும் பாளம் பாளங்களாக மின்னுகின்றனவோ என்று நினைக்கத்தோன்றுகிறது. அன்னபூரணி அமரும் பொற் பீடம் போல், வானவிளிம்பு வரை பசும் கதிர்கள் ஆடும் வயற்பரப்பு. பொன்னிறக் கதிர்கள் சாய்ந்து கிடக்கும் கோதுமைப் பயிர்கள். சீடமரக் காடுகள், செனார் மரத் தோப்புகள், தேவதாரு மரக் கூட்டங்கள் இவைகளோடு பலப்பல வண்ண மலர்கள் குலுங்கும் சோலையுள் தோன்றும் அழகு மிக்க கிராமங்கள், இவைகளுக்கு நடுவே வளைந்து வளைந்து செல்லும் ஆறுகள்.

மலையிலிருந்து பச்சைப் பசேலென்று மரகத ஆறுகள் ஓடுவது போல் இருந்தது இமயமலையில் வளர்ந்திருந்த மரங்கள். மயில்கண் கரை போட்ட வேஷ்டிகள் போல, போம்பினார் மரங்கள் இருபுறமும் வரிசை வரிசையாக வளர்ந்துள்ள அழகழகான சாலைகள். கங்கை நதியோ என்று வியக்கும் வண்ணம் கம்பீரமாக ஓடும் ஜீலம் நதி. சின்னச் சின்னத் தீவுகள் நிறைந்த சமுத்திரத்தைப் போன்ற தால் தடாகம், நெருக்கமான பெரிய கட்டடங்களையுடைய ஸ்ரீநகரம்—காஷ்மீரத்தின் தலைநகரம்—இவைகள் எல்லாம் சேர்ந்து ஏதோ மாயாபுரிபோல நம்மை மயக்குகின்றன.

என்ன, இந்த இன்பக் காட்சி யெல்லாம் மறைகிறதே! நல்லவை எல்லாமே இப்படித் தானோ! திடீர் என்று தோன்றி மறைந்து விடுமோ! இந்தச் சமயத்தில் விமான ஓட்டி ஏதோ சொல்கிறார். "எல்லாரும் அவரவர்கள் இடத்தில் அமர்ந்து 'பெல்ட்'டைப் போட்டுக் கொள்ளுங்கள். விமானம் தரையில் இறங்கப் போகிறது" என்று பத்திரிகையாளரைக் கேட்டுக் கொள்கிறார். அப்பொழுதுதான் விமானம் பூமிக்கு வெகு அருகில் வந்துவிட்டது என்பதைத் தெரிந்து கொள்ள முடிந்தது.

பத்திரிகையாளர்கள் தங்கள் ஆசனத்தில் அமர்ந்து இடுப்புப் பட்டையைப் போட்டுக் கொள்கிறார்கள். விமானம் பூமியில் இறங்கி நிற்கிறது. விமானம் வான வீதியில் பன்னிரண்டாயிரம் அடிக்கு மேலே உயர்ந்து பறந்ததும் பூமியில் இறங்கி நின்றதும் தெரியாமல் விமானத்தை ஓட்டி வந்த விங் கமாண்டர் ஜோஷியை எவ்வளவு பாராட்டினாலும் தகும்.

ஸ்ரீநகரம் விமான நிலையத்தில் ஜம்மூ—காஷ்மீர் சர்க்கார் பிரதிநிதிகளும், காஷ்மீர் பத்திரிகையாளர்களும், காஷ்மீரில் உள்ள இந்திய சர்க்கார் பொதுஜன உறவு அதிகாரிகளும் அகில இந்தியப் பத்திரிகையாளர்களை அகமும் முகமும் மலரக் கைகூப்பி வணங்கி வரவேற்றார்கள். பத்திரிகையாளர்களின் கைகளைப் பற்றிக் குலுக்கி ஒவ்வொருவராக அறிமுகம் செய்து கொண்டார்கள்.

காஷ்மீரம் காஷ்மீரம்தான்! அடாடா! என்ன குளிர்ச்சி! என்ன குளிர்ச்சி! பூலோக சொர்க்கமாகிய காஷ்மீரத்தில் கால் அடி எடுத்து வைத்தவுடன் அருகிலிருந்த பத்திரிகையாளர், "என்ன ஸார்! இந்த இடத்தில் ஒற்றையாகச் செல்லவேண்டியிருக்கிறதே! இங்கல்லவா மனைவியை உடன் அழைத்து வரவேண்டும்" என்று தம் மனைவியைப் பற்றி நினைத்துக் கொண்டார். ஆமாம், அவர் நினைத்ததில் ஒன்றும் வியப்பில்லை. அந்த பூமி, அது இருக்கும் அழகு, சுற்றிலும் உள்ள சூழ்நிலை, சுகமான குளிர்ச்சி எல்லாமாகச் சேர்ந்து வீட்டில் விட்டு வந்திருக்கும் அன்பு மனைவியை, காதல் தெய்வத்தை, பத்தினிப் பெண்ணை நினைத்துக் கொள்ளாமல் இருக்க முடியாது. காலமெல்லாம் ஒற்றுமை யில்லாமல் வாழ்ந்து வரும் தம்பதிகளை ஒரு முறை காஷ்மீரத்துக்கு அனுப்பி வைத்தால் போதும். அவர்கள் கருத்தொருமித்த காதல் தம்பதிகளாக, ஈருடலும் ஓருயிருமாகத் திரும்பி வந்து விடுவார்கள் என்பதில் சந்தேகமில்லை.

அதோ ஜம்மூ-காஷ்மீர் சர்க்கார் பஸ் காத்துக் கொண்டிருக்கிறது. அதில் ஏறிக்கொண்டு தால் தடாகத்தில் உள்ள புகழ் பெற்ற படகு வீடுகளில் தங்குவதற்குச் செல்வோம்.

படகு வீடுகள்

பத்திரிகையாளர்களை ஏற்றிக் கொண்டு பஸ் படகு வீடுகளை நோக்கிச் சென்றது. விமான நிலையத்திலிருந்து ஸ்ரீநகரம் ஆறு மைல். ஆறு மைல் தூரமும் கண்ணுக்கு இனிமையான காட்சிகள். சாலையின் இருபுறமும் ஆப்பிள் தோப்புகள். இலைகளே தெரியாமல் ஆப்பிள்



ஜம்மு-காஷ்மீர் ராஜபிரமுக் சதர் இரியாசத் கரன்சிங் அவர்கள் அகில இந்தியப் பத்திரிகையாளர்களுக்குத் தம்முடைய அரமனையில் ஒரு சிற்றுண்டி விருந்தளித்தார். விருந்து முடிந்த பிறகு பத்திரிகையாளர்களுடன் சேர்ந்து நின்று படம் பிடித்துக் கொண்டார். நடுவில் கைகளைக் கட்டிக் கொண்டு கம்பீரமாக நிற்பவர்தான் ராஜபிரமுக் கரன்சிங். பின்னால் இமயமலையின் காட்சிகளையும் பார்க்க முடியாத பாரிஜாத மரத்தையும் பாருங்கள்.

காய்கள் குலுங்கிக் கொண்டிருந்தன. ஜூன் மாதம் ஆப்பிள் பழம் உள்ள காலம் இல்லை. ஆகையால் ஆப்பிள் மரங்களில் பச்சைப் பசேல் என்று ஆப்பிள் காய்கள் மரம் தெரியாமல் குலுங்கிக் கொண்டிருந்தன. இன்னும் என்னென்னவோ விதம் விதமான மலர் குலுங்கும் செடிகள். சாலையின் இருபுறம் பாம்பிளார் மரங்கள் வானோங்கி நின்றன. சாலையைப் பார்த்தால் பார்த்துக் கொண்டே இருக்கலாம். அவ்வளவு மனோரம்மியமான காட்சி.

ஸ்ரீநகரத்தில் படகு வீடுகள் பல இடங்களில் இருக்கின்றன. தால் தடாகத்தில், ஜீலம் நதியில் இருக்கின்றன. பத்திரிகையாளர்களுக்கு ஏற்பாடு செய்திருந்த படகு வீடுகள் சங்கராச்சாரியார் குன்றுக்கு அடிவாரத்தில் உள்ள காங்ரிபல் என்ற இடத்தில் உள்ளவை. இந்த இடம் வந்தவுடன் பஸ் நின்றது. பத்திரிகையாளர்கள் பஸ்ஸிலிருந்து இறங்கினார்கள்.

தால்தடாகத்துக்கும் சங்கராச்சாரியார் மலை அடிவாரத்துக்கும் இடையில் அழகான சிமெண்ட் சாலை போட்டிருக்கிறார்கள். அந்தச் சாலையில் பலப்பல பூங்காக்கள் கண்ணைக் கவர்கின்றன. காதலர்கள் பூங்கா, நேரு பூங்கா இரண்டும் மிகப் பிரசித்தமானவை. பழைய காஷ்மீர் மகாராஜா ஹரிசிங்கின் அரமனையில் நடைபெறும் நவீன வசதிகள் படைத்த ஹோட்டலும் இங்குதான் இருக்கிறது.

காங்ரிபல்லில் இருந்து படகு வீடுகளுக்குச் செல்லுவதற்காகத் தால் தடாகப் படிகளில் இறங்கினோம். அங்கு தயாராக இருந்த ஷிகாரிகள்,—அதாவது சிறு படகுகள், பத்திரிகையாளர்களை ஏற்றிக் கொண்டு படகு வீடுகளை நோக்கி கிளம்பிற்று.

படகு வீடுகள் ஒவ்வொன்றுக்கும் ஒரு ஷிகாரியும், ஒரு சமையல் படகு வீடும் உண்டு. சமையல் படகு வீடு, படகு வீட்டுக்குப் பின்னால் நிறுத்தப்பட்டிருக்கிறது. இதில் படகின் சொந்தக்காரரும் அவருடைய குடும்பமும் வசித்து வருகிறார்கள்.

இவர்கள்தான் படகு வீட்டில் தங்கும் யாத்திரிகர்களுக்கு வேண்டிய ஆகாரங்களைத் தயார் செய்து கொடுப்பவர்கள். படகுவீட்டின் மொத்த வாடகையில் நம்முடைய சாப்பாட்டுச் செலவும் சேர்ந்ததுதான்.

ஷிகாரி ஒரு சிறிய உல்லாசப் படகு. ஒரு ஆள் சுலபமாகத் துடுப்பைக் கொண்டே தள்ளிக்கொண்டு செல்லலாம். ஷிகாரியில் மூன்று ஸ்பிரிங் மெத்தைகள் உள்ள ஆசனங்கள் பொருத்தப்பட்டிருக்கின்றன. மெத்தைகள் மீது காஷ்மீரின் பிரசித்தி பெற்ற வேலைப்பாடுகள் நிறைந்த கம்பளங்களை விரித்துப் போட்டிருக்கிறார்கள். இந்த ஆசனங்களுக்கு மேலே அழகு நிறைந்த கூடாரம் அமைந்திருக்கிறது. அடாடா! அந்தக் கூடாரத்தில்தான் எத்தனை சித்திர விசித்திரங்கள்!

தால் தடாகம் சமுத்திரம் போன்று மிகப் பெரிதாக இருந்தாலும் அதில் அலைகளே கிடையா. அதனால் ஷிகாரிப் படகின் ஓரங்கள் தண்ணீர் மட்டத்துக்குச் சரியாக அதிகம் உயரமில்லாமல் இருக்கிறது. அந்தச் சின்ன விளிம்பில் தெரியும் மரத்தில் அற்புதமான முறையில் பலவிதமான வேலைப்பாடுகள் செய்திருக்கிறார்கள். படகில் உட்கார்ந்த வண்ணம் தண்ணீரில் கை வைத்துக் கொண்டு செல்லலாம். இந்த ஷிகாரியில் உட்கார்ந்தவுடனேயே நாம் நம்மை அறியாமல் மகாராஜாக்களாக மாறிவிடுவோம். அப்படி ஒரு மயக்கத்தைக் கொடுக்கும்படி இருக்கிறது ஷிகாரியின் அமைப்பு. இதில் சுமார் ஆறு பேர் சுகமாகப் பிரயாணம் செய்யலாம். படகு வீட்டை வாட

கைக்கு எடுக்கும்போது அத்துடன் ஒரு ஷிகாரியும் சேர்த்து எடுத்துக் கொள்ள வேணும்.

படகு வீடுகளுக்கு இன்ஜின் கிடையாது. ஆனால் அதைத் தடாகத்தில் ஒரு இடத்திலிருந்து இன்னொரு இடத்துக்குக் கொண்டு போகலாம். நீளமான குச்சிகளைத் தடாகத்தின் ஆழத்தில் உள்ள தரையில் படும்படி குத்தி அதைக் கொண்டு உந்தித் தள்ளிச் செல்ல வேண்டியதுதான். படகு வீடுகளை அழகு நிறைந்த உல்லாசமான ஒரு சிறு அரமனை என்றுதான் கூற வேண்டும்.

நாம் ஏறியிருந்த ஷிகாரி இப்போது படகு வீட்டை நெருங்கி விட்டது. இதோ படகோட்டி ஷிகாரியைப் படகு வீட்டின் வாசல் படிக்கு அருகில் கொண்டு நிறுத்தி விட்டார். ஷிகாரியில் இருந்து எந்தவித இடைஞ்சலும் இல்லாமல் படகு வீட்டுக்குள் செல்லலாம்.

படகு வீட்டுப் படிகளில் கால் வைக்கும்போதே ஏதோ ஒரு விதமான இன்ப மயக்க உணர்ச்சி ஏற்படுகிறது. அந்தப் படகு வீட்டின் வாசல்படிகளில் இருபுறமும் அழகழகான மலர் குலுங்கும் பூந்தொட்டிகளை வைத்து நம்மை எங்கோ வேறு உலகத்துக்குக் கொண்டு சென்று விடுகிறார்கள். இந்த அழகை அனுபவித்துக் கொண்டே உள்ளே சென்றால் ஏதோ பெரிய மாளிகைக்குள் நுழைந்து விட்டது போன்ற பிரமை ஏற்படுகிறது. விலையுயர்ந்த சோபாக்களும் வேலைப்பாடுகள் நிறைந்த நாற்காலிகளும் நிறைந்த அழகான கூடம். கூடத்துக்கு அடியில் ரத்தினக் கம்பளம் விரித்திருக்கிறது. அதில் காலை வைப்பதற்கே கூச்சமாக இருக்கிறது. அத்தனை உயர்ந்த கம்பளம். இந்தக் கூடத்தின் சுவர்களிலே மலர்க் கொத்துகளை வைத்து அலங்காரம் செய்திருக்கிறார்கள். காஷ்மீரத்தின் வனப்பு மிக்க காட்சிகளின் வண்ண ஓவியப் படங்கள் நம் கவனத்தைக் கவருகின்றன. இந்த அலங்காரமான விருந்தினர் கூடத்தைத் தாண்டி உள்ளே பிரவேசித்தால் இன்னொரு கூடம்.

இது சாப்பாட்டுக் கூடம். சாப்பாட்டு மேஜையும் அதைச் சுற்றி நாற்காலிகளும் போடப்பட்டிருக்கின்றன. இந்தக் கூடத்துக்குப் பின்னால் சாப்பாடுகளை வைக்கும் அறை. இந்த அறையிலிருந்துதான் படகு வீட்டின் மாடிக்குச் செல்லும் படிகள் இருக்கின்றன.

ஆமாம்; படகு வீட்டுக்கு மாடியும் இருக்கிறது. மாடியில் உட்காருவதற்கு வசதியாக பல நாற்காலிகள் இருக்கின்றன. மேலே கதைகளிலே காவியங்களிலே வர்ணிக்கக் கூடிய அழகுமிக்க கூடாரம். படகு வீட்டின் மாடி இருக்கட்டும், சாப்பாட்டு அறையைத் தாண்டிப் படகு வீட்டுக்கு உள்ளே செல்வோம்.

சாப்பாட்டு அறைக்குப் பின்னால் மூன்று தனித்தனி படுக்கை அறைகள் இருக்கின்றன. இந்தப் படுக்கை அறைகளுக்கு முன்னால் மூன்று அறைகளுக்குப் பொதுவாக ஒரு வராந்தா. இந்த வராந்தாவிலும் ரத்தினக் கம்பளம் விரித்துக் கிடக்கிறது. இதில் நடப்பதற்குச் சுகமாக இருக்கிறது.

ஒவ்வொரு படுக்கை அறையிலும் அதன் உள்ளேயே குளிக்கும் அறை, 'பிளஷ் அவுட்' என்னும் சுகாதார வசதியுடன் கூடிய அறை எல்லாம் இருக்கின்றன. படுக்கை அறையில் இரண்டு ஸ்பிரிங் கட்டில்கள் இருக்கின்றன. ஒவ்வொரு கட்டிலும் நவீன வசதிகளுடன் கூடிய அற்புதமான ரப்பர் மெத்தை பொருத்தப்பட்டது. அதன்மீது காஷ்மீர் கம்பளங்கள் விரித்து வைக்கப்பட்டிருக்கின்றன. இதைத் தவிர ஒரு மேஜை, இரண்டு நாற்காலிகள், ஆடைஅணிகள் வைத்துக் கொள்ளும் அலமாரிகள், அலங்காரம் செய்துகொள்வதற்கு வேண்டிய தளவாடங்களுடன் கூடிய பெரிய கண்ணாடியுள்ள மேஜை எல்லாம் இருக்கின்றன.

படகு வீடுகளில் மின்சார வசதியும் இருக்கிறது. இதனால் சில படகு வீடுகளில் ரேடியோக்களும் இருக்கின்றன. தால் தடாகக் கரையோரமாக உள்ள மின்சாரக் கம்பங்களில் இருந்து ஒவ்வொரு படகு வீட்டுக்கும் மின்சாரம் வழங்க ஏற்பாடு செய்திருக்கிறார்கள்.

காஷ்மீரத்தில் கோடை காலத்திலும் கூட ஈக்கள் அதிகம். படகு வீடுகளுக்குள் ஈக்கள் நுழைந்து தொந்தரவு கொடுக்காமல் இருப்பதற்காக எல்லா ஜன்னல்களிலும் ஈ வலைகள் பொருத்தப்பட்டிருக்கின்றன.

தேவதாரு மரத்தால் செய்யப்பட்ட இந்தப் படகு வீடுகள் ஒவ்வொன்றும் சுமார் ஐம்பதினாயிரம் ரூபாய் விலை மதிப்புள்ளவை. ஒரு நாளைக்கு எண்பது ரூபாய் வாடகை. இந்த வாடகை அந்தப் படகு வீட்டில் தங்கும் ஐந்து பேருடைய சாப்பாட்டுச் செலவையும் சேர்த்தது தான். வருஷத்தில் மூன்று நான்கு மாதங்கள்தான் படகு வீடுகளை வாடகைக்கு விட முடிகிறது என்பதைப் பார்த்தால் வாடகைஒன்றும் அதிகமென்று கூறமுடியாது.

தமிழ் நாட்டைப் போலவே நல்ல சாப்பாடு காஷ்மீரத்தில் கிடைக்கிறது. செர்ரி, பிளம்ப், பீச் முதலிய சுவையுள்ள இனிய பழங்கள் தாராளமாகக் கிடைக்கின்றன. பசுமையான காய்கறிகளுக்குப் பஞ்சமே இல்லை.

இந்தப் படகு வீடுகள் எப்பொழுதிலிருந்து காஷ்மீரத்தில் இருந்து வருகின்றன! யார் இது போன்ற படகு வீட்டை முதன் முதலில் கட்டினார்கள் என்பதை நேயர்கள் தெரிந்து கொள்ள வேண்டாமா!

படகு வீட்டின் சரித்திரம்

தால் தடாகத்தில் படகு வீடுகள் உல்லாசமாக மிதந்து செல்லவும், தால் தடாகத்தின் மத்தியில் உள்ள செயற்கைத் தீவுகளுக்கு மத்தியில் நிற்கவும் ஆரம்பித்து எழுபது ஆண்டுகள்தான் ஆகின்றன. ஆயிரத்து எண்ணூற்று எண்பத்தெட்டாம் ஆண்டு எம். டி. கென்னர்ட் என்ற ஆங்கிலேயர் முதல் முதலில் தால் தடாகத்தில் படகு வீட்டைக் கட்டி இறக்கி அதில் உல்லாசமாகக் காலம் கழித்தார். அதைப் பார்த்த பணம் படைத்த பெரிய மனிதர்கள் எல்லாம் தாங்களும் படகு வீடு கட்டித் தால் தடாகத்திலும், ஜீலம் நதியிலும் உல்லாசமாகக் கோடை காலத்தைக் கழிக்க ஆரம்பித்தனர்.

இப்படிப்பட்ட படகு வீடுகளைக் கட்டி ஏன் வாடகைக்கு விட்டுப் பணம் சம்பாதிக்கக்

கூடாது என்று நினைத்தார் ஒரு காஷ்மீர்வாசி. உடனே அதைக் காரியத்தில் நிறைவேற்றி வெற்றி பெற்றார் நாராயணதாஸ் என்னும் அந்தக் காஷ்மீர்வாசி. அவருக்குப் பிறகு எத்தனையோ பேர் படகு வீடுகள் கட்டிக் காஷ்மீருக்கு உல்லாசப் பிரயாணம் வரும் யாத்திரிகர்களிடம் வாடகைக்கு விட்டுப் பணம் சம்பாதிக்க ஆரம்பித்தனர். இன்று ஸ்ரீநகரில் படகு வீடுகள் வாடகைக்கு விட்டுப் பொருள் திரட்டுவது பெரிய தொழிலாக இருந்து வருகிறது.

காஷ்மீர் மீது பாகிஸ்தான் படையெடுப்பதற்கு முன்னால் சுமார் ஆயிரத்துக்கும் அதிகமான படகு வீடுகள் இருந்தன. இன்று சுமார் மூந்நூறு படகு வீடுகள்தான் இருக்கின்றன. அதிலும் நல்ல வருமானம் வருவதில்லை என்று அதன் சொந்தக்காரர்கள் முறை விட்டுக் கொண்டிருக்கின்றனர். யுத்தத்தின் போதும், அதற்குப் பிறகும் காஷ்மீரத்தில் ஏற்பட்டுள்ள அமைதியற்ற சூழ்நிலையில் வெளியூரிலிருந்து காஷ்மீரத்துக்கு வரும் உல்லாச யாத்திரிகர்களின் தொகை குறைந்து விட்டது. இதனால் படகு வீடுகளை நல்ல முறையில் காப்பாற்ற முடியாத அதன் சொந்தக்காரர்கள் படகுகளை உடைத்து எரித்து விட்டனர்.

படகு வீடுகளில் 'பிளஷ் அவுட்' என்னும் சுகாதார வசதியையும், மின்சார வசதியையும் செய்வதற்காக இப்பொழுது காஷ்மீரத்தில் உள்ள பக்ஷி குலாம் சர்க்கார் ஒன்றரை லட்சம் ரூபாய் படகு வீட்டுச் சொந்தக்காரர்களுக்குக் கொடுத்துப் படகு வீடுகளை எல்லா வித நவீன வசதிகளும் பொருந்தியதாக மாற்ற வசதி செய்திருக்கிறார்கள். இந்தப் படகு வீடுகளின் மூலமாக ஸ்ரீநகரில் சுமார் ஏழாயிரம் பேர் பிழைத்து வருகிறார்கள் என்று அறிந்தோம். இந்த அருமையான தொழிலுக்குப் பக்ஷி குலாம் சர்க்கார் பல வழிகளிலும் உதவி செய்து வருகிறார்கள்.

ஒரு படகு வீடு சுமார் எண்பதடி நீளமும், இருபத்தைந்து அடி அகலமும் உடையதாக இருக்கிறது. தால் தடாகத்தின் மத்தியில் சிறுசிறு செயற்கைத் தீவுகளைச் செய்து அதன் கரையில் படகு வீடுகளை நிறுத்தி வைத்திருக்கிறார்கள். அங்கிருந்து தண்ணீரில் காற்றடிக்கும் பக்கத்தில் மிதந்து சென்றுவிட முடியாதபடி படகு வீடுகளைத் தீவில் உள்ள பெரிய மூலைகளில் கட்டி வைத்திருக்கின்றனர். இந்தத் தீவில் ஏராளமான வில்வ மரங்கள் இருக்கின்றன. இந்தத் தீவுகளில் படகைக் கட்டி வைப்பதற்குத் தீவின் சொந்தக்காரர்களுக்கு நாள் ஒன்றுக்கு ஒரு ரூபாய் படகுக்காரர் வாடகையாகக் கொடுக்க வேண்டும்.

தால் தடாகத்தின் தண்ணீரைக் குளிப்பதற்கு மட்டும் எடுத்துக் கொள்கிறார்கள். சமையலுக்கும் குடிப்பதற்கும் வேறு தண்ணீரை உபயோகப் படுத்துகிறார்கள்.

தால் தடாகத்தின் மத்தியில் அமைந்துள்ள சிறு சிறு தீவுகளுக்கு மத்தியில் படகு வீடுகள் வரிசையாக நிற்கும் காட்சியைப் பார்த்துக் கொண்டே யிருக்கலாம். ஒவ்வொரு படகு வீடும் ஒரு புது மாதிரியான எழிலுடனும், வண்ண அலங்காரத்துடனும் காட்சி அளிக்கிறது. அதனுடைய நிழல்கள் தால் தடாகத் தண்ணீரில் பிரதிபலிக்கின்றன. இரண்டுமாகச் சேர்ந்து ஏதோ ஒரு அதிசய உலகத்துக்கு நம்மை அழைத்துச் சென்று விடுகின்றன. தால் தடாகத்தில் உள்ள படகு வீடுகளில் தங்கி இருக்கும்போது ஏற்படும் மன அமைதியையும், இனந் தெரியாத இன்பத்தையும் எப்படி வார்த்தைகளில் எடுத்துக் கூற முடியும்! அந்தப் படகு வீடுகளில் சில நாட்களாவது தங்கித்தான் அந்த இன்பத்தை அனுபவித்து மகிழ வேண்டும்.

** ** **

படகு வீட்டில் ஒரு நாள் பொழுது எப்படிப் போகிறது என்பதையும், காஷ்மீரத்தின் இன்னும் சில காட்சிகளையும் அடுத்த இதழில் காணலாம். நேயர்களுக்கு ஒரு வார்த்தை. சென்ற எட்டு மாதங்களாக வட இந்தியாவில் உள்ள அபாயமான இடங்களிலும் எதிர்கால இந்தியாவை உருவாக்கும் பல அற்புதங்கள் நிகழ்ந்து வரும் இடங்களிலும் யாத்திரை செய்து மிகவும் களைத்துப் போயிருக்கிறீர்கள். அதனால் உங்களை மேலும் கஷ்டப்படுத்த விரும்பவில்லை. காஷ்மீரத்தில் குறிப்பிட்ட ஒரு சில இடங்களை மட்டும் பார்த்துவிட்டு நம்முடைய வட இந்திய யாத்திரையை முடித்துக் கொள்ளலாம். பிறகு சாவகாசமாகக் காஷ்மீரத்தின் மூலை முடுக்குகளுக்கெல்லாம் சென்று அதன் காவிய அழகைக் கண்டு அனுபவிப்போம். (அடுத்த இதழில் முடியும்)

ஆலப்புழை **A. V. தாமஸ் & கம்பெனி**யில் என்ஜினியராக வேலை செய்து வரும் ஸ்ரீ C. E. A. எட்வர்ட்ஸ் அவர்களின் சகோதரரும் கோலகங்ஸார், பெராக், மலாயா உதவி சூப்பரின்டென்ட்டென்ட் ஆப் போலீஸுமான ஸ்ரீ C. M. ராபர்ட்ஸ் அவர்களின் புதல்வி **சிந்தியா மேரி கோல்ட் செல்வத்திற்கும்**, சென்னை அரசாங்க மின்சார இலாகா ஜூனியர் என்ஜினியர் **இல்பர்ட் தாசன்** B. E. அவர்களுக்கும் திருநெல்வேலி யிலுள்ள "சொர்ண வில்லா"வில் 13-2-1956 அன்று திருமணம் சிறப்பாக நடந்தேறியது. **வாழ்க மணமக்கள்!**





ஆசை

காந்தன்

உலகத்தில் ஆசையில்லாத ஆத்மாவே இல்லை என்று கூறலாம். ஒவ்வொருவருக்கும் ஒரு ஆசை. படாதிபதிகளுக்கு நல்ல படங்களாக எடுத்துப் பண வசூலைக் குவிக்க வேண்டுமென்று ஆசை. படம் பார்ப்பவர்களுக்கு நல்ல படங்களாகப் பார்க்க வேண்டுமென்று ஆசை. திரைப்படக் கதாசிரியர்களுக்குத் தீந்தமிழில் வசனம் தீட்டி எல்லாரையும் திகைக்க வைக்க வேண்டுமென்று ஆசை. எனக்கும் நல்ல படங்களைப் பார்த்து நல்ல விமரிசனங்களாக எழுத வேண்டும் என்று ஆசை.

ஆனால் நாம் ஆசைப்பட்டு என்ன பயன்! ஆசைப்படுகிறபடி உலகில் எல்லாம் நடந்துவிட்டால் அப்புறம் என்ன இருக்கிறது!

ஜமீன்தார் சதானந்தத்துக்குத் தன் ஆசை மகள் செல்வி அறச் செல்வியாக வாழ வேண்டுமென்று ஆசை. அவர் மனைவி அஞ்சுகத்துக்குத் தன் மகள் செல்வியைத் தன் அண்ணன் மகனுக்கே கொடுத்து அவர்கள் இருவரையும் தன்னுடனேயே வைத்துக் கொள்ள வேண்டும் என்று ஆசை. சதானந்தத்தின் தங்கை அமிர்தத்துக்குத் தன் அண்ணன் மகள் செல்வியைத் தன் மகன் சேகருக்கு மணம் செய்து வைக்க ஆசை. இத்தனை பேர்களுடைய ஆசையும், செல்வி நாலு வயதுச் சிறுமியாயிருக்கும் போது எழுகிறது.

ஒரு நாள் செல்வி, எல்லாருடைய ஆசையிலும் மண்ணைப் போட்டு நிராசையாக்கி விட்டு மறைந்து விடுகிறாள். பன்னிரண்டு ஆண்டுகள் பறந்து செல்லுகின்றன. செல்வி, சுந்தரி என்ற பெயருடன் ஜிப்ஸிக் கூட்டத்துடன் வாழ்ந்து வருகிறாள். தெருவில் நடனமாடும்போது சுந்தரியைப் பார்க்கிறான் சேகர் —இருவருக்கும் தவிர்க்க முடியாத காதல் ஏற்படுகிறது. காதல் ஏற்பட்டதும் அது நிறைவேறுவதில் கஷ்டம் ஏற்படுகிறது. கஷ்டத்தோடு நின்றிருந்தால் பாதகமில்லை. போர், புயல், கொலை எல்லாம் நிகழ்கின்றன. சேகர் இழிகுலப் பெண்ணைக் காதலிக்கிறான் என்பதையறிந்த அவன் தகப்பனார் விசுவரூபமெடுத்து அதைக் கண்டிக்கிறார். மகனை உள்ளே தள்ளிப் பூட்டி, சுந்தரியை வெளியேற்றுகிறார். பிறகு பிரிந்த காதலர்களின் கண்ணீரும் கம்பலையும் எல்லாரையும் கலங்க வைக்கின்றன.

சேகரின் தந்தையாக நடிக்கும் டி. பாலசுப்ரமண்யம் சாதிப்பற்றுக் கொண்ட கண்டிப்பு சுபாவமுள்ள தந்தையாக நடித்து வழக்கம் போல் எல்லாரையும் விரட்டு விரட்டு என்று விரட்டுகிறார்.

ஜமீன்தார் சதானந்தமாக நடிக்கும் வி. நாகையா பின்னால் கஷ்டப்படப் போவதை அறிந்து முன்னாலெல்லாம் அலுங்காமல் நடிக்கிறார். மகனையும் மனைவியையும் இழந்து சொத்து சுகங்களையெல்லாம் தியாகம் செய்து நாட்டை விட்டு வெளியேறிக் காட்டு வழியில் ஆசிரமம் நிறுவிக் கொண்டு மகளைக் காணும்





ஒரே ஆசையுடன் வசிக்கிருர். ஆசை மகனை நேரில் கண்டபோது உண்மையறியாமலே பாசங் கொள்கிருர். சேகரையும் சுந்தரியையும் ஒன்று சேர்த்து வைக்க முயன்று, சேகரின் தந்தையிடம் அனுப்பி வைக்கிருர். கல் மனங் கொண்ட அந்த மனிதரின் கடின சுபாவம் காதலைக் கருகச் செய்கிறது; சேகருக்கும் சுந்தரிக்கும் பைத்தியம் பிடிக்கச் செய்கிறது.

கடைசியில் புயலும், மழையும், இடியும், மின்னலும் நல்ல சமயத்தில் தோன்றி, காதலர்களின் பைத்தியங்களைத் தெளிவித்துக் கல்யாணம் செய்து வைத்து, எல்லாருடைய ஆசையும் நிராசையாகி விடாமல் பாதுகாக்கின்றன.

சுந்தரியாக நடிக்கும் பத்மினி ஜிப்ஸி தோற்றங்களிலும், கடைசியாகப் பைத்தியமாகி நடனமாடிய போதும் நன்ருய் நடித்திருக்கிருர். ஜிப்ஸிக் கூட்டத் தலைவனின் காதலி வள்ளியாக நடித்த ராஜம் கலைாசனு திறமையோடு நடித்திருக்கிருர்.

சேகராக நடித்த ஜெமினி கணேசனின் நடிப்பு, அவருக்குப் பழகிப் போன காதல் கட்டங்களிலும், மற்றும் பைத்தியக்கார வேஷத்திலும் நன்கு சோபிக்கிறது.

சேகர் வீட்டு வேலைக்காரனுக வரும் என். எஸ். கிருஷ்ணன் சமயோசிதமான யோசனைகளைச் சொல்லிக் காதலுக்குத் துணை புரிவதுடன் படத்தின் ஹாஸ்யப் பகுதிக்கும் துணையாக இருக்கிருர்; அவர் சேகருடன் வளையற்காரனுகச் சென்று ஜிப்ஸிக் கூட்டத்தில் சுந்தரியைச் சந்திக்கும் கட்டம் பிரமாதம்

"சிவப்பு வளையல் கறுத்த கையில்
ஜிலு ஜிலுன்னு ஜொலிக்கும்
கருப்பு வளையல் செவத்த கையின்
மதிப்பை அதிகமாக்கும்......"

என்னும் வளையல் பாட்டு 'ணங் ணங்' என்று தாளத்தோடு நம் காதில் நன்கு ஒலிக்கிறது.

இந்தக் கட்டத்தில் ஒரு சந்தேக விளக்கம் பெற எனக்கு ஒரு ஆசை. சேகர், தான் கொண்டு வந்த பட்டை வளையலின் உட்புறம் தன் உள்ளக் கருத்தை எழுதிச் சுந்தரியிடம் லாகவமாகக் காட்டுகிருன். சுந்தரி புரிந்து கொள்கிருள். குழந்தைப் பிராயத்திலிருந்து ஜிப்ஸிகளோடு நாடோடி வாழ்க்கை வாழ்ந்த சுந்தரி கல்வி பயின்றது எப்போது! ஒருவேளை அவளது ஆசைக் காதலனைக் கண்ட கண்கள் விஷயத்தைப் புரிய வைத்தனவோ என்னவோ!

'கருத்துள்ள படங்களை அளிப்பதையே கருத்தாகக் கொண்ட' நடேஷ் ஆர்ட் பிக்சர்ஸார், இந்தப் படத்தின் கதையில் தங்கள் கவனத்தைச் சரியாகச் செலுத்தி யிருக்கலாம் என்று தெரிவித்துக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

"ஆசை" படத்தில், கதையின் நிகழ்ச்சிகளை இணைத்துப் பார்த்து முழுக் கதையையும் ரஸிக்க முடியாமல் இருப்பதற்குக் காரணம் அறிந்து கொள்ள எனக்கு ரொம்பவும் ஆசை.

என் நண்பர் ஒருவர் தாம் பார்த்த ஒரு "ஆசை"யையும் வெளியிட்டார். அதையும் கூறுகிறேன்.

"இந்தக் கதை ஒரு ஹிந்திப்படத்தின் தழுவல். தெரியுமா, ஸார்!" என்ருர்.

ஏன், உங்கள் ஆசையையும் என்னிடம் தெரிவியுங்களேன்!



பந்தமும் பாசமும்



எம். ரங்கநாயகி

லலிதாவும் புக்ககம் சென்ற பிறகு பார்வதிக்கு வீட்டில் இருப்பே கொள்ளவில்லை. உள்ளுக்கும் வாசலுக்கும் பத்துத் தடவைகள் நடந்து நடந்து, அலுத்துப் போய் விட்டாள். சாய்வு நாற்காலியில் உட்கார்ந்து சிவசர்மா கீதை புத்தகத்தை வைத்துப் படித்துக் கொண்டிருந்தார். அதில் அவர் மனம் முழுமையும் ஈடுபட்டு விட்டது.

பார்வதி மெதுவாக அவர் பக்கத்தில் வந்து உட்கார்ந்தாள். சர்மா புத்தகத்திலிருந்து கண்களை எடுத்தார். பார்வதியைப் பார்த்து ஒரு முறுவலுடன் "என்ன பார்வதி, உனக்கு ஒன்றுமே பிடிக்கவில்லையா? வீட்டில் ஒருவருமில்லாமல் உனக்குப் பொழுதைத் தள்ளுவது மகா கஷ்டமாச்சே?" என்றார்.

"ஆமாம், உங்களைப் போல் பாசம், பந்தம் எல்லாவற்றையும் உதறிவிட்டு இருக்க என்னால் முடியவில்லை. குழந்தை புக்ககம் போய் விட்டாள். அங்கு போய், நம்மை நினைத்து ஏங்கித் தவிக்காமல் இருக்கணுமே" என்றாள். பார்வதிக்குத் தொண்டையை அடைத்தது.

சிவசர்மா கேலிச் சிரிப்புடன் "நன்றாச் சொன்னே, பெண்களுக்குக் கணவன் வரும் வரைதான் அம்மா அப்பா பாசம். பிறகு நேற்று வந்த கணவன்தான் பிரதானம். அவனை விட்டு ஒரு நிமிஷம்கூடப் பிரிய மாட்டார்கள். குழந்தை பிறந்து விட்டால் பிறகு பாசம் முழுவதும் குழந்தைகள் மீதுதான். இப்ப நீயே சொல்லு, நம்ம குழந்தைகளிடம் இருக்கும் பாசம், உனக்கு இப்போ என் மீது இருக்கிறதா?" என்றார்.

"சரிதான் போங்கள். உங்களுக்கு எப்பவும் பரிகாசம்தான். மணி மணியாக நாலு குழந்தைகள் பிறந்திருக்கு. நாலும் நாலு மூலைக்குப் போய் விட்டதுகள். ஒன்றுகூட அருகில் கிடையாது" என்று ஏக்கத்துடன் பதிலளித்தாள் பார்வதி.

"எங்கிருந்தால் என்ன? உனக்கு ஒரு நிமிஷம் ஓய்வு ஒழிவு கிடையாது. வீட்டை விட்டு இரண்டு மாதம் வெளியே நகர முடிவதில்லை. நீயும் தானாகட்டும், எவ்வளவு நாட்களாக மதுரை மீனாக்ஷி அம்மனைத் தரிசிக்க வேணும்னு ஆசைப்படுகிறாய்? இன்னும் அது நிறைவேற வில்லையே?"

பெருமூச்சு விட்டாள் பார்வதி. "ம்... புருஷர்களைப் போல் பெண்களால் முடிகிறதா? வேலையிலிருந்து ரிடையர் ஆனதும் குடும்பம், வீடு ஒரு நினைவில்லாமல் நீங்கள் ஒரு க்ஷேத்திரம் பாக்கியில்லாமல் சுற்றி விட்டு வந்தீர்கள். பெண்களுக்குக் குடும்ப உத்தியோகத்திலிருந்து ஓய்வு எங்கே கிடைக்கிறது? உங்களோடு புறப்பட நினைத்த போதுதான் பெரிய பெண் மதுரம் பிரசவத்துக்கு வந்து விட்டாள். அதனால் வீட்டை விட்டு நகர முடியவில்லை. அதற்குப் பிறகு அண்ணாவோடு போய் மீனாக்ஷி அம்மனைக் கண்குளிரத் தரிசிக்க வேண்டுமென்று முயற்சி செய்தேன். அதற்குள் பெரிய பிள்ளையிடமிருந்து 'உன் நாட்டுப் பெண்ணுக்கு அபார்ஷன்; ஆஸ்பத்திரியி லிருக்கிறாள்; உடனே வா' என்று தந்தி வந்தது. அனாதையாக ஆஸ்பத்திரியில் கிடக்கும் நாட்டுப் பெண்ணை விட்டு விட்டு மதுரைக்குப் போக மனம் துணிகிறதா? இப்படி ஒவ்வொரு தடவை புறப்படும் போதும் ஏதாவது தடங்கல் வந்து கொண்டே இருக்கிறது" என்று கூறினாள்.

"போகட்டும், இப்பொழுது ஒரு தடங்கலுமில்லை. நாளைக்கே கிளம்புவோம். மீனாக்ஷி அம்மனைத் தரிசித்து விட்டு, கள்ளழகர் கோவிலுக்கும் போய்விட்டு வருவோம். அம்மனைத் தரிசித்தாலே போதும், ஏழு ஜென்மம் சாபல்யமடைந்து விடும்."

பார்வதியின் மனம் நிறைந்தது. பிறந்தது இரு பெண்களும் இரு பிள்ளைகளும். பெண்கள் விவாகமாகிப் புக்ககம் சென்று விட்டனர். பிள்ளைகளும் விவாகமாகி வேலை தேடி வட இந்தியாவுக்குச் சென்று விட்டனர். இப்பொழுது அவர்களுக்கு வீட்டில் இருக்க வேண்டிய நிர்ப்பந்த மில்லை. மதுரை மட்டும் என்ன, ராமேசுவரம் வரையிலும் போய்விட்டு வரலாம். பார்வதியும், சர்மாவும் பிரயாணத்துக்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்வதில் முனைந்தனர்.

இதற்குள் தபால்காரன் வந்து இரு கடிதங்கள் கொடுத்து விட்டுச் சென்றான். ஒன்று சிறிய மகனிட மிருந்து வந்திருந்தது. அம்மா, அப்பாவைத் தன்னிடம் வந்து இருக்கும்படி உள்ளம் உருகக் கடிதம் எழுதி யிருந்தான். கடிதத்தில் சொக்கி விட்டாள் பார்வதி. மதுரையிலிருந்து திரும்பியதும், நேராக அவனிடம் போய்க் கொஞ்ச நாட்கள் இருக்க வேண்டும். மற்றொன்று ஒரு கவர். பிரித்துப் பார்த்த சர்மா திடுக்கிட்டு விட்டார். அவர் சகோதரியின் மகள் புஷ்பா எழுதியிருந்தாள்.

புஷ்பா சர்மாவின் வீட்டிலேயே வளர்ந்தவள். சிறு வயதில் தந்தையை இழந்ததும் தாயுடன் மாமாவின் வீட்டில் அடைக்கலம் அடைந்தாள். தாய் உயிருடன் இருந்தாலும், சர்மாவையும் பார்வதியையும்தான் அவள் பெற்றோராகப் பாவித்து வந்தாள். பார்வதியும் அவளைத் தன் வயிற்றில் பிறந்த மூன்றாவது பெண்ணாகத்தான் வளர்த்து வந்தாள். சீர் சிறப்புடன் விவாகமும் செய்து கொடுத்தாள்.

"யார் கடிதம் எழுதியிருப்பது?" என்று கேட்டாள் பார்வதி.

"புஷ்பா எழுதியிருக்கிறாள். அவளுக்கு உடம்பு சரியாக இல்லையாம். டி. பி. என்று டாக்டர் பயப்படுகிறாராம். அதனால் இங்கு நல்ல டாக்டரிடம் காண்பிக்கப் புறப்பட்டு வரட்டுமா என்று கேட்டு எழுதியிருக்கிறாள்" என்றார் சர்மா.

பார்வதி திடுக்கிட்டாள். "அடாடா, அந்தப் பெண்ணுக்கா வியாதி? உடனே புறப்பட்டு வரச் சொல்லித் தந்தி கொடுத்து விடுங்கள். இந்த வியாதியை முற்ற விடக் கூடாது" என்றாள். மதுரைப் பிரயாணம் அவளுக்கு மறந்து விட்டது.

"பார்வதி, நான் சொல்வதைக் கேள். இப்பொழுது அவள் வந்து, இந்த ஊரிலிருக்கும் அவள் நாத்தனார் வீட்டில் தங்கட்டும். நாம் மதுரைக்குப் போய்த் திரும்பினதும் அழைத்துக் கொள்ளலாம்."



"நன்றாக இருக்கிறதே, நீங்கள் சொல்வது! தாய் தந்தையற்ற அனாதைப் பெண், பாவம். அவளைப் போய் 'அங்கே இரு, இங்கே இரு' என்று சொல்வார்களா? நம்ம கையாலேயே வளர்த்து ஆளாக்கிய பெண். நம்ம குழந்தையைப் போல் தானே அவளும்? எனக்கு மனசு கேட்காது. மதுரைக்குப் போனாலும் இந்தப் பெண்ணைப் பற்றிக் கவலை இருந்து கொண்டேதான் இருக்கும். மனசுக்கு நிம்மதியாக இருக்காது. இவள் உடம்பு குணமாகி விட்டால் நாம் போகலாம்" என்றாள் பார்வதி திட்டவட்டமாக.

"பைத்தியம்தான் நீ!" என்றார் சர்மா.

புஷ்பா ஊரிலிருந்து வந்தாள். பார்வதி அவளைப் பார்த்ததும் தவித்து விட்டாள். பிரபல டாக்டர்களிடம் அழைத்துச் சென்றாள். புஷ்பாவுக்கு டி. பி. இல்லை என்று ஒரு டாக்டர் சொன்னால் போதவில்லை பார்வதிக்கு. பத்து டாக்டர்கள் வாயினால் கேட்டு நிம்மதி அடைந்தாள். புஷ்பாவின் உடம்பு நன்றாக ஆக நல்ல டானிக்கும் புஷ்டியான ஆகாரமும் வாங்கிக் கொடுத்தாள். நான்கு மாதங்கள் கழித்த பிறகுதான் அவளைப் புக்ககத்துக்கு அனுப்பினாள்.

புஷ்பா சென்றதும், சர்மா பார்வதியை மதுரைக்கு அழைத்துப் போகத் திட்டமிட்டார். வரும் தேதியையும் மதுரை நண்பருக்குக் கடிதம் மூலம் அறிவித்தார். பிரயாணப் பேச்சை எடுத்தாலே ஏதாவது தடங்கல் வந்து விடுகிறதே என்று புறப்படும் தினம் காலையில்தான் நிச்சயமாகப் பார்வதியிடம் சொல்ல வேண்டும் என்பது அவர் எண்ணம். எப்படியாவது பார்வதியை அழைத்துச் சென்று அம்மனின் தரிசனத்தைச் செய்து வைத்து விடவேண்டும் என்னும் ஆவலோடு, புறப்படும் தினம் காலையில் விஷயத்தைப் பார்வதியிடம் சொன்னார்.

பிரயாண விஷயத்தைக் கேட்டதும், பார்வதி குதித்துக் கொண்டு கிளம்புவாள் என்று அவர் நினைத்தார். ஆனால் ஏமாற்றம்தான் கிடைத்தது. "மதுரைக்குப் போக நன்றாக நாள் பார்த்தீர்களே! நம்ம 'லக்ஷ்மி' இன்றோ நாளையோ கன்று போடும் நிலையில் இருக்கிறது.

சர்மாவுக்குக் கோபமாக வந்தது. "முட்டாளே, இப்பொழுது அங்கே உற்சவம். ரொம்பவும் நன்றாக இருக்கும். பசுவை வேலைக்காரன் பார்த்துக் கொள்ள மாட்டானா? உடனே கிளம்பு" என்றார்.

பார்வதி அசையவில்லை. "சரிதான், இந்த வாயில்லா ஜீவனை வேலைக்காரனை நம்பி விட்டுவிட்டு வரமாட்டேன். அம்மனுடைய கிருபை இருந்தால்தானே கிளம்ப முடியும்?" என்று கூறிவிட்டாள்.

சர்மாவுக்கு எரிச்சலாக வந்தது. 'இன்று மாடு சினை, நாளைக்குப் பெண் கர்ப்பவதியாக வந்து விடுவாள். பாசமும் பந்தமும் மனத்தில் இருக்கும் வரை உனக்கு அம்மனுடைய தரிசனம் எப்படிக் கிடைக்கும்? சுத்த முட்டாள்" என்று இரைந்தார்.


ஒரு வாரம் கழித்துத்தான் பசு கன்று போட்டது. பார்வதி அதற்கு வேண்டியதைக் கவனித்தாள். அது வலியினால் துடித்து, வாய்விட்டுக் கதற முடியாமல் பரிதாபமாக நின்றபோது, பார்வதி அன்புடன் அதன் கழுத்தைத் தடவிக் கொடுத்தாள். அந்த அன்புக் கரங்களின் தழுவுதலில் பசு சற்று ஆசுவாசத்துடன் நின்றது. கன்று போட்டதும், பார்வதி ஓடிச் சென்று அதைத் தழுவிக் கொண்டாள். பாயசம் வைத்துச் சமையல் செய்தாள்.

பசுவும் கன்றும் சுகமானதும், பார்வதியின் மனத்தில் மறுபடி மீனாக்ஷி அம்மனைத் தரிசிக்கும் ஆவல் எழுந்தது. அவளே கணவனிடம் தன்னுடைய விருப்பத்தைத் தெரிவித்தாள். சர்மாவோ சிரித்துவிட்டு, "போதும், உன்னோடு படும் பாடு. டிக்கெட்டை வாங்கிவிட்டு என்னைக் கூப்பிடு. வருகிறேன். நானாகப் பிரயாணத்துக்கு முயற்சி செய்யமாட்டேன்" என்று கூறிவிட்டார்.

அதற்கு ஏற்றாற்போல் மறுநாளே திடும் பிரவேசமாகச் சர்மாவின் இரண்டு பிள்ளைகளும், மனைவி குழந்தைகளுடன் விடுமுறையைக் கழிக்க வந்து சேர்ந்தனர். சகோதரர்களுடன் கொஞ்ச நாட்கள் இருக்கப் பெண்களும் வந்து சேர்ந்தனர். மறுபடியும் வீடு நிரம்பியது. பார்வதி யந்திரம்போல் ஓடி ஓடி வேலை செய்தாள்.

வேடிக்கையாக ஒருநாள் சர்மா "உங்க அம்மாவுக்கு இருப்பது போல் பாசமும் பந்தமும் இருந்தால், ஜன்மம் சாபல்யமாகாது. மதுரைக்குப் போக வேண்டுமென்று நான்கைந்து முறை கிளம்பினான். பாசமும் பந்தமும் குறுக்கிட்டன. பாசம் மனத்திலிருக்கும் வரை அம்மன் தரிசனம் கிட்டுமா?" என்றார்.

அவ் வார்த்தைகளைக் கேட்டதும், எவ்வளவு கஷ்டத்திலும் கண்ணீர் விட்டறியாத பார்வதி, மடை திறந்து விட்டது போல் கண்ணீரைப் பெருக்கினாள். சிறு குழந்தை போல் தேம்பித்தேம்பி அழுதாள். எல்லோரும் திடுக்கிட்டு விட்டனர். அழுகையோடு "எல்லாவற்றுக்கும்



பாக்கியம் செய்திருக்க வேண்டாமா? பாசமும் கடமையும் சேர்ந்து அம்மன் தரிசனத்தை மறைக்கின்றன'' என்றான்.

அன்று இரவு வெளியே போய்விட்டு வந்த, பெரிய பிள்ளையின் பேச்சு எல்லோரையும் ஆச்சரியத்தில் ஆழ்த்தியது. ''அப்பா, ரங்கநாதனிடம் கார் கேட்டிருக்கிறேன். அவர் காரில் நாளை விடியு முன்பே, அம்மாவை அழைத்துக்கொண்டு மதுரைக்குப் போய்விட்டு, மூன்றும் நான் வந்துவிடப் போகிறேன். அதுவரை பிரயாணத் தடங்கல் நேராமல் பார்த்துக் கொள்ள வேண்டும்'' என்றான். பார்வதி மகனின் செய்கையில் உள்ளம் நெகிழ்ந்து உருகினாள். அன்று இரவு படுக்கப்போகுமுன், பார்வதி அம்மனின் படத்தின் முன்பு கரம் குவித்து, ''தாயே, ரொம்பவும் சோதிக்காதே. நாளையாவது உன் தரிசனத்தைத் தந்துவிடு'' என்று பிரார்த்தித்தாள்.

பார்வதிக்குப் படுத்துக்கொண்ட சிறிது நேரத்துக்குள் சற்று மார்பு வலித்தது. எல்லோரும் ஆழ்ந்த தூக்கத்திலிருந்தனர்.

அதோ, அங்கே யார் வருவது? சர்வாலங்கார பூஷணியாய், தேஜோமய ஸ்வரூபத்துடன் அழகே உருவாக மெல்ல நடைபோட்டு, இள நகை அரும்ப அருகில் வந்துவிட்டாளே!

''பார்வதி!''

பார்வதி கண்களைத் திறந்தாள். கண்களைக் கூசுகிறதே அவள் காந்தி! பூத்துக் குலுங்கும் அவ்விளங்கொடியைப் பார்த்துப் பார்வதிக்கு ஆனந்தம் உண்டாயிற்று. ''யாரம்மா நீ?'' என்று கேட்டாள்.

''பார்வதி, நான் யாரென்று தெரியவில்லையா? விளையாடுகிறாயா?'' என்றாள் அந்த மின்னல்கொடி.

பார்வதி சற்று உற்றுப் பார்த்தாள். ஆம், இப்பொழுது அவளுக்கு நினைவு வந்துவிட்டது. ''எங்கள் வீட்டில் மீனாக்ஷி அம்மனின் திரு உருவப் படம் இருக்கிறதே, அதே சாயல்தான் நீ...தெரிந்து விட்டது. நீ மீனாக்ஷிதான்'' என்று உள்ளம் குலுங்க உரைத்தாள் பார்வதி. சட்டென அவள் தொண்டையை அடைத்தது. ''தேவி, நான் மகா பாபி. மதுரைக்கு வந்து உன்னைத் தரிசிக்கக் கொடுத்து வைக்கவில்லை......'' தொண்டை கரகரக்கக் கூறினாள் பார்வதி.

''மனக் கதவைத் திறந்துவிடு, பார்வதி.''

''மனக் கதவா?''

''ஆமாம், கண்களை உன் மனத்தை நோக்கித் திருப்பு.''

பார்வதி சற்றுக் கண்களை மூடி தியானத்தில் ஆழ்ந்தாள். ஆகா, அந்த மனத்தின் நடுநாயகமாக இந்தச் சுந்தரி இடம் பெற்றிருக்கிறாளோ! பார்வதியின் உள்ளம் உவகையில் பூரித்தது. கண்கள் ஆனந்தக் கண்ணீர் பெருக்கின.

''பார்வதி, போதும் உன் மனச் சிறையிலிருந்து எனக்கு விடுதலை கொடு.''

''விளையாடுகிறாயே!''

''நானா விளையாடுகிறேன்? நீதான் என்னை உன் மனத்தின் அன்புச் சிறையில் சிக்க வைத்து, விட்டாயே!''

''தேவி, பரிகாசம் போதும். பாசம் என் கண்களை மூடி, மதுரையில் உன் தரிசனம் காண விடாமல் செய்து விட்டது.''

''பாக்கியசாலி நீ! என்னையே இழுத்து வந்து விட்டாயே! என் நினைவைத் தவிர வேறு நினைவே உனக்கு இல்லையே!''

''எல்லாம் உன் கருணை, தாயே!''

பார்வதிக்கு இப்பொழுது வீட்டு நினைவில்லை; பாசமில்லை; பந்தமில்லை.

மறுநாள் விடியற்காலை மதுரைப் பிரயாணத்துக்கு அம்மாவை எழுப்பப் பெரிய மகன் வந்தான். ''அம்மா, அம்மா'' என்று கூப்பிட்டுத் தட்டி எழுப்பியும் அவள் விழிக்கவில்லை. எல்லோரும் ஓடி வந்தனர். பார்வதியின் உடம்பு சில்லிட்டிருந்தது. முகத்தில் ஒரு பிரகாசம்.

அம்மனின் கருணையை யாரே அறிவர்!



64. ஆதனூர்

"சிதம்பரம் போகாமல் இருப்பேனோ; சென்மத்தை வீணாக்கிக் கெடுப்பேனோ" என்று கொள்ளிட நதிக்கரையில் நின்று உள்ளம் கசிந்து உருகினார் ஒரு தொண்டர். "கட்டையிருக்கையில் சிதம்பரம் போய்க் காண வேணும் ஐயே" என்று அவர் கண்ணீர் விட்டுக் கதறினார்.

இவ்வாறு அல்லும் பகலும் தில்லைச் சிற்றம்பலத்தையே நினைந்து உருகிய நந்தனார் என்னும் நல்லார் கொள்ளிட நதிக்கரையில் உள்ள ஆதனூரிலே பிறந்தவர். அவர் பிறந்தருளும் பேறு பெற்ற சிற்றூரின் செழுமையைப் பெரிய புராணம் பாடிற்று.

"பகர்ந்துலகு சீர்போற்றும்
பழையவளம் பதியாகும்
நிகழ்ந்தபுனற் கொள்ளிடம்பொன்
செழுமணிகள் நிரைக்கரத்தால்
முகந்துதர இருமருங்கும்
முளரிமலர்க் கையேற்கும்
அகன்பணைநீர் நன்னாட்டு
மேற்கானாட்டு ஆதனூர்"

(முளரி — தாமரை)

என்ற திருவாக்கால் அவ்வூரின் பெருமை இனிது விளங்கும்.

* ஆதனூர் என்னும் பெயர் கொண்ட ஊர்கள் தமிழ் நாட்டிலே பல உண்டு. ஆதலால் நந்தனார் பிறந்த ஆதனூரை 'மேற்கானாட்டு ஆதனூர்' என்று கவிஞர் தெளிவாகக் கூறியருளினார்.

புலையர் குலத்தைச் சேர்ந்த நந்தனார் அவ்வூர்ச் சேரியிலே வாழ்ந்தார். அங்கே எலும்பும் தோலும் குவிந்திருக்கும்; பருந்தும் கழுகும் வட்டமிடும். பன்றியும் நாயும் படுத்திருக்கும். இத்தகைய சூழ்நிலையில் சித்தத்தைச் சிவனடியில் ஊன்றிய சீலராய் விளங்கினார் நந்தனார். ஊனத் தொழில் புரிந்து, ஊனைத் தின்று உழன்று, ஈசனை மறந்தொழிந்த தம் இனத்தாரைப் பாசங் கலந்த மொழிகளால் பரிந்தழைத்தார்.

"சிவலோக நாதனைக் கண்டு
சேவித்திடுவோம் வாரீர்"

என்று ஆனந்தக் களிப்புற்று ஆடினார்.

ஆதனூருக்கு அருகே திருப்புன்கூர் என்ற பாடல் பெற்ற பழம் பதி அமைந்துள்ளது. அங்கு வீற்றிருந்தருளும் இறைவனை,

"செய்யெலாம் செழுங்கமலப்
பழன வேலித்
திருப்புன்கூர் மேவிய
சிவ லோகன்"

என்று போற்றினார் திருநாவுக்கரசர். அப்பதியை நாடிற்று நந்தனார் உள்ளம். சேரியை நீங்கிச் சிலர் அவருடன் சேர்ந்தார்; வாரும் தோலும் வரிசையாக எடுத்தார். பண்ணுப் பாட்டிசைத்தார். திருப்புன்கூரை வந்தடைந்தார்.

திருக்கோயிலின் முன்னே நின்று நந்தனார் துள்ளிக் குதித்தார்; சிவஞானத் தேனை அள்ளிக் குடித்தார். "ஈசனே! சிவலோக நாதனே! இந்த ஈனப் பறையர்க்கு அருள் புரியலாகாதா? உன்னி உன்னிப் பார்த்தாலும் உன் திருமேனி தெரியவில்லையே! வளைந்து குனிந்து பார்த்

நானும் உன் வடிவத்தைக் காணும் வகையில்லையே! மலைபோல் ஒரு மாடு கிடந்து மறைக்குதே !

" வழிமறைத் திருக்குதே மலைபோலே
ஒரு மாடு படுத்திருக்குதே

....

பாவிப் பறையன் இந்த
ஊரில் வந்தும் இவன்
பாவம் தீரேனோ உன்தன்
பாதத்தில் சேரேனோ ஏறேனோ
சிவலோக நாதா மாடு
(வழி)

என்று முறையிட்டார். அந்நிலையில் நந்தி விலகிற்று; நாதன் மேனி விளங்கிற்று. நந்தனார் கண்டார்; ஆனந்தம் கொண்டார். குதித்துக் குதித்துக் கும்பிட்டார்; துதித்துத் துதித்துத் துள்ளினார்; போற்றி போற்றி என்று பொன்னடி வணங்கினார். பிரியா விடை பெற்றுத் திரும்பி ஆதனூரை வந்தடைந்தார்.

நந்தனார்க்காக நந்தியைச் "சற்றே விலகியிரும் பிள்ளாய்" என்று பணித்த ஈசன் அவ்வூரில் நிகழ்த்திய மற்றொரு அற்புதச் செயல் தேவாரத்திலே குறிக்கப்பட்டுள்ளது. ஒருகால் சோழ நாட்டிலே வானம் பொய்த்தது; வயல் காய்ந்தது; தண்ணீர் இன்றி மக்கள் கண்ணீர் சொரிந்தனர். அப்போது அவ்வூருக்கு வந்தருளினார் சுந்தரமூர்த்தி. ஆலயத்தில் அவரைக் கண்டு தமது குறையை முறையிட்டனர் திருப்புன்கூர் மக்கள். கயிலாசநாதன் அருளால் காலத்தில் மழை பெய்யுமாயின் பன்னிரு வேலி நிலம் ஆலயத்திற்குத் தருவதாக வாக்களித்தார்கள். அந்நிலையில் வானம் கறுத்தது: மேகம் திரண்டது; மின்னொளி கண்ணொளியைப் பறித்தது; பெரு மழை பிடித்தது. நாள் முழுதும் விடாமல் பெய்தது. ஆற்றிலே வெள்ளம் பொங்கிற்று; நிலமெல்லாம் நீரிலே மூழ்கிற்று. அச்சமுற்ற குடிகள் மீண்டும் ஆலயத்திற் போந்து மழையை நிறுத்த வேண்டும் என்று மாதேவனிடம் முறையிட்டார்கள். அழிவு செய்யாமல் மழை நின்று விட்டால் மேலும் பன்னிரு வேலி நிலம் தருவதாக ஒப்புக் கொண்டார்கள். அப்போது மழை நின்றது: வெள்ளம் வடிந்தது. வேளாண்மை சிறந்தது. வாக்களித்த நிலம் சிவலோகநாதனைச் சேர்ந்தது. இருவருளால் நிகழ்ந்த இச்செயலைத் தெரிவிக்கின்றது ஒரு தேவாரப் பாட்டு.

" வையக முற்றும் மாமழை மறந்து
வயலில் நீரிலை மாநிலம் தருகோம்
உய்யக் கொள்கமற் றெங்களை என்ன
ஒலிகொள் வெண்முகி லாய்ப்பரந்து
[எங்கும்
பெய்யும் மாமழைப் பெருவெள்ளந்தவிர்த்து
பெயர்த்தும் பன்னிருவேலி கொண்டருளும்
செய்கை கண்டுநின் திருவடி அடைந்தேன்
செழும் பொழில்திருப் புன்கூர் உளானே"

என்பது சுந்தரர் திருவாக்கு.

இத்தகைய தண்ணளி வாய்ந்த ஈசன் புகழையே பேசத் தலைப்பட்டார் நந்தனார். சேரி முழுவதும் சிவ மணம் கமழ்ந்தது. இவ்வாறிருக்கையில் மார்கழித் திங்கள் பிறந்தது. நந்தனார் மனம் சிதம்பரத்தை நாடிற்று; அல்லும் பகலும் எல்லையற்ற தில்லைச் சிற்றம்பலத்தின் பெருமையைச் சொல்லிச் சொல்லி ஆனந்தத்தில் மூழ்கினார். சிவனே தெய்வம்; சிதம்பரமே கைலாசம் என்று தில்லையைத் திசை நோக்கித் தொழுதார்.

" நாளைப் போகாமல் இருப் பேனோ — இந்த
நாற்ற நரம்பும் இன்னம் சுமப் பேனோ-நான்
நாளைப் போகாமல் இருப் பேனோ—தில்லை
நாதனைக் காணாமல் புசிப் பேனோ — நான்"

என்று ஊண் உறக்கமற்றுச் சேரியைச் சுற்றித் திரிந்தார். 'நாளைப் போவேன்' என்று நாள்தோறும் சொல்லிய தொண்டரை 'நாளைப் போவார்' என்றே ஆதனூர் வாசிகள் அழைப்பார் ஆயினர்.

தில்லைச் சிற்றம்பலமே நந்தனார் கண்ணிலும் கருத்திலும் நிறைந்து நின்றது. குனித்த புருவமும், கொவ்வைச் செவ்வாயும், பனித்த சடையும், பவளம் போல் மேனியும் உடைய பரமன் அங்கே ஆனந்த நடம் புரியும் அழகினை எண்ணி எண்ணி உள்ளம் தழைத்தார்.

" முத்தி அளித்திடும் பாதம் — தில்லை
மூவாயிரம்பேர்கள் பூசிக்கும் பாதம்
ஆசையைப் போக்கிய பாதம்—பர
மானந்த வெள்ளத்தில் ஆடிய பாதம்"


அதைக் கண்டே தீர்வேன் என்று புறப்பட்டார் நந்தனார்.

தில்லைத் தலத்தைக் கண்டார்; தொல்லைக் கவலை விண்டார்.

ஆடிய பாதத்தைத் தாரும் — உம்மைத்
தேடிவந்தேன் இதோ — பாரும் பாரும்

என்று பரவசமுற்றுப் பாடினார்.

மெய்யடியாராகிய நந்தனை வருக என்று அழைத்தான் ஈசன்; அந்தமில்லாப் பேரின்பம் அளித்தான். "யாதும் ஊரே, யாவரும் கேளிர்" என்ற பரந்த நோக்குடைய நந்தனார் பிறந்தமையால் கொள்ளிடக் கரையில் உள்ள ஆதனூர் இன்று ஆதமங்கலம் என்று அழைக்கப் பெறுகின்றது.



தபால்சந்தேகம்!
1
தபால் பெட்டி
2
3
தபால் பெட்டி
P.O
4
P.O
5
போஸ்டு ஆபீஸ்
P.O
6
POSTAL VAN
தபால் வண்டி
7
தபால் வண்டி
R.M.S
8
சபாஷ்! தபால் போய் சேர்ந்து விட்டது!


எக்லா
தென் இந்தியா
விரும்பும் டால்க்!
தெம்பூட்ட, மணமளிக்க
தனிப்பட்ட தயாரிப்பு
இந்த பரத நாட்டியக்காரியைப்போல், நீங்களும் தென்னாட்டின் அதி உஷ்ண கால நிலையிலும்கூட குளுமையும் இதமும் பெறலாம். மனோரம்மிய மணம் பெற்ற எக்லா டால்க் உபயோகித்தால் குளுமையான நுண்ணிய சுகந்தத்திற்கு இந்த ஒப்புயர்வற்ற டால்க்கை அடிக்கடி தாராளமாக உபயோகியுங்கள்
மெல்லிய எக்லா ஒரு லட்சிய முகப்பவுடரும் கூட
கால்கேட்
எக்லா
டால்க் பவுடர்
ÉCLAT
TALC POWDER
COLGATE
EC/6/3

ரகுபதி ராகவ

[அகமதாபாத் நவஜீவன் காரியாலயத்தினர் பிரசுரம் செய்திருக்கும் 'சத்தியமே தெய்வம்' என்னும் காந்தி வசன மஞ்சரியிலிருந்து ராஜாஜி எடுத்து எழுதியது]

20

மற்றவர்களை விட எனக்குப் பிரத்தியேகமாகக் கடவுளுடைய சித்தம் வெளிப்பட்டதாக நான் எண்ணவில்லை. ஒவ்வொரு மனிதனுடைய உள்ளத்திலுமே தெய்வம் பேசுகிறது. நாம்தான் அது கேட்காதபடி காதைப் பொத்திக் கொள்ளுகிறோம். நமக்கு முன்னால் ஒளிப் பிழம்பாக நிற்கும் அந்த ஜோதியைப் பார்க்காமல் கண்ணை மூடிக் கொள்ளுகிறோம். அவ்வளவேதான். நான் என்னைப் பற்றிச் சொல்லக் கூடியது என்னவென்றால் ஆண்டவன் எங்கும் பரவி நிற்கிறான் என்பதை உணர்ந்தேன். அவ்வளவே.

[யங் இந்தியா 25—5—21]

வாழ்க்கைப் பயன் ஆண்டவனைக் காண்பதுதான். மனிதனுடைய சகல காரியங்களும், எல்லாத் துறைகளிலும், ஆண்டவனைக் காணுவதற்கான முயற்சிகளாகவே இருக்க வேண்டும். சுற்றியுள்ளவர்களுக்கு உபகாரம் செய்து வாழும் வாழ்க்கை தெய்வ தரிசனம் பெறும் முயற்சியாகும். ஆண்டவன் படைத்திருக்கும் மக்களிலும் பிராணிகளிலும் அல்லாது வேறு எங்கே ஆண்டவனை நாம் காண்போம்? நம்முடைய உயிரைப் பிற உயிர்களில் ஒன்றுபடுத்திக் காண வேண்டும். பிற உயிர்களோடு தன் உயிரை ஒன்றுபடுத்துவது அந்த உயிர்களுக்குச் செய்யும் பணியினாலேதான் முடியும். உலகத்தில் நான் ஒரு பிளவுபடாத பாகம். மக்கள் உயிரில்தான் நான் அவனைக் காண்கிறேன். அவன் வேறு; மக்கள் வேறு அல்ல. இந்தப் பெரிய உலகில் எனக்கு நெருங்கியிருப்பது என்னுடைய தாய் நாடு. இந்த நாட்டு மக்களின் நிலைமையைப் பார்த்தால் என்னுடைய பூரண முயற்சியும் அவர்களுக்குச் செய்ய வேண்டிய பணியில் செலுத்த வேண்டியதாகிறது. ஆகையினால் என்னுடைய தெய்வ பக்தி இந்தத் துறையில் செல்கிறது. இமய பர்வதத்தில் ஒரு குகையில் ஆண்டவனைக் காண என்னால் முடிவதாயிருந்தால் அங்கேயே போய்த் தவம் செய்திருப்பேன். ஆனால் மக்களைத் தவிர்த்து மலையில் அவனை என்னால் காணமுடியும் என்று நான் எண்ணவில்லை.

[ஹரிஜன் 29—8—36]

ராஜாஜி

மெய்ப் பொருளை நாம் காண முடியாமல் இருப்பதும், அது மறைந்து நிற்பதும், நமக்கு நன்மையே ஆகும். ஓர் அடி எடுத்து வைக்கத்தான் முடிகிறது. அதற்கு வேண்டிய வெளிச்சத்தைத்தான் தருகிறான். அது நமக்குப் போதும் அல்லவா? நியூமனுடன் நாமும் பாடலாம்: "ஓர் அடி எடுத்து வைக்கிறேன். அது தவறிப் போகாமல் காத்துத் தா." பாதையில் ஒரு அடி சரியாக எடுத்து வைத்தோமானால் அடுத்த அடி எங்கே வைக்க வேண்டும் என்பது தானாக விளங்கும். அதைப் பற்றிச் சந்தேகமில்லை. பாதை இருட்டாக இருக்கிறது என்பது மாயை. பொறுமையைக் காத்தோமானால் வெளிச்சத்துக்குக் குறைவில்லை. படிப்படியாகச் செல்வோம். நடக்கும் பாதையில் அடி அடியாக வைத்துச் செல்லச்செல்ல வெளிச்சம் தருகிறான். அடுத்த படிக்கு அப்பால் இருக்கும் பாதை இருள் மூடினதாகக் காண்கிறது. அதற்காக நாம் பொறுமை இழந்து விடக்கூடாது.

[ஹரிஜன் 20—4—34]

நானும் நீயும் இந்த அறையில் உட்கார்ந்திருப்பது உறுதியல்லவா? அதை விட உறுதி எனக்கு ஆண்டவன் இருப்பது. இன்னும் சொல்லுவேன்: காற்றும் நீரும் இல்லாமல் ஒரு வேளை நான் பிழைத்திருப்பேன். ஆனால் அவன் இன்றி என் உயிர் நிற்காது. என்னுடைய கண்களைப் பிடுங்கி விடலாம். அது என்னைக் கொல்லாது. என் மூக்கை அரிந்து விடலாம். அதுவும் என்னைக் கொல்லாது. ஆண்டவன் இருக்கிறான் என்கிற என் உறுதியைக் கெடுத்து விட்டீர்களானால் நான் செத்தே போவேன். என்ன முரட்டு மூடத்தனம் என்று சொல்லுவீர்கள். ஆனால் இந்த மூட பக்தியை நான் அணைத்துக் கட்டிக் கொண்டு பிழைக்கிறேன். குழந்தைப் பருவத்தில் நான் இருட்டிலே நடக்க நேர்ந்தால், 'ராம் ராம்' என்று சொல்லிக் கொண்டே நடப்பேன். என்னை வளர்த்த ஒரு பாட்டியம்மை இதை எனக்குச் சொல்லித் தந்தாள். அதைப் போலவே தெய்வம் உண்டு என்கிற என்னுடைய இந்த மூட நம்பிக்கை.

[ஹரிஜன் 14-5-38]

ஆண்டவன் பெரும் சோதனைக்காரன். லேசில் விடமாட்டான். யாருமே அவனைப் போல் கண்டிப்பு கிடையாது. என்னுடைய பக்தியோ தேகத்தின் சுக நிலையோ குறைந்து போனால் எப்படியோ அவன் வந்து உதவியும் செய்கிறான். நாம் எப்போதுமே அவன் திருவருளில் வைத்திருக்கும் நம்பிக்கையை இழக்கலாகாது என்று அடிக்கடி நிரூபிக்கிறான். எப்போதுமே அவன் நம்மைக் கைதூக்கி விடக் காத்திருக்கிறான். ஆனால் நாம் சொன்ன வழியிலேதான் அவன் உதவ வேண்டும் என்று கோரினால் அது நடக்காது. இதை நான் நன்றாகக் கண்டு விட்டேன். எந்தச் சமயத்திலும் அவன் என்னைக் கைவிட்டதில்லை. எல்லாம் போயிற்று என்று பயந்து போன கடைசி நேரத்தில், எப்படியோ அவனுடைய உதவி கிட்டியிருக்கிறது.

[1933]



பெப்ருவரி 20ந் தேதி சென்னை வுட்லட்ன்ஸ் பூங்காவில் ஒரு விசேஷப் பாராட்டு விழா நடைபெற்றது. தர்மரட்சாமணி, கீதாரத்தினம் திரு கே. பாலசுப்பிரமணிய ஐயர் பி. ஏ., பி. எல். அவர்கள் சென்னை மேல் சட்ட சபையின் பட்டதாரிகள் தொகுதிக்குப் போட்டியின்றித் தேர்ந்தெடுக்கப்பட்டார் அல்லவா! அந்த வைபவத்தைப் பாராட்டுவதற்காகத்தான் சென்னை நகரப் பிரமுகர்கள் பலர் சேர்ந்து திரு பாலசுப்பிரமணிய ஐயருக்கு ஒரு பாராட்டு விழா நடத்தினர். இந்த விழாவுக்குக் கல்வி மந்திரி கனம் சுப்பிரமணியம் தலைமை தாங்கிச் சிறப்பித்தார். விழாவுக்கு நகரில் உள்ள பத்திரிகையாளர்கள், தொழிலதிபர்கள், பிரமுகர்கள், மந்திரிகள், நீதிபதிகள் ஆகிய பல்வேறு துறைகளில் ஈடுபட்டிருப்பவர்களும் வந்திருந்து சிறப்பித்தனர். திரு பாலசுப்பிரமணிய ஐயரைப் பாராட்டி, டாக்டர் ஏ. லட்சுமணசாமி முதலியார், டாக்டர் பி. வி. செரியன், திரு வி. பாஷ்யம் ஐயங்கார், ஜனாப் அப்துல் ஹமீத்கான், திருப்புகழ் மணி திரு டி. எம். கிருஷ்ணஸ்வாமி ஐயர், திரு கே. ராஜா ஐயர், திரு வி. ஆர். பட்டாபிராமன், திரு முத்தையா செட்டியார் முதலியோர் பேசினார்கள்.

பாராட்டு விழாக் கமிட்டியின் சார்பில் திரு கே. எஸ். ராமசாமி சாஸ்திரியும், திரு எல். என். மணியும் எல்லாரையும் வரவேற்றனர்.

படத்தில் கனம் மந்திரிக்கு அருகில் கழுத்தில் மலர் மாலையுடனும் தலைப்பாகையுடனும் இருப்பவர்தான் திரு கே. பாலசுப்பிரமணிய ஐயர் பி. ஏ., பி. எல்., எம். எல். ஸி.


நீண்ட, அடர்ந்த
ஒளிக்கூந்தலுக்கு
இளமையின் ஒளியும் அற்புத ஜ்வலிப்பும்
பெற கூந்தலுக்கு கால்கேட் பெர்பியூம்டு
காஸ்டர் ஹேர் ஆயிலே தடவுங்கள். கூந்த
லின் இயற்கை அழகை அது எடுத்துக் காட்டி
எல்லோரையும் பிரமிக்கச் செய்யும்.
எக்கானமி சைஸை
வாங்கி பணத்தை
மிச்சப் படுத்துக.
கால்கேட்
பெர்பியூம்டு காஸ்டர்
ஹேர் ஆயில்


ஹத்திபாயின்
தராசு மார்க்
உத்திரவாதமான
ஸ்டெய்ன்லஸ்
ஸ்டீல் பாத்திரங்கள்
உயர்ந்த ரகம்-நேர்த்தியான தயாரிப்பு
ஹத்திபாய் துள்ஸிதாஸ் அண்டு ஸன்ஸ், பம்பாய்-2

தர்மசங்கடம்

ஒரு நாள் மறுபடியும் ரமேஷ் என்னைத் தேடிக் கொண்டு வந்தான்.

"இப்படி நீங்கள் ஒதுங்கியிருப்பது எங்களுக்கு ரொம்ப வருத்தமாக இருக்கிறது" என்று முகத்துக்கு நேரேயே கூறினான். அதன் பிறகு எனக்கு அவனுடைய வீட்டுக்குப் போகாமல் இருக்க முடியவில்லை. நம்மை மீறி என்ன செய்து விடப் போகிறார்கள், எதற்காகப் பயப்பட வேண்டும் என்று தோன்றியது. மேலும் அதற்கு என்ன ஆதாரம் இருக்கிறது? உமா ஊகித்த விஷயம்தானே? எல்லாவற்றையும் விட என்னுடைய பொறுக்க முடியாத தனிமையை மறப்பதற்கு நான் ஏதேனும் செய்து கொண்டிருக்க வேண்டியிருந்தது. நான் மட்டும் அப்போது அவர்களுடைய சிநேகத்தைக் குறைத்துக் கொண்டிருந்தேனானால் பின்னால் ஏற்பட்ட சிக்கல்கள் எல்லாம் ஏற்படாமலிருந்திருக்கும்.

சீக்கிரத்தில் அவர்களுக்கு நான் தமிழன் என்பது தெரிந்து போயிற்று. ஆனால் அதற்குமேல் அதைப் பற்றி அவர்கள் என்னிடம் கேட்கவும் இல்லை. நான் சொல்லவும் இல்லை.

ஒரு சமயம் சுலோசனா, ரமேஷ் இருவரும் சென்னைக்குச் சென்ற போது என்னையும் வரச் சொல்லி வற்புறுத்தினார்கள். இந்துவைப் பற்றிய செய்தி ஏதாவது கிடைக்கலாமென்ற ஆவலினால் நான் அவர்களுடன் சென்னையில் வந்து தங்கினேன். ஒரு வாரம்





தான் இருந்தேன். இந்துவின் சமாசாரம் ஒன்றும் தெரியாமலேயே நான் புறப்பட வேண்டியதாயிற்று. அப்போதுதான் நான் சினிமா பார்க்கச் சுலோசனாவுடன் வந்திருந்ததை இந்து பார்த்திருக்க வேண்டும். இந்து எனக்கு அவ்வளவு அருகில் இருந்தும் நான் அதை உணர்ந்து கொள்ளாமல் இருந்தேனே, அதை விசித்திரம் என்பதா? அல்லது விதி என்பதா?

நான் கல்கத்தா புறப்படுவதற்கு முன்னால் பத்மநாபன் வீட்டில் பேசிக் கொண்டிருந்தபோது, "எல்லோரும் கல்கத்தாவிலேயே வந்து இருந்து விடுங்களேன். ரமேஷும், சுலோசனாவும் மட்டும் ஏன் தனியாக அங்கே இருக்க வேண்டும்?"



என்று சுலோசனாவின் தாயார் கோமளவல்லி அம்மாளிடம் கூறினேன்.

அவருக்கும் வெகு நாட்களாக அதே ஆசையாக இருந்தபடியால், அந்தத் தடவை சுலோசனா திரும்பியபோது அவளுடன் மீராவையும், குழந்தை பாலுவையும் அழைத்துக் கொண்டு கல்கத்தாவுக்கு வந்துவிட்டார். பாலு என்னிடம் ஒட்டிக் கொண்டு பிரியமாக இருந்தான். என்னுடன் தன்னுடைய ஆங்கில மழலையால் தட்டுத் தடுமாறிப் பேசுவதைப் பார்க்கும்போது எனக்கு ரொம்ப வேடிக்கையாக இருக்கும்.

அவர்கள் எல்லோரும் கல்கத்தாவுக்கு வந்த பிறகு, நான் இன்னும் அதிகமாக அங்கே போக ஆரம்பித்தேன். மீராவையும், பாலுவையும் அழைத்துக் கொண்டு போய் ஜைனர் கோயில், பொட்டானிகல் கார்டன்ஸ், மிருகக் காட்சிசாலை இவற்றையெல்லாம் காட்டினேன். நியூ மார்க்கெட்டுக்குச் சென்று விளையாட்டுச் சாமான்கள் வாங்கிக் கொடுத்தேன். அவர்களுடைய சந்தோஷத்தைக் கண்டு நானும் ஆனந்தப்படுவேன். என்னுடைய சூனியமான உலகத்தில் அவர்கள் இரண்டு பேரும் ஜோதி விளக்குகளாக இருந்தனர்.

சுலோசனாவுடன் நான் சகஜமாகவே பழகி வந்தேன். அதாவது அவள் என்னைப் பழகாமலிருக்க விடவில்லை. எனக்கு இதில் ஏதும் தனியான பொருள் இருந்ததாகத் தெரியவில்லை. அவள் எல்லோருடனும் கலகலப்பாகத்தான் பழகினாள். 'கிளப்'புக்குப் போய் எல்லோருடனும் டென்னிஸ் விளையாடுவாள். இதெல்லாம் சீமையில் எனக்கு வழக்கமாகி யிருந்த விஷயங்களாதலால் சகஜமாக இருந்தது. பொழுது போகாமல் வேதனை என் இதயத்தைப் பிழியும் நேரங்களில் நான் அதை மறப்பதற்காகச் சுலோ, ரமேஷ் இவர்களுடன் படத்துக்கோ, டென்னிஸ் ஆடவோ, 'டீ' பார்ட்டிகளுக்கோ போவதுண்டு.

ஒரு நாள் சுலோசனாவுக்கு நான் இங்கிலாந்திலிருந்து வாங்கிக் கொண்டு

வந்திருந்த படங்களையெல்லாம் காட்டிக் கொண்டிருந்தேன். அவனும் ஏதேதோ கேள்விகள் கேட்டுக் கொண்டிருந்தான். அதற்கெல்லாம் உற்சாகமாகப் பதில் சொல்லிக்கொண்டு வந்தேன். ரமேஷும் அருகில் இருந்தான். எனக்கு அவர்கள் பார்க்காத விஷயத்தை நாம் பார்த்திருக்கிறோம், அதைப் பற்றிச் சொல்கிறோம் என்று பெருமையாக இருந்தது.



அவர்கள் ஆசையாகக் கேட்பதைப் பார்த்துப் பெருமிதமடைந்தேன்.

நம்முடைய மனம்தான் என்ன விசித்திரமானது? நான் என்ற உணர்வுக்கு ஏதேனும் ஆகாரம் கிடைக்கும்போதெல்லாம் ஆவலாக விழுங்குகிறது. எவ்வளவு சாப்பிட்டாலும் அதன் பசி தீருவதேயில்லை.

மேலும் அதையெல்லாம் அவர்களிடம் கூறும்போது நான் இங்கிலாந்தில் அனுபவித்த கஷ்ட சுகங்களையெல்லாம் திரும்ப நினைத்துப் பார்ப்பதில் ஒரு ஆனந்தம் ஏற்பட்டது.

நான் கேம்பிரிட்ஜின் அழகைப் பற்றியும், கேம் நதியின் அற்புதமான பாலங்களைப் பற்றியும் விவரித்துக் கூறினேன். பிறகு ரமேஷைப் பார்த்து, "நீ கூடப் போயிருக்கலாம். ரொம்ப அழகான இடம். படிப்பதற்காக இல்லாவிட்டாலும் அந்த அழகை ரசிப்பதற்காக வாவது போய் விட்டு வரலாம். அந்த அழகிய இடம் நெஞ்சை விட்டு அகலவே மாட்டேன் என்கிறது" என்றேன்.

"நான், ரமேஷ் இரண்டு பேரும் போக வேண்டுமென்று சொல்லிக் கொண்டுதான் இருந்தோம். ஆனால் இந்த யுத்தம் வந்து அதைக் கெடுத்து விட்டது. அதனால்தான் நாங்கள் போகவில்லை. எங்களுடைய துரதிர்ஷ்டம்" என்று வருந்தினாள் கைலாசனு.

"நான் கட்டாயம் போவதாக இருந்தேன், ராய்! நீங்கள் முன்னால் போவது தெரிந்திருந்தால் உங்களுடனேயே வந்திருப்பேன். எனக்கு அது ஒரு பெரிய குறைதான்" என்று கூறினான் ரமேஷ்.

"என்ன பிரமாதம்? யுத்தம் நின்றபிறகு போனால் போகிறது."

"ஆமாம். அதன் பிறகு போய்ப் பயன் என்ன? அங்கெல்லாம் வெறும் சாம்பலும் கரியும்தான் இருக்கும்" என்றான் ரமேஷ்.

"நீங்கள் நினைப்பது தவறு. அவர்கள் சாம்பலும், கரியுமாக விட்டுவைத்திருக்கவே மாட்டார்கள். வெகு சீக்கிரம் பட்டணங்களைத் திரும்பச் சிருஷ்டித்து விடுவார்கள்" என்றேன்.

அதன் பிறகு பேச்சு வேறு எங்கேயோ திரும்பி விட்டது. நான் அவர்கள் பேச்சைக் கவனிக்கவில்லை. இடிந்துபோன கற்குவியல்களுக்கடியில் இந்துவின் கரத்தை மாத்திரம் பார்த்ததாகக் கனவு கண்டது ஞாபகம் வந்தது. "இந்துவை நேரில்தான் பார்க்க முடியவில்லை யென்றால் கனவில்கூட முழு உருவத்தையும் பார்க்க முடியவில்லையே. ஏதாவது இன்பகரமான கனவாக வரக்கூடாதா? எதற்காக இப்படித் துன்பமாகவே கனவுகள் வருகின்றன. நான் இந்துவைக் கணநேரம் கூட மறக்காமலிருந்தும் அவளைப் பற்றிக் கனவு காண்பதே இல்லையே! இது விந்தையல்லவா? என்

"அப்படி? ஒருவேளை ரொம்ப அயர்ந்து தூங்கி விடுகிறேன் போலிருக்கிறது" என்று இப்படியெல்லாம் யோசித்துக் கொண்டிருந்தேன்.

திடீரென்று சுலோசனா, "நீங்கள் இதைப் பற்றி என்ன நினைக்கிறீர்கள் மிஸ்டர் ராய்?" என்று கேட்பது காதில் விழுந்தது.

"தயவு செய்து மன்னிக்க வேண்டும். நீங்கள் என்ன பேசிக் கொண்டிருந்தீர்கள் என்று நான் கவனிக்கவில்லை" என்றேன் அவர்களிடம்.

சுலோசனா பொய்க் கோபத்துடன், "ஆமாம்! உங்களுக்கு நாங்கள் பேசுவதில் எப்போதும் 'இன்டரெஸ்டே' கிடையாது. யாரையோ பற்றி எந்த நேரமும் கனவு கண்டு கொண்டே இருக்கிறீர்கள்" என்றாள்.

நான் திடுக்கிட்டேன். கனவைப் பற்றியே நான் யோசித்துக் கொண்டிருந்தபடியால் அவள் என் மனத்தைப் படித்து அறிந்து விட்டாளோ என்ற எண்ணம் ஒரு கணம் எழுந்தது.



அசட்டுச் சிரிப்புடன், "இல்லை, நீங்கள் சொல்வது தவறு சுலோசனா. ஏன் நான் கனவுகளே காண்பதில்லை என்று யோசித்துக் கொண்டிருந்தேன்" என்றேன்.

"யோசனை செய்ய அருமையான விஷயம் தான்" என்று கூறி விட்டு ரமேஷ் எழுந்து சென்றான்.

சுலோ என் அருகில் சற்று நெருங்கி உட்கார்ந்து கொண்டு, "உங்களை ஒன்று கேட்கிறேன். நிஜமாகச் சொல்லுங்கள். நீங்கள் எப்போதும் இந்த உலகத்திலேயே இல்லாத மாதிரி ஏதோ யோசித்துக் கொண்டே உட்கார்ந்திருக்கிறீர்களே? என்ன அப்படிச் சிந்திக்கிறீர்கள்?" என்று கேட்டாள்.

"ஒன்றுமில்லையே. அது என்னுடைய சுபாவம்."

"நீங்கள் சொல்வதை நான் நம்ப வேண்டுமென்று சொல்கிறீர்களா?"

"அது உங்கள் இஷ்டம்."

சுலோசனா மௌனமாக உட்கார்ந்திருந்தாள். சற்று நேரத்துக்குப் பிறகு சற்று மனம் நொந்த மாதிரி, "உங்களுக்குத்தான் என்னிடம் பேசப் பிடிக்கவில்லையே. நான் கேட்டது என் மீது தான் தவறு" என்றாள்.

"ஏன் சுலோ அப்படிப் பேசுகிறீர்கள்? நான் பிடிக்கவில்லையென்று உங்களிடம் கூறவில்லையே!"

"சொல்ல வேண்டுமாக்கும்? என்னைப் பிடிக்கவில்லை என்பதுதான் நன்றாகத் தெரிகிறதே" என்றாள்.

இதற்கு என்ன பதில் நான் சொல்வது? உங்களைப் பிடிக்கவில்லை என்று ஒரு பெண்மணியிடம் கூறி அவர் மனத்தைப் புண்படுத்துவதா? அல்லது பிடிக்கிறது என்று கூறுவதா? நான் சற்றுத் தயங்கிக் கொண்டிருந்தபோது பத்மநாபன் வந்து என்னை அந்தத் தர்மசங்கடத்திலிருந்து காப்பாற்றினார்.

"ஓ! உங்கள் பேச்சில் நான் குறுக்கிட்டு விட்டேனா?" என்று அவர் கேட்டு விட்டுச் சற்று நின்றார்.

"இல்லை! இல்லை! வாருங்கள். இங்கே உட்காருங்கள்" என்று அவர் கையைப் பிடித்து அழைத்து வந்து ஒரு நாற்காலியில் உட்காரச் செய்தேன்.

சுலோசனா உடனே பழைய மாதிரி பேச ஆரம்பித்து விட்டாள்.

அவளுடைய குரலின் தொனி உடனே மாறி விட்டது. சற்று முன் நடந்ததை அடியோடு அவள் பொருட்படுத்தாத மாதிரி தோன்றியது. ஒருவேளை அவள் சாதாரணமாகப் பேசியதைத் தான் நான் அனாவசியமாக, விபரீதமாக நினைத்துக்கொண்டு விட்டேனோ என்று கூடத் தோன்றியது.

நான் அவர்கள் வீட்டுக்குப் போன போதெல்லாம் கோமளவல்லி அம்மாள் என்னை ரொம்பப் பரிவாகக் கவனித்துக் கொண்டார். என்னுடைய தேவைகளைப் பற்றியே அங்கு எல்லோரும் கவலைப்பட்டுக் கொண்டிருந்ததாகத் தோன்றியது. ஆனால் சுலோசனா எப்போதும் போலவே இருந்தாள்.

இந்தமாதிரி கவனிப்புகளுக்கு டிபுடி உத்தியோகம் ஏற்ற பிறகு நான் வழக்கப்பட்டுப் போயிருந்தேன். என் பதவிக்காகவே அவர்கள் என்னை மதிக்கிறார்களென்று நினைத்த போதெல்லாம் எனக்கு ஆத்திரம் பொங்கிக் கொண்டு வரும். என்னை எனக்காக மதிப்பவர்கள் கல்கத்தா நகரில் யாரும் இல்லை. அந்த ஒரு ஆத்மா, என்னை எனக்காக என்றே நேசிக்கும் ஒரு பெண் எங்கேயோ எனக்கு எட்டாத தூரத்தில் இருந்தாள்.

முதலில் எனக்கு இதமாக இருந்த அவர்களுடைய உபசரிப்புக்கள் நாளடைவில் கசக்க ஆரம்பித்தன. ஆனாலும் ரொம்பப் பழகி விட்ட காரணத்தால் விலகி விடவும் முடியவில்லை.

வக்கீல் பத்மநாபன் இப்போது என்னைப் பார்க்கும் போதெல்லாம் உபதேசம் செய்ய ஆரம்பித்தார்.

“வாழ்க்கையில் இரண்டு விஷயங்கள் இறைவனைப் பொறுத்தவை. பிறப்பையும் இறப்பையும், நாம் மாற்றியமைக்க முடியாது. ஆனால் நாமாக இரண்டு முக்கியமான விஷயங்களை வாழ்க்கையில் நிச்சயிக்க வேண்டியிருக்கிறது. ஒன்று உத்தியோகம். உனக்கு இறைவனருளால் நல்ல உத்தியோகம் கிடைத்திருக்கிறது. அடுத்தது விவாகம். அதை நீ சரியாகச் செய்து கொண்டு விட்டால் ஆனந்தமாக வாழலாம்” என்று அவர் கூறத் தொடங்கினார்.

அவர் இந்த மாதிரி பேச ஆரம்பிக்கும் போதெல்லாம் நான் மெள்ளப் பேச்சை மாற்றி விட்டு நழுவி விடுவேன். சில நாட்களுக்குப் பிறகு அப்படிச் செய்வது தவறு என்றும் அவரிடம் உடைத்துச் சொல்லிவிட வேண்டியதுதான் என்றும் தீர்மானித்துக் கொண்டேன். நான் ஒன்றும் சொல்லாம லிருப்பது அவருடைய நம்பிக்கையை வளர்ப்பதாகு மல்லவா? ஆகவே அவர் நேர்முகமாக என்னைக் கேட்கும் சந்தர்ப்பத்தை எதிர்பார்த்துக் கொண்டிருந்தேன்.

ஒரு நாள் நான் மீராவையும், பாலுவையும் ‘ஐஸ்க்ரீம்’ சாப்பிட அழைத்துக் கொண்டு போகலாம் என்று பத்மநாபன் வீட்டுக்குச் சென்றேன். சுலோசனாவும் ரமேஷும் வீட்டில் இல்லை. குழந்தைகளையும் அங்கே காணவில்லை. ஆகவே பத்மநாபனுடைய அறைக்குச் சென்றேன்.

அத்தியாயம் 6

உயிர் துடித்தது

பத்மநாபன் தன் அறையில் தனியே உட்கார்ந்திருந்தார். அவர் கையில் ஒரு பெரிய சட்டப் புத்தகம் இருந்தது. அவர் அதைப் படிப்பதாகத் தோன்றவில்லை. ஏதோ ஆழ்ந்த சிந்தனையில் ஈடுபட்டிருப்பதாகத் தோன்றியது. ஏதோ வழக்கு விஷயமாக யோசித்துக் கொண்டிருக்கிறார் போலிருக்கிறது என்று எண்ணினேன். அதைக் கலைக்க வேண்டாம் என்று தோன்றியது.

உட்காரலாமென்று கருதி நாற்காலியைத் தொட்டு நகர்த்தினேன். உடனே விழித்துக் கொண்டவர் போலப் பத்மநாபன் என்னைப் பார்த்து விட்டு, “வாருங்கள், வாருங்கள்! உட்காருங்கள். உங்களைப் பற்றியே தான் நினைத்துக் கொண்டிருந்தேன்” என்று உபசாரமாகக் கூறினார்.

“அப்படியா? ரொம்ப சந்தோஷம். என்னைப்பற்றி என்ன நினைத்துக்கொண்டிருந்தீர்கள்?”

“சொல்கிறேன். முதலில் நீங்கள் ஏதாவது சாப்பிடுகிறீர்களா?” என்று கேட்டுக் கொண்டே மணியைப் பலமாக அடித்தார். அவர்கள் வீட்டுப் பையன் ஓடி வந்தான்.

“இரண்டு ‘கப்’ காப்பி கொண்டு வா” என்று அவனைப் பார்த்துக் கட்டளையிட்டு விட்டு, “மிஸ்டர் ராய்! ஏன் நீங்கள் சோர்வாகக் காணப்படுகிறீர்கள்?” என்று என்னிடம் கேட்டார்.

“ஒன்றுமில்லையே. சரியாகத்தான் இருக்கிறேன்” என்றேன்.

பிறகு உலக விஷயங்களைப் பற்றிச் சிறிதுநேரம் வம்பளந்தோம். அதற்குப் பிறகு பத்மநாபன் சற்றுத் தயக்கத்துடன், “உங்களிடம் இன்று ஒரு முக்கியமான விஷயம் கேட்கவேண்டுமென்றிருக்கிறேன்” என்றார்.

நான் அது என்னவாக இருக்கும் என்பதை உடனே ஊகித்து விட்டேன். நான் எதிர்பார்த்த சந்தர்ப்பம் வந்துவிட்டதென்பதை உணர்ந்து அதைக் கூறத் தயாரானேன். ஆனால் எனக்கு உயிரே துடித்துப் போகும்படியாகப் பத்மநாபன் ஒரு விஷயம் கூறுவாரென்று தெரிந்திருக்கவில்லை.

முதலில் என்னைப் பத்மநாபன், “உங்களுக்கு எந்த ஊர் பக்கம்?” என்று தயக்கத்துடன் கேட்டார்.

“திருநெல்வேலி ஜில்லாவில், அல்லிக்குளம் என்ற கிராமம் என் பூர்விகம்.”

“அப்படியா? ரொம்ப சந்தோஷம். எனக்கும் திருநெல்வேலிப் பக்கத்தில் நிறைய நண்பர்கள் இருக்கிறார்கள்” என்று கூறிவிட்டு வயது, முழுப் பெயர் முதலியவற்றைக் கேட்டார். நானும் கூறினேன். விஷயத்தை நேரே கேட்டுத் தொலைக்காமல் எப்படியெல்லாமோ

சுற்றி வளைக்கிறாரே என்று எரிச்சலாக இருந்தது. நான் விஷயத்தை ஊகித்து விட்டதாகவும் காட்டிக் கொள்ளச் சங்கோசமாக இருந்தது. பெற்றோர்களைப் பற்றிக் கேட்டபோது சுருக்கமாக இருவரும் நான் சிறுவனாக இருந்தபோதே இறந்து விட்டார்கள் என்றே கூறிவிட்டேன். பேராசிரியர் கோதண்டராமனைப் பற்றி நான் கூறியபோது அவரைத் தனக்கு நன்றாகத் தெரியும் என்றார் பத்மநாபன். இதையெல்லாம் சொன்ன பிறகு சற்றுநேரம் அவர் சிந்தனையில் ஆழ்ந்திருந்தார்.

கடைசியாக, "ராய்! எனக்கு ஜாதி, ஜாதகம் இவற்றிலெல்லாம் நம்பிக்கை கிடையாது. உங்களைப் பற்றி நான் இனிமேல் ஒன்றும் விசாரிக்கப் போவதில்லை. நீங்கள்தான் ஒரு விஷயம் கூற வேண்டும். சுலோசனாவை உங்களுக்கு மணம் செய்வித்து, உங்களை இந்த வீட்டு மருமகனாக்கிக் கொள்ள வேண்டுமென்று என் மனைவி, நான், ரமேஷ் மூவரும் விரும்புகிறோம். சுலோசனாவைப் பற்றி உங்களுக்கே நன்றாகத் தெரியும்" என்றார்.

நான் விஷயத்தை எப்படிச் சொல்வது என்று கொஞ்சம் தயங்கினேன்.

அதற்குள் அவர் "சங்கோசப்பட வேண்டாம், மிஸ்டர் ராய்! உங்கள் தந்தை மாதிரி என்னை நினைத்துக் கொள்ளுங்கள்" என்றார்.

"எனக்குச் சங்கோசம் ஒன்றுமில்லை. இதற்கு என்னால் உடன்பட முடியாதென்று சொல்லத்தான் தயக்கமாக இருந்தது. தயவுசெய்து என்னை மன்னிக்க வேண்டும்" என்றேன்.

பத்மநாபன் பேசும் சக்தியைக் கூட இழந்து விட்டதாகத் தோன்றியது. சற்றுப் பொறுத்து, "ஏன்? உங்களுக்கு என்ன ஆட்சேபம் இருக்க முடியும்?" என்று கேட்டார்.

அவர் அவ்வளவு தூரம் என்னுடைய பதிலால் பாதிக்கப்படுவாரென்று நான் நினைக்கவில்லை. அவர் கேட்ட விதத்தைப் பார்த்தபோது அவர் எவ்வளவு தூரம் அது நிறைவேறி விடுமென்று அழுத்தமாக எண்ணி வந்திருக்கிறாரென்று எனக்குத் தெரிந்தது.

"இதற்கு என்ன காரணம் நான் கூற முடியும்? உங்களுக்கெல்லாம் நான் எவ்வளவோ கடமைப்பட்டிருக்கிறேன். தன்னந்தனியனாக இருந்த என்னிடம் நீங்கள் அனைவரும் அலாதியான பிரியத்துடன் பழகினீர்கள். அதற்கெல்லாம் நான் நன்றியுள்ளவனாக இருக்கிறேன். ஆனால், தயவு செய்து இதற்கு மாத்திரம் என்னால் உடன்பட முடியாது."

"ஏன் என்று நீங்கள் சொன்னால் தான் எனக்குச் சமாதானமாக இருக்கும். இப்படிச் சொன்னால் போதாது. என்ன விதத்தில் உங்களுக்கு எங்கள் சம்பந்தம் பிடிக்கவில்லை? சரியான காரணம் இருந்தால் எனக்கு மனம் நிம்மதியடைந்துவிடும். இல்லாவிட்டால் வேதனையாகவே இருக்கும்."

"அப்படியானால் சொல்கிறேன். எனக்குத் திருமணம் முன்பே நிச்சயமாகி விட்டது. நீங்கள் இப்படித் திடுக்கிட வேண்டிய அவசியமில்லை. இப்போது நிச்சயமாகவில்லை, நான் சீமை செல்லு முன்பே நிச்சயமாகி விட்டது."



"அப்போது ஏன் வந்த உடனேயே விவாகம் செய்து கொள்ளவில்லை?"

என் மனத்தை அப்படியே துயரம் என்னும் மேகம் வந்து மூடிக் கொண்டது. அவரிடம் கூறினால் பரவாயில்லை என்று நினைத்துக் கொண்டே, "உங்களை உண்மையில் என் தந்தையாக நினைத்துப் பேசுகிறேன். நான் மணந்து கொள்வதாக வாக்குறுதி கொடுத்திருந்த பெண் இருக்குமிடம் தெரியவில்லை. அவளை எப்படியாவது தேடிக் கண்டு பிடிக்க வேண்டியது ரொம்ப அவசியம். அதற்குத்தான் நான் முயன்று வருகிறேன். அப்படி இருக்கும்போது நான் நீங்கள் கூறுவதற்கு எவ்வாறு நான் ஒப்புக் கொள்ள முடியும்? ஆனால் இதிலிருந்து உங்களுக்கு என்னிடமுள்ள நன்மதிப்பு தெரிந்து எனக்கு மிகவும் மகிழ்ச்சி உண்டாகிறது" என்றேன்.

"ஆமாம்! அவள் பெயர் என்ன?"

"இந்துமதி."

"அவள் தந்தையின் பெயர்?"

"மந்திரமூர்த்தி. அவர் குங்குமத் துறையில் இருந்தார். அவருடைய வளர்ப்புப் பெண் இந்துமதி. அவரும்

இறந்து விட்டார் என்று கேள்விப்பட்டேன். பேதையான இந்தப் பெண் என்ன ஆனாளோ தெரியவில்லை.''

''ஆவது என்ன? சினிமாக்காரனுடன் அவள் ஓடி விட்டாள்.''

திடீரென்று என் தலையில் பெட்ரோலை ஊற்றி விட்டு நெருப்பு வைத்த மாதிரி இருந்தது.

நான் எழுந்து நின்றேன். என் கைகள் நடுங்கின. ''மிஸ்டர், பத்மநாபன்! நீங்கள் கூறியதனால் தான் இதை நான் பொறுத்துக் கொண்டிருந்தேன்......'' என்று சொல்லிக் கொண்டே இருக்கும்போது சமையல்காரப் பையன் காப்பியும், டிபனும் கொண்டுவந்தான். அவனெதிரில் ஒன்றும் பேச வேண்டாமென்று நான் நிறுத்திக் கொண்டேன்.

பையன் போன உடனே பத்மநாபன் என்னைப் பார்த்து, ''மிஸ்டர், ரங்கதுரை! உங்களுக்கு இவ்வளவு கோபம் வரும் என்று எனக்குத் தெரியாது. அந்தப் பெண்ணைப் பற்றிய விவரங்கள் எல்லாம் எனக்குத் தெரியும். நீங்கள் பொறுமையாகக் கேட்டால் சொல்லுகிறேன். இப்படி ஆத்திரப்பட்டுப் பதறுவதாக இருந்தால் சொல்லவில்லை'' என்றார்.



என் கைகால்களில் நடுக்கம் நீங்கவில்லை. நான் மறுபடியும் நாற்காலியில் உட்கார்ந்தேன். இவரிடமிருந்து இந்த விஷம் கலந்த விஷயத்தைக் கேட்பதா அல்லது போய்விடுவதா என்று சிறிது நேரம் நெஞ்சம் போராடியது. கடைசியில் ஆவல் வென்றது. இந்துவைப் பற்றி ஏதேனும் தெரிந்து கொள்ள வேண்டுமென்ற ஆவலினால் நான் பொறுமையாகக் கேட்பதற்குச் சித்தமானேன்.

''இந்துவைப் பற்றி உங்களுக்கு என்னென்ன தெரியுமோ எல்லாவற்றையும் சொல்லி விடுங்கள். நான் பொறுமையாக இருக்கிறேன்'' என்றேன். ஐயோ! அன்று நான் அதைக் கேட்காமலேயே இருந்திருந்தால், உடனே எழுந்து போய்விட்டுப் பிறகு அவர்கள் முகத்திலேயே விழிக்காதிருந்திருந்தால் எவ்வளவு வேதனை மீதியாகியிருக்கும்? எவ்வளவு சங்கடங்கள் குறைந்திருக்கும்?

''அந்தப் பண்ணையார் மந்திரமூர்த்தி ரொம்ப நல்ல மனிதர்தான். அவரை நாங்கள் விஜயராம பட்டினத்தில் சந்தித்தோம். அவர் இறக்கும் தறுவாயில் நான்தான் உயில் எழுதினேன். என்னைத்தான் அவளுக்குக் கார்டியனாக அவள் தந்தை நியமித்தார். அவளுக்குச் சேரவேண்டிய பணம் இன்னும் என்னிடமிருக்கிறது'' என்று கூறினார் பத்மநாபன்.

நான் உண்மையிலேயே இப்போது திகைத்துப் போனேன். 'நான் உண்மையில் அவற்றைக் கேட்கிறேனா, அல்லது உருவமில்லாத பயங்கரக் கனவுகள் சில சமயங்களில் வருமே, அந்தமாதிரி கனவு காண்கிறேனா?' என்று புரியாமல் திகைத்தேன்.

நான் வாயடைத்துப் போய் உட்கார்ந்திருக்கும்போதே என் உயிரைத் துடிக்கச் செய்த அந்த விஷயங்களையெல்லாம் பத்மநாபன் கூறினார்.

''இந்துவை நான் என்னுடன் தான் வைத்துக் கொண்டிருந்தேன். அவளுக்குக் கல்யாணம் செய்ய வரன்கூடப் பார்த்தேன். அந்த நன்றிகெட்ட பெண் என்ன செய்தாள் தெரியுமா? என் வீட்டிலிருந்த வைரங்களைத் திருடிக் கொண்டு அந்த அய்யாக்குட்டியோ, ஆட்டுக்குட்டியோ ஒரு சினிமாக்காரன் இருந்தானே அவனுடன் ஓடிப்போய் விட்டாள். நீங்கள் வேண்டுமானால் என் மனைவியைக் கேட்டுப் பாருங்கள். எல்லோருக்கும் தெரியும்.''

எனக்கு அப்படியே வியர்த்துக் கொட்டிற்று. நெஞ்சில் யாரோ சம்மட்டியால் அடிப்பது போன்ற வலி உண்டாயிற்று. 'இதெல்லாம் பொய். என் இந்துவின் மீது நீங்கள் அநியாயமாய்ப் பழி சுமத்துகிறீர்கள். அவள் பச்சைக் குழந்தையைப் போன்ற உள்ளம் படைத்தவள். அவளைப் பற்றி ஒன்றும் சொல்லாதீர்கள்' என்று கத்த வேண்டும் போலிருந்தது. ஆனால் பேச்சே வரவில்லை.

''இவருக்கு இந்துவின் மீது என்ன துவேஷம் இருக்க முடியும்? அநாவசிய

மாக எதற்காகப் பழி சுமத்தப் போகிறார்? என்ன தான் சொல்லுகிறாரென்று முழுதும் கேட்டு விடலாமே?' என்றும் கூடவே தோன்றிற்று.

"அப்படி நீங்கள் கார்டியனாக இருந்தால், அவளை உடனே தேடிக் கண்டு பிடித்திருக்க வேண்டியது உங்கள் கடமையல்லவா? எப்படிப் பேசாமலிருந்தீர்கள்?" என்று கேட்டேன்.

"உண்மைதான். ஆனால் எப்படித் தேடுவது? குங்குமத்துறையிலும், சென்னையிலும் சல்லடை போட்டுச் சலித்து விட்டேன். கிடைக்கவில்லை. போலீஸில் எழுதி வைப்பதா? அப்படி வேண்டுமானால் செய்திருக்கலாம். ஆனால் அதற்கு என் மனம் இடந்தரவில்லை. வைரங்கள் விஷயம் ஏதேனும் வெளியே வந்து விட்டால் அவளுக்கு எவ்வளவு கஷ்டம்? அப்படி நன்றி கெட்ட பெண் எப்படியாவது போகட்டுமென்று விட்டு விட்டேன்."

"அவள் இப்போது எங்கே இருக்கிறாள் என்பது உங்களுக்குத் தெரியுமா?" என்று வினவினேன்.

"அது எனக்குத் தெரியாது. நான் தெரிந்துகொள்ள முயற்சிக்கவும் இல்லை. அவளை எங்கள் வீட்டுக்கு அழைத்துக் கொண்டு வந்த போது நான் என்ன நினைத்தேன் தெரியுமா? ரமேஷுக்கே அவளை மணம் செய்து வைக்க வேண்டுமென்று எண்ணிக் கொண்டிருந்தேன். ஆனால் அவள் இப்படித் துரோகம் செய்துவிடுவாளென்று நான் எதிர்பார்க்கவே இல்லை."

இதற்குள் ஒருவாறு என் படபடப்பெல்லாம் அடங்கிவிட்டது. 'கல்யாண விஷயமாய் ஏதோ வற்புறுத்தியிருப்பார்கள். அதனால்தான், அவள் ஓடிப் போய் விட்டாள். வேறு எந்தக் காரணமும் இருக்க முடியாது. எத்தனை வருஷங்களானாலும் எனக்காகக் காத்திருப்பேன் என்று அவள் எனக்கு வாக்குறுதி அளித்திருக்கிறாளே? அதை மீறி அவள் நடக்கவே மாட்டாள். இது நிச்சயம். இவருக்கு இந்து இருக்குமிடம் தெரியும். ஆனால் வேண்டுமென்றே தெரியாதென்கிறார். எப்படியாவது அதை அவரிடமிருந்து தெரிந்து கொள்ள முயற்சி செய்ய வேண்டும்' என்று எண்ணினேன்.

இந்துவைப் பற்றி இது தெரிந்த பிறகு, அவள் கல்யாண விலங்கில் அகப்பட்டுக் கொள்ளாமலிருக்க ஓடிப் போயிருப்பாளென்று தோன்றிய பின், இந்துவைப் பார்க்க வேண்டுமென்ற என் ஆவல் பதினாயிரம் மடங்காகப் பெருகிவிட்டது. 'எனக்காகத்தான் அவள் ஓடிப் போயிருப்பாள். அதே சமயத்தில் இவர்கள் வீட்டில் வைரமும் காணாமல் போயிருக்கும். ஆகவே இவர்களுக்கு அவள் மீது சந்தேகம் ஏற்பட்டிருக்கும்' என்று எண்ணினேன்.


பத்மநாபனைப் பற்றி எனக்கு அப்போது தெரியாதல்லவா? ஆகவே அவர் வேண்டுமென்று இந்துவின் மீது பழி சுமத்துகிறார் என்று நான் நினைக்கவில்லை.

நான் சுலோவை மணந்து கொள்ள வேண்டுமென்பதற்காக இந்து இருக்குமிடத்தைச் சொல்லமாட்டேனென்கிறாரே தவிர, அவளைப் பற்றிய மற்ற விஷயங்களை அவர் நிஜமாகவே நம்புகிறார் என்றும், அவள் ஓடிப்போனதால் மனம் நொந்து போயிருக்கிறாரென்றும் எண்ணினேன்.

இந்தச் சமயத்தில்தான் சினிமா நட்சத்திரம் 'அமர தாரா'வைப் பற்றிய விவரம் எனக்குச் சுலோசனா மூலம் தெரிய வந்தது. (தொடரும்)



தமிழ் நாட்டில் உள்ள மடங்கள் எல்லாம் தமிழ் வளர்க்கும் திருப்பணியில் அபாரமான சேவை செய்து வருகின்றன. ஸ்ரீ காசி மடம் திருப்பெருந் திரு அருள்நந்தித் தம்பிரான் சுவாமிகள் தமிழ் வளருவதற்குப் பல வழிகளில் தொண்டாற்றி வருகிறார். திருக் கோயில்களில் எல்லாம் நாயன்மார்களின் பாசுரங்களைக் கருங்கல்லிலே செதுக்கிப் பதிப்பித்து வருகிறார். பள்ளிக்கூடங்களில் மாணவ மாணவிகளுக்குத் தமிழ்ப் பாடல்களில் ஊக்கமும் உணர்ச்சியும் ஏற்படுவதற்குச் சிறந்த ஏற்பாடு செய்திருக்கிறார். அவர் ஏற்படுத்தியிருக்கும் 'கந்தர் கலிவெண்பா' போட்டி மூலநிதியிலிருந்து முதல் பரிசாக ரூ. 210 ஐ இந்த ஆண்டு பெற்றவர் குமாரி வஸந்தா. கும்பகோணம் பாணாதுறை உயர்நிலைப் பள்ளி நான்காவது படிவ மாணவி.



வருஷத்திற்கு வருஷம், முன்னைவிட, மேலும் மேலும் அதிகப் படியான மோட்டார்காருடையவர்கள்

ஸ்டாண்டர்ட்

பாட்டரிகளையே வாங்குகின்றனர்

ஏன் என்றால் . . .

அவையாவும் கவனமுறையில், சிறந்த விஞ்ஞான வசதியின் கட்டுப்பாட்டில் ஒரு நல்ல பாட்டரிக்கு இன்றியமையாத நிலைக்குகந்தபடி எல்லா பாகங்களையும்கொண்டு அமைக்கப்படுகின்றன. நாங்கள் அமோகமான அளவு பாட்டரி தயாரிப்பு செய்வதால் எங்கள் அமைப்புகளை இன்றைய நிலைக்குகந்தபடி வைத்திருக்க இயலுகின்றது.

சமீபகாலத்து—தொழில் நுணுக்கம்

உலகிலேயே சிறந்த அனுபவம் வாய்ந்த பாட்டரி தயாரிப்பாளர்களின் முன்னணியில் நிற்கும் ஸ்வீடன் தோத்து ட்யூடர்ஸ் அவர்களுடன் நாங்கள் 'டெக்னிகல்' தொடர்பு கொண்டிருப்பதால் அவர்களின் தொழில் நுணுக்கங்களையும், சொந்த 'பேடண்டு'களையும் நாங்கள் உபயோகிக்க முடிகிறது. நீங்கள் வாங்கும் எங்களின் ஒவ்வொரு பாட்டரியும் எங்களிருவர்களின் கூட்டு அனுபவத்தின் சின்னம் என்று கூறுவது மிகையல்ல. நியாயமான விலையில், நாடெங்கும் இவை விற்பனை, சர்வீஸ், செய்யப்படுகின்றன.

பற்பலவிதமான கார்கள் மற்றும் டிரக்குகளில் முதல் ஆரம்பத்தில் அமைத்தவை பெரும் பாலும் ஸ்டாண்டர்ட் பாட்டரிகளே.



ஸ்டாண்டர்ட் பாட்டரீஸ் லிமிடெட்
43, போர்பெஸ் ஸ்டிரீட், போர்ட், பம்பாய் 1

இந்தியாவில் லெட்-ஆஸிட் பாட்டரிகள் தயாரிப்பவர்களில் **மிகப் பெரிய** சுதேசி கம்பெனி

விநியோகஸ்தர்கள் : சுந்தரம் மோட்டார்ஸ் லிட்., மதராஸ் 6. மதராஸ் ஆட்டோ ஸெர்வீஸ் லிட்., மதராஸ், பங்களூர். டி. வி. சுந்தரம் அய்யங்கார் & ஸன்ஸ் லிட்., மதுரை. **மற்றும் கிளை ஆபீஸ்கள்.**



உங்கள் அழகிற்கு இந்த ஒழுங்கான பராமரிப்பு அவசியம்

சருமத்தை மென்மையாக்கும் இந்த க்ரீம் உங்கள் சருமத்தைச் சுத்தம் செய்வதுடன் அதை அழகுறச் செய்கிறது

உங்கள் சருமப் பாதுகாப்பை அலட்சியம் செய்யாதீர்கள்! செழுமை வாய்ந்த பாண்ட்ஸ் கோல்டு க்ரீமின் ஒழுங்கான பாதுகாப்பு உங்கள் சருமத்தை பொலிவுடனும், மென்மையுடனும் வைக்கிறது.

ஒவ்வொரு இரவிலும், பாண்ட்ஸ் கோல்டு க்ரீமை உங்கள் முகத்தில் அழுத்தித் தேயுங்கள். அதன் ஆழ்ந்து ஊடுருவிச் செல்லும் தன்மை, கண்களுக்குத் தென்படாத அழுக்கை அகற்றி, சருமத்தை முற்றிலும் சுத்தம் செய்கிறது. விடியற்காலையில் உங்கள் சருமம் எவ்வளவு புதுமையுடனும், சோபையுடன் கூடிய மென்மையுடனும் விளங்குகிறது என்று பாருங்கள்.

உங்கள் அழகைப் பாதுகாக்கிறது. நீங்கள் முகத்தைக் கழுவும் ஒவ்வொரு சமயமும், சருமத்தைப் பாதுகாக்கும் மதிப்புற்ற எண்ணெய் சத்துக்களை அகற்றி விடுகிறீர்கள். ஆனால் நீங்களும் பாண்ட்ஸ் கோல்டு க்ரீம் மூலம் உடனேயே இந்த இயற்கை சரும பாதுகாப்புகளை சுலபமாக மீண்டும் பெறுங்கள்.

இது உங்கள் சருமத்துவாரங்கள் கரடு முரடாவதையும் வறண்டு போவதையும் தடுக்கவும், சருமத்தின் தன்மையை மென்மையாகவும் நேர்த்தியாகவும் வைத்திருக்கவும் செய்கிறது.



பாண்ட்ஸ்
கோல்டு க்ரீம்

P. 2798 (H)



விவாக திட்டம்

ஜயலக்ஷ்மி

வாசலில் வண்டி வந்து நிற்கும் சத்தம் கேட்டது.

கைக் காரியத்தை அப்படியே போட்டு விட்டு வெளியே வந்தாள் குஞ்சம்மாள். வண்டியினின்றும் இறங்கி வந்தவர்களைப் பார்த்ததும் தூக்கி வாரிப்போட்டது அவளுக்கு. முந்தாநாள் மாலை புறப்பட்டுச் சென்றவர்கள் இன்று காலையிலேயே திரும்பி வருவதாவது! ரமணி கூட மதுரையில் நான்கு நாட்கள் இருந்து விட்டு வரப்போவதாகச் சொல்லி யிருந்தான். கொண்டுவிடப் போனவனையும் திரும்ப அழைத்துக்கொண்டு...என்ன இரகசாரமோ! தெரியவில்லையே......குஞ்சம்மாளின் உள்ளத்தில் ஆயிரமாயிரம் எண்ணங்கள் தோன்றித் தோன்றி மறைவதற்குள், அவளுடைய அருமை மகன் ரமணியும், ஆசைப் பெண் சுசீலாவும் அவள் அருகிலேயே வந்து விட்டார்கள்.

"என்னடா இது!" தொண்டையை விட்டு வார்த்தை வெளி வரவே மறுத்தது.

"அந்த வயிற்றெரிச்சலை ஏன் கேட்கிறாய்..." என்று ஆதியும் அந்தமுமில்லாமல் ஒரு வார்த்தையை உதிர்த்துவிட்டுச் சட்டையைக் கழற்றலானான் ரமணி.

"நேற்று நாங்கள் போய்ச் சேர்ந்ததும் சேராததுமாக இவருக்கு வேலை போய் விட்டது. 'நாட்டுப் பெண் வீட்டிலே கால் வைத்த வேளை ரொம்ப நன்றாக இருக்கிறதே! வந்தவுடனேயே அகமுடையானுக்கு வேலை போய்விட்டது. இன்னமும் என்னென்ன நடக்குமோ! யார் கண்டார்கள்! எனக்குப் பயமாக இருக்கிறது. உன் தங்கையை அழைத்துக் கொண்டு சீக்கிரமாக ஊருக்குப் போய்ச் சேர்' என்று சொல்லி விட்டார் என் மாமியார் அண்ணாவிடம். வேறு வழியில்லாமல் கிளம்பி வந்து விட்டோம்" என்றாள் சுசீலா எங்கோ பார்த்துக் கொண்டு. அவளுடைய மனத்தின் வேதனை வார்த்தைகளிலும் இழை பின்னித்தானிருந்தது.

"இதென்னடி கூத்தாயிருக்கிறது! அவனுக்கு வேலை போனால் அதற்கு நீயென்ன செய்வாயாம்!" என்று எரிச்சலாகக் கேட்டாள் குஞ்சம்மாள்.

"நான் அவர்கள் வீட்டுக்கு வந்த வேளை நல்ல வேளை இல்லை என்கிறார்கள்!" என்று கூறினாள் சுசீலா.

"வேளையாவது போதாவது! இந்தக் காலத்தில் இதை யெல்லாம் யார் நம்புகிறார்கள்!" என்று அலுப்புடன் கூறினாள் குஞ்சம்மாள்.

"யார் நம்பவில்லை! நாம் நம்பவில்லையா! அப்பா செத்துப் போனதற்குக் காரணம் விமலாவின் துரதிருஷ்ட ஜாதகம்தான் என்று நீ சொல்லவில்லையா! உன்னைப் போலவே என்னுடைய மாமியாரும் பழைமையில் பற்றுள்ளவராக இருக்கிறார். இதில் ஆச்சரியப்பட என்ன இருக்கிறது!" என்று படபடப்பாக வினவினாள் சுசீலா.

சிறிது நேரம் அங்கே அசாதாரணமானதொரு அமைதி நிலவியது. ரமணி பேசாமல் பின் கட்டை நோக்கிச் சென்றான்.

பிறகு மெல்லிய குரலில், "இதை யெல்லாம் உன் கணவன் நம்புகிறானா! அவன் என்ன சொல்லுகிறான்!" என்று கொஞ்சம் தயக்கத்துடன்தான் கேட்டாள் குஞ்சம்மாள்.

"அவர் நம்புகிறாரோ இல்லையோ எனக்குத் தெரியாது. நான் பார்த்தமட்டில் எல்லா ஆண் பிள்ளைகளும் அம்மா பேச்சுக்குப் பயந்து கொண்டுதான் வாழ்கிறார்கள். அண்ணாதான் ஒரு கட்டுப் பெட்டி என்று நினைத்திருந்தேன். உன் மாப்பிள்ளை அதற்கும் மேலே இருக்கிறார். போதுமா!" என்று ஆத்திரம் பொங்க வார்த்தைகளைக் கொட்டினாள் சுசீலா.

"சரி! யார் மேல் காட்ட வேண்டிய ஆத்திரத்தை என் மீது காட்டுகிறாய்! போதும். பல்லைத் தேய்த்து விட்டுக் காப்பி குடிக்க வா!" என்று சொல்லி விட்டுச் சமையலறைக்குள் சென்றாள் குஞ்சம்மாள்.

"காப்பியில்லாமல்தான் இப்போது வயிறு அழுகிறதாக்கும்..." என்று வெறுப்புடன் முணுமுணுத்தாள் சுசீலா.

சுசீலாவைவிட இரண்டு வயது மூத்தவள் தான் விமலா. அப்படி யிருந்தும் இருவரும் இணைபிரியாத தோழிகளாக இருந்தார்கள். ஒரே தெருவில், ஒரே பள்ளியில் என்று எல்லாமே இருவருக்கும் ஒன்றாகவே இருந்தது. அவர்களுடைய தோழமை கண்டு வியக்காதார் அத்தெருவிலேயே கிடையாது. விமலா அடிக்கடி சுசீலாவின் வீட்டுக்கு வருவாள். இருவரும் நேரம் போவதே தெரியாமல் பேசிக் கொண்டிருப்பார்கள். விமலாவின் அற்புதமான அழகும், அமரிக்கையான குணமும், தெள்ளிய அறிவும், இனிமையான சங்கீதமும் குஞ்சம்மாளின் மனத்தை வசீகரித்தது போல், நாளடைவில் ரமணியின் உள்ளத்தையும் கொள்ளை கொண்டன. ரமணி விமலாவை

மனப் பூர்வமாக நேசித்தான். விமலாவும் அவனுக்காகவே கமலாவின் வீட்டை அடிக்கடி முற்றுகையிட்டுக் கொண்டிருந்தாள் என்பதையும் இங்கே குறிப்பிட வேண்டும்.

இந்த ஒட்டுறவு கமலாவை எல்லையற்ற மகிழ்ச்சிக்குள்ளாக்கியது. தாயாரின் மனத்திலும் ஆசையை உண்டாக்கினாள். பலனும் கண்டாள். குஞ்சம்மாளுக்கு விமலா தன் மருமகளாக வருவதில் பரம சந்தோஷம். தன் கணவரிடத்தில் மெள்ள வார்த்தையை விட்டாள் அவள்.

மனைவியின் யோசனையைச் சுப்பிரமணிய அய்யரும் உற்சாகத்துடன் ஏற்றுக் கொண்டார். "குழந்தைகளின் சந்தோஷம்தான் நமது சந்தோஷம். ரமணிக்குப் பிடித்திருந்தால் கலியாணத்தை நடத்திவிட வேண்டியது தான்" என்றார் அவர்.

லௌகீக விஷயங்களிலும் விமலாவின் தகப்பனார் வேதமூர்த்தி கொஞ்சம் தாராளமாக இருக்கவே, அதி விரைவில் கலியாணம் நிச்சயமாகி விட்டது. அந்த மாதக் கடைசியில் முகூர்த்தமும் வைத்தார்கள்.

ரமணி ஒவ்வொரு நாளாக, நாட்களை எண்ணிக் கொண்டே வந்தான். கல்யாணத்துக்கு இன்னும் சரியாகப் பதினைந்து நாட்கள் தான் இருந்தன.

ஒரு நாளிரவு. சுமார் எட்டு மணியிருக்கும். தெருக் கோடியில் இருந்த அநுமார் கோயிலில் கதா காலட்சேபம் கேட்கப் போவதாகச் சொல்லி விட்டுப் போனார் சுப்பிரமணிய அய்யர். ஒன்பதரை மணிக்கு வாசலில் ஏதோ இரைச்சல் கேட்கவே, குஞ்சம்மாளும் ரமணியும் வெளியே ஓடினார்கள்.

ரிக்ஷா ஒன்று வாசலில் நின்று கொண்டிருந்தது. அதிலிருந்து சுப்பிரமணிய அய்யரை இருவர் மெள்ளக் கைப் பிடியாகப் பிடித்து அழைத்துக் கொண்டு உள்ளே வந்தார்கள்.

"என்ன! என்ன!" என்று பதறினார்கள் ரமணியும் குஞ்சம்மாளும்.



"'மாரை வலிக்கிறது. என்னைக் கொஞ்சம் என் வீட்டிலே கொண்டுபோய் விட்டு விடுகிறீர்களா' என்று கேட்டார். சற்றைக்கெல்லாம் தலை தொங்கி விட்டது. சிரமப்பட்டு ரிக்ஷாவில் ஏற்றிக் கொண்டு வந்தேன்!" என்றார் ஒருவர். அவர் அந்தத் தெருவிலேயே வசிப்பவர்தான்.

மெள்ள அவரைப் படுக்க வைத்தார்கள். மிகவும் சன்னமாக மூச்சு வந்து கொண்டிருந்தது. குய்யோ முறையோ என்று அடித்துக் கொண்டாள் குஞ்சம்மாள். "டாக்டரைக் கூட்டிவாயேன், அண்ணா!" என்று கத்தினாள் கமலா. ரமணி பட்டாகப் பறந்தான், டாக்டரை அழைத்துவர. பயனில்லை. டாக்டர் வருவதற்குள் சுப்பிரமணிய அய்யரின் ஆவி உடற்கூட்டைத் துறந்து சென்று விட்டது. டாக்டர் அவர் உடம்பைப் பரிசோதித்து விட்டு "ஹார்ட் வீக்" என்று கூறினார்.

கடியாரம் கருமமே கண்ணாக இருந்தது. காலம் கடமையைச் செய்தது. சுப்பிரமணிய அய்யரின் காரிய மெல்லாம் நடந்தேறியது.

நடக்கக் கூடாதது நடந்து விட்டது. நடக்க வேண்டியது......! விமலா—ரமணி கலியாணப் பேச்சை எடுக்கவே எல்லோரும் பயந்து கொண்டிருந்தார்கள்.

"அம்மா! விமலாவின் அப்பாவைத் திருச்சிக்கு மாற்றி விட்டார்களாம்!" என்றாள் மெள்ளக் கமலா தன் அன்னையிடம்.

"மாற்றல் ஆனால் போகட்டுமே! என்னை என்ன பண்ணச் சொல்லுகிறாய் அதற்கு..." என்றாள் வெறுப்புடன் குஞ்சம்மாள்.

"அப்ப அண்ணா கலியாணம்..." எப்படியோ கேட்டு விட்டாள் கமலா.

"அண்ணா கலியாணம் இப்ப ஏது! அதுவும் அந்தத் தொடைகாலிப் பெண்ணையா!" என்று சூள் கொட்டினாள் குஞ்சம்மாள்.

"என்னம்மா இது! நீ கூட இப்படி......" என்று இழுத்தாள் மகள்.

"நான் கூட என்ன! மகராஜி! கலியாணம் நிச்சயமாவதற்குள்ளேயே மாமனாரை உருட்டி விட்டாள். கலியாணம் வேறு ஆகிவிட்டால் இன்னும் யார் யாருக்கு என்னென்னவெல்லாம் ஏற்படுமோ! யார் கண்டார்கள்! வேண்டாம் அந்தப் பெண். விமலா இல்லாவிட்டால் இன்னொரு கமலா அகப்படாமல் போய்விடுவாளா என்ன!" என்று அழுத்தம் திருத்தமாக அசைக்க முடியாத உறுதியுடன் கூறினாள் குஞ்சம்மாள்.

கல்லாகச் சமைந்து போனாள் கமலா. ரமணியும் தாயாருக்கு "இதெல்லாம் அர்த்தமற்ற நம்பிக்கையம்மா......!" என்று எவ்வளவோ சொல்லிப் பார்த்து விட்டான். குஞ்சம்மாள் அசைந்து கொடுக்கவில்லை. அதற்கு மேலும் வற்புறுத்த அவனுடைய அன்பு மனம் இடங் கொடுக்கவில்லை. 'தாயார், தனது வயது வந்த காலத்தில் பெண்கள் பெரும் பூஷணமாக மதித்துப் போற்றும் மாங்கல்யத்தை இழந்து விட்டு எல்லையற்ற சோகத்தில் மூழ்கிக் கிடக்கிறாள். அவளது மனப் புண்ணை, அவளுக்கு விருப்ப மில்லாத விஷயத்தை வற்புறுத்தி

மேலும் இளைத் துன்புறுத்தக் கூடாது. காலம் ஆற்றட்டும் அவன் மனப் புண்ணை' என்று சகிப்புத் தன்மை மேலிடப் பேசாமலிருந்து விட்டான்.

விமலாவின் தகப்பனார் வேத மூர்த்தியும் எவ்வளவோ கேட்டுப் பார்த்தார். "இந்த வருஷம் இல்லாவிட்டால் வேண்டாம். அடுத்த வருஷமாவது கலியாணத்தை நடத்தி விடுவோம்..." என்றார்.

"வேண்டவே வேண்டாம். உங்கள் பெண்ணுக்கு வேறு வரன் பாருங்கள்!" என்று கண்டிப்புடன் கூறிவிட்டாள் குஞ்சம்மாள். அவரும் மனமுடைந்து போய் விட்டார். வருஷங்கள் இரண்டு விரைவில் சென்று மறைந்தன. கொஞ்சம் கொஞ்சமாகக் கணவரின் மறைவினால் ஏற்பட்ட துக்கத்தை மறந்து வந்த குஞ்சம்மாள் மகனை வேறு யாரையேனும் மணந்து கொள்ளும்படி கூறலானாள். மயிலாப்பூர் மஞ்சுளா, கும்பகோணம் குந்தளா, புதுக்கோட்டை புஷ்பா என்று எவ்வளவோ பெண்களைப் பற்றி வர்ணித்தாள் ரமணியிடம். அவன் "எனக்கு இப்போதைக்குக் கலியாணமே வேண்டாம். என்னைத் தொந்தரவு செய்யாதே!" என்று உறுதியாகக் கூறிவிட்டான்.

"சுசீலாவுக்காவது பாரேன். அவளுக்கும் வயதாகிக் கொண்டே வருகிறதே!" என்றாள் குஞ்சம்மாள்.

அன்னையின் அந்த வார்த்தையைச் சிரமேற்கொண்டான் ரமணி. சுசீலாவுக்கு வரன் பார்க்கத் தொடங்கினான். அவனுடைய அதிர்ஷ்டம் அதிகச் சிரமமில்லாமல் ஒரு வரன் கிடைத்தது. நிச்சயம் செய்து விட்டான். கிட்ட நெருங்கி விசாரித்ததில் பையன் விசுவநாதன் ரமணியின் பால்ய நண்பனாகவே இருந்து விட்டதில் ரமணிக்குப் பரமதிருப்தி.

"இல்லையம்மா! நான் நான்கு நாட்கள் தங்கி ஆசைதீர மீனாக்ஷியைத் தரிசனம் செய்து விட்டுத்தான் வரப்போகிறேன்" என்றான் ரமணி.

ரயில் பிரயாணத்தின் போது சுசீலா ரமணியிடம், "நீ விமலாவை நினைத்து உருகிக் கொண்டிருக்கிறாயே. அவள் வேறு யாரையாவது மணந்து கொண்டிருந்தால்...!" என்று கவலையுடன் கேட்டாள்.

"ஒருகாலும் விமலா மணந்து கொள்ள மாட்டாள், சுசீலா! அவள் எனக்காக எவ்வளவு காலம் வேண்டுமானாலும் காத்திருப்பதாகக் கூறியிருக்கிறாள்!" என்று ரமணி கூறின பிறகுதான் சுசீலாவின் மனம் கொஞ்சம் அமைதியுற்றது.

மூன்றின நாள் முதன் முதலில் புக்ககத்தில் கொண்டு விட அழைத்துச் சென்ற பெண்ணை, போன மறு நாளே அழைத்துக் கொண்டு வந்து நிற்கிறான் பிள்ளை. குஞ்சம்மாளின் பெற்ற வயிறு பற்றித்தான் எரிந்தது.

காப்பி சாப்பிட வராமல் எங்கே என்ன செய்கிறாள் என்று கூடத்துப் பக்கம் எட்டிப் பார்த்தாள் குஞ்சம்மாள். அங்கே சுசீலா சித்திரமே உருவமாய் ஆடாமல் அசையாமல் ஊஞ்சலில் உட்கார்ந்திருந்தாள்.

"காப்பிகூடச் சாப்பிடாமல் பட்டினியாக உட்கார்ந்திருந்தால் உன் அகமுடையான் ஓடி வந்து உன்னை அழைத்துக் கொண்டு போய் விடுவான் என்கிற எண்ணமா!" என்று கேட்டபடியே காப்பியைக் கொண்டு வந்து ஊஞ்சலின் மேல் வைத்தாள் குஞ்சம்மாள்.

"அவர்களைப் பற்றி ஏன் குற்றம் சொல்லுகிறாய்! என்னுடைய அதிர்ஷ்டம் அப்படி. நான் போன வேளை அவருக்குப் பெரிய வேலையாகிச் சம்பளமும் உயர்ந்திருந்தால்......" என்றாள் சுசீலா.

ஆனிமாதக் கடைசியில் அதாவது முப்பதாம் தேதியன்று சுசீலாவின் கலியாணம் மிகவும் விமரிசையாக நடந்தேறியது. கலியாணத்துக்கு மறுநாளே ஆடிமாதம் பிறந்து விட்டபடியால், 'பெண்ணை ஆவணி பிறந்ததும் கொண்டு விட்டுவிடுங்கள்' என்று கூறி விட்டுப் பிள்ளை வீட்டார்கள் சென்று விட்டார்கள்.

குஞ்சம்மாள் விழுந்து விழுந்து பெண்ணுக்கு மூட்டைகள் கட்டினாள். அவள் வேலையும் முடிந்தது. ஆடியும் முடிந்து, ஆவணியும் பிறந்தது. தங்கையைக் கொண்டு விடக் குதூகலமாக மதுரைக்குக் கிளம்பினான் ரமணி.

"கொண்டு போய் விட்டு விட்டுச் சீக்கிரம் வந்து விடடா!" என்றாள் குஞ்சம்மாள்.



"உன்னைத் தலையில் வைத்துக் கொண்டு கூத்தாடுவார்கள்!" என்றாள் குஞ்சம்மாள் எரிச்சலாக.

"சந்தேகமில்லாமல்! நான்தான் அதிர்ஷ்டமற்றவள்!" என்றாள் சுசீலா அழுத்தமாக.

"ஒருவரையும் சொல்வதில் குற்றமில்லை. எல்லாம் நான் செய்த பாவம்!" என்று முடிவாகக்கூறினாள் குஞ்சம்மாள்.

★

சுசீலாவின் புக்ககத்திலிருந்து ஒரு சமாசாரமும் தெரியாமலேயே இரண்டு மாதங்கள் சென்று விட்டன. வாய்க்கு வாய் அவர்களைத் திட்டிக் கொண்டேயிருந்தாள் குஞ்சம்மாள். அவள் அவர்களை வையும்போதெல்லாம், "நீ மட்டும் ரொம்ப நல்லவளாக்கும்!" என்று கேட்கத்



'அனஸின்'

வில்லைகளில் கலந்துள்ள நான்கு

மருந்துகளால் உங்கள் வலியை நிவர்த்தி செய்து கொள்ளுங்கள்

'அனஸின்' விஞ்ஞான முறைப்படி சேர்க்கப்பட்ட நான்கு மருந்துகளின் கலப்பாகும். அவை நரம்புகளின் முக்கிய சேர்க்கை பாகங்களின் கூட்டாக வேலை செய்து விரைவில் வலி, தலைவலி, ஜலதோஷம், ஜுரம், பல்வலி, மற்றும் தசை நார்களில் நோவு இவற்றை நீக்கும்.



அனஸினில் அடங்கிய மருந்துகள் :—

1. கொயினா: ஜுரத்தடுப்புகளையும், பலவிருத்தி செய்வதற்கும் பிரசித்தி பெற்றது. ஜுரத்தை குறைப்பதில் மிகத் துரிதமானது.
2. காப்பீன்: பலஹீனத்திற்கும், மனச்சோர்வுக்கும் விதமான தூண்டுகோல் மருந்தாக விதிக்கப்பட்டிருக்கிறது.
3. பினஸிடின்: ஜுரத்தடுப்பு, வலி நிவாரணத் தன்மைகளுக்கு பெயர் பெற்றது.
4. ஆஸிடில்ஸலிஸிலிக் ஆஸிட்: தலைவலி அது போன்ற எல்லா வலிகளையும் நிறுத்துவதற்கு உபயோகமுள்ளது.

அனஸினிலுள்ள இந்த நான்கு மருந்துகளும் ஒரு டாக்டரின் குறிப்புக்கு ஒப்பாகும். 'அனஸின்' ஹிருதயத்திற்கு தீங்கு விளைவிப்பதோ அல்லது வயிற்றுக்கு கோளாறு உண்டாக்குவதோ கிடையாது. வலி, தலைவலி, ஜலதோஷம், ஜுரம், பல் வலி மற்றும் தசைகளில் வலி முதலியவற்றிலிருந்து விரைவிலும், பத்திரமாகவும், நிச்சயமாகவும் நிவாரணம் பெற எப்பொழுதும் அனஸினையே கேட்டு வாங்குங்கள்.

லக்ஷக்கணக்கான மக்களுக்கு நிவாரணம் அளிக்கின்றது.

A. 44


தவறுவதில்லை சுசிலா. இந்த நிலையில் ஒரு நாள் திடுதிப்பென்று காரியாலயத்திலிருந்து வரும்போது ரொம்பவும் உற்சாகத்துடன் வந்தான் ரமணி.

"சுசிலா! விசுவநாதனுக்கு வேலை கிடைத்து விட்டதாம். அதே கம்பெனிதானும். ஆனால் நூறு ரூபாய் சம்பளம் அதிகமாம். உதவி மானேஜராக நியமித்திருக்கிறார்களாம். உன்னை அழைத்துப் போக இன்று அல்லது நாளை வருவதாக என் நண்பனொருவனிடம் சொல்லியனுப்பியிருக்கிறான் விசுவநாதன்!" என்று கூறினான் ரமணி.

தாயும் மகனும் மகிழ்ச்சிக் கடலில் மூழ்கித் திளைத்தார்கள். குஞ்சம்மாள் விழுந்து விழுந்து பக்ஷணம் செய்ய ஆரம்பித்தாள்.

மறுநாள் காலை.

"இந்த மைசூர்பாகு சரியாக இருக்கிறதா, பாரு!" என்று கூறிக்கொண்டே முன் பக்கம் வந்தாள் குஞ்சம்மாள். அதை வாங்கிச் சுவை பார்த்த ரமணியும் சுசிலாவும் "ரொம்ப ஜோர்! அம்மா, மாப்பிள்ளை மைசூர்பாகு டப்பாவையே தலையணைக்குப் பதிலாகத் தலைமாட்டில் வைத்துக் கொண்டு விடப் போகிறார்!" என்றார்கள் ஏக காலத்தில்.



சென்னை நகரில் நூற்றுக்கணக்கான நாடகங்கள் நடத்தி வெற்றிக் கொடி பிடித்த நவாப் ராஜமாணிக்கம் குழுவினர் இப்பொழுது சேலத்துக்குச் சென்றிருக்கின்றனர். நவாப் ராஜமாணிக்கம் குழுவினர் சென்னையிலிருந்து புறப்படுவதற்கு முன் நடத்திய கடைசி மங்கள நாடகத்துக்குச் சென்னை மேயர் திரு வி. ஆர். ராமநாத ஐயர் தலைமை வகித்துச் சிறப்பித்தார். அன்று சென்னையில் உள்ள நாடகாபிமானிகள் நவாப் ராஜமாணிக்கத்துக்கு மலர் மாலைகள் சூட்டி, பல அன்பளிப்புகளும் அளித்துக் கௌரவித்தனர்.

"இருக்கட்டும், உன் அதிர்ஷ்டத்தைப் பற்றிக் குறை கூறிக்கொண்டாயே! இப்ப பார்த்தாயா! வேலை போனதும் நல்லதுக்குத்தான். மதிப்பான வேலை. அதிகப்படியான சம்பளம். உன் அதிர்ஷ்டத்துக்கு என்னடி குறைச்சல்!" என்று கேட்டாள் குஞ்சம்மாள் குரலில் பெருமிதம் பொங்க.

"குறைச்சல் என்று யார் சொன்னது!" என்று கேட்டுக் கொண்டே திடுதிப்பென்று அங்கு வந்து நின்றான் சுசிலாவின் கணவன் விசுவநாதன்.

புடவையை இழுத்துப் போர்த்திக்கொண்டு தூண் மறைவில் ஒளிந்து கொண்டாள் குஞ்சம்மாள்.

"வாப்பா, வா!" என்று உற்சாகமாய் வரவேற்றான் ரமணி.

"போகச் சொன்ன என்னை மறுபடியும் அழைத்து உயர்ந்த பதவியில் அமர்த்தியது யார் தெரியுமா!" என்றான் விசுவநாதன்.

"யாரு!" என்றான் ரமணி.

"நீங்கள் துரதிர்ஷ்டம் பிடித்தவள் என்று ஒதுக்கி விட்ட விமலாவின் தகப்பனார் வேதமூர்த்திதான்!" என்றான் விசுவநாதன்.

"நிஜமாகவா!" என்று ஆச்சரியத்துடன் கேட்டாள் சுசிலா.

"ஆமாம். பழைய மானேஜர் என்னை 'டிஸ்மிஸ்' செய்தார். புதிதாக வந்தார் வேதமூர்த்தி. அவரிடம் போய் என் நேர்மையைப் பற்றி முறையிட்டேன். 'அடடா! எனக்கு ரொம்ப வேண்டியவர்களின் மாப்பிள்ளை அல்லவா!' என்று கேட்டு விட்டு உடனே உதவி மானேஜராகப் போட ஏற்பாடு செய்து விட்டார். பிறகு அவர் சொல்ல நான் எல்லாவற்றையும் தெரிந்து கொண்டேன். அவர் பெண் விமலாகூடக் கல்யாணமே வேண்டாம் என்று பிடிவாதமாக இருக்கிறாளாம்.

"நான் ஊருக்குப் போய் எல்லாவற்றையும் கேட்டு ஒரு முடிவு செய்து கொண்டு வருகிறேன் என்று சொல்லி விட்டுக் கிளம்பி வந்தேன். இப்போது என்ன சொல்லுகிறீர்கள்! விமலாவின் தகப்பனார்தான் எனக்கு உயர்ந்த பதவி அளித்தார்: அதனால்தான் சுசிலாவும் திரும்பவரும் பாக்கியம் பெற்றாள்" என்று கூறிய விசுவநாதன் கேள்விக்குறியுடன் மாமியாரின் பக்கம் பார்த்தான்.

"என்று முதல்நாள் போன பெண் மறுநாளே திரும்பி அனுப்பப்பட்டுத் திரும்பி வந்தாளோ, அன்றே என் மனம் மாறி விட்டது. எதுவும் தனக்கு வந்தால்தானே தெரிகிறது! நீங்களே மேற்கொண்டு செய்ய வேண்டியதைச் செய்து ரமணியின் கலியாணத்தை முடித்து விடுங்கள்!" என்று கூறினாள் குஞ்சம்மாள் மறைவில் நின்றபடியே.

பிறகு அந்த வீடே மகிழ்ச்சி வெள்ளத்தில் மிதந்தது என்றால் மிகையாகாது. எல்லோருக்கும் அவ்வளவு சந்தோஷம்.

★

மறு நாளே சுசிலாவை அழைத்துக் கொண்டு கிளம்பி விட்டான் விசுவநாதன்.

இருவரையும் ரயிலேற்ற எழும்பூருக்குப் போனான் ரமணி.

"எனக்காக நீங்கள் ரொம்பச் சிரமப்பட்டு விட்டீர்கள், விசுவநாதன்! எவ்வளவு பொய்கள்! பாவம் அம்மா! அதை அப்படியே நம்பி விட்டாள்!" என்றான் ரமணி.

"ரொம்பப் புகழாதே ரமணி! வேலை போய் விட்டது என்று சொன்னது ஒன்று மட்டும் தானே பொய். மற்றப்படி எனக்குப் பெரிய வேலையானதோ, வேதமூர்த்தி என் மானேஜராக வந்திருப்பதோ பொய்யல்லவே!"

"பாவம் சுசிலா! எனக்காக இரண்டு மாதம் உன்னை விட்டுப் பிரிந்து கஷ்டப்பட்டு விட்டாள்!" என்று கூறினான் ரமணி.

"போதும் பேசாமலிரு அண்ணா! நாங்கள் அடுத்த தடவை வருவதற்குள் விமலா என் மன்னியாக நம் வீட்டுக்கு வந்து விடுவாள். பிறகு பாரேன், நான் உன்னை எப்படிக் கேலி பண்ணுகிறேன் என்று!" என்று கூறிச் சிரித்தாள் சுசிலா. நேரம் வரவே ரயிலும் நகர்ந்தது.

படித்துப் பாருங்கள்

உதிர்ந்த மலர்

வரதன் மணமானவன். அவன் மனைவி பத்மா அழகாய்த்தான் இருந்தாள். அவனும் அவளிடம் பிரியமாகத்தான் இருந்தான். அப்படியெல்லாம் இருந்தும் அவன் மனம் சலனமடைந்தது. இதற்குத் தக்க துணையாகக் கேதாரியும் சேர்ந்தான். வள்ளி வேலைக்காரியானாலும் பண்பு நிறைந்தவள்; கொண்டவனின் அன்பை இழந்த பின்பும் பெண்மையை இழந்து விடாமல் கத்தி முனையில் நடந்து தீரத்துடன் பேணினாள். கணவனின் தன்மையை அறிந்த சரோஜா, வேறெந்தப் பெண்ணும் சாதாரணமாகச் சகிக்கக் கூடாத நிலைமை தன் இல்வாழ்வில் ஏற்பட்ட பின்பும் அதை நல்வாழ்வாக்க முயன்று கொண்டிருந்தாள். சேஷாத்திரி—கமலா இருவரது வாழ்விலும் வயது வித்தியாசம் இமாலய வடிவில் குறுக்கே நின்றது. அப்படியிருந்தும் அழகி கமலா அந்த விசுவரூபவேற்றுமையை ஸ்தூலப் பொருளாகத் தூரத் தள்ளிவிட்டு, சூக்ஷ்மமான இதயங் கலந்த அன்பில் தன்னைப் பிணைத்துக் கொண்டு ஆனந்தமாக வாழ்ந்தாள்.

மேற்கூறிய நிகழ்ச்சிகள் எல்லாம் எப்படிச் சாத்தியம் என்று நினைக்கிறீர்களா? அப்படியானால் இந்த நாவலைப் படித்துப் பாருங்கள்! ஒவ்வொரு நிகழ்ச்சிக்கும் உரிய முறையில் விடை கிடைக்கும்.

மனித உள்ளத்தில் இடைவிடாது நிகழும் உணர்ச்சிப் போராட்டங்களை அப்படியே கண்டு அறிந்து அவற்றை எழுத்திலும் கொண்டு வருவது என்பது எளிதிற் கைகூடும் காரியமல்ல. அந்த முயற்சியை மேற்கொண்டு இந்த நூலாசிரியர் வெற்றி பெற்றிருக்கிறார் என்றே கூறலாம்.

கதையின் முடிவில், வேலைக்காரி வள்ளி கடுமையான சோதனையை எதிர்த்து நின்று பிறகு போன இடம் தெரியாமல் மறைந்து விட்டதாகப் புனைந்திருப்பது மிகவும் சரியானது. அவளுக்காக வரதனின் உள்ளம் ஏங்கியது; நெறி பிறழ்ந்த கேதாரியின் உள்ளம் அவள்மீது மாசு கற்பிக்கிறது. இவ்வாறு இந் நூலில் ஆங்காங்கு மனித இயல்புகளின் வேறுபாடுகளை எடுத்துக் காட்டியிருக்கிறார் ஆசிரியர்.

எழுதியவர்: "உமா சந்திரன்"; பிரசுரம்: பூர்ணிமா பிரசுரம், கதீட்ரல், சென்னை — 6; விலை: ரூ. 1—14—0.
—விஜயம்

பளிங்கு மண்டபம்

உழைப்பினால் உயரலாம்; ஏழையின் துயரம் ஏழைக்குத்தான் தெரியும் என்ற உயரிய கருத்துக்களை அடிப்படையாகக் கொண்டு எழுதப்பட்டது இந்நூல். ஏழைச் சிறுவன் மாதவன் தன் வறுமையிலும் தன் இலட்சியத்தைக் கடைப்பிடித்துத் தன் வாழ்க்கை நிலையில் உயர்ந்தான். அதோடு மட்டுமல்ல; தன்னைப் போலவே யிருந்த ஏழைச் சிறுவர்களின் வாழ்வை உயர்த்தப் பாடுபட்டான். அந்த ஏழைச் சிறுவனின் வாழ்க்கைச் சித்திரத்தைத் திறம்படச் சித்திரித்திருக்கிறார் ஆசிரியர். விலை ரூ. 1-8-0.

எங்கள் குடும்பம்

கதா பாத்திரங்களின் குண சித்திரத்தை விளக்கி அவர்கள் தோற்றத்தை நம் கண்முன்னே நிறுத்தித் தெரிந்து கொள்ளும்படியாகச் செய்வது கஷ்டமான காரியம். ஒரு குடும்பத்தில் அப்பா, அம்மா, தாத்தா, பாட்டி, அக்கா, அண்ணன், தம்பி இவர்களின் குண சித்திரத்தை 'எங்கள் குடும்பம்' என்னும் இப்புத்தகத்தில் ஆசிரியர் ஹாஸ்ய ரஸத்தோடு வழங்கியிருக்கிறார். விலை ரூ. 0-12-0.

சத்ரபதிக் கோட்டை

பயத்தினால் தீமை விளையும் என்று கேட்டிருக்கிறோம். ஆனால் ஒரு சிறுவனின் பயத்தினால் ஒரு மாபெரும் அரசனின் இன்னுயிரையே காக்க முடிந்தது என்பதைச் சத்ரபதிக் கோட்டை எடுத்துக் காட்டுகிறது. இக்கதை சிவாஜியின் வாழ்க்கையை அடிப்படையாகக் கொண்டு எழுந்த கற்பனைச் சித்திரம்.

மேலும் இந்நூலில் பத்து அழகிய சிறு கதைகள் இடம் பெற்றிருக்கின்றன. தீங்கிழைத்த குருவுக்குச் சிஷ்யன் குரு காணிக்கை செலுத்தும் கதை நன்றாயிருக்கிறது.

இத்தொகுதிக்கு முன்னுரை வழங்கிய டாக்டர் மு. வரதராசனார், "கதைகள் கற்பனைத்திறனுடன் அமைந்து சுவை பயக்கின்றன..." என்று கூறியுள்ளார். இந்நூலின் சிறப்புக்கு இந்தப் பாராட்டுதலே போதுமானதல்லவா! விலை ரூபாய் 1—0—0.

மூன்று நூல்களையும் எழுதியவர்: திரு கெ. சி. தெய்வசிகாமணி, பிரசுரம்: மலர் நிலையம், 133, பிராட்வே, சென்னை-1.
—பி. எஸ். மணி

புதுமை பெறுக!
இதம் பெறுக! நளினமாய் இருங்கள்!
நாள் முழுதும்!

சார்மிஸ் டால்கம் பவுடரை உபயோகித்து, அதன் சிறந்த நறுமணத்தை அனுபவியுங்கள். குளித்த பின் சார்மிஸ் டால்கம் பவுடரை மேலெங்கும் தூவுக. அது புதுமையும் குளுமையும் தருகிறது. அரிப்பு வராமல் அதன் பட்டுப்படலம் பாதுகாக்கிறது. சார்மிஸ் டால்கம் பவுடர் சிக்கனமான அத்யாவசியப் பொருள். இன்பம், அழகின் இரகசியம் அது.




சார்மிஸ்
டால்கம் பவுடர்
மிகவும் சிறந்த இன்ப மணமுள்ளது

கால்கேட் சார்மிஸ் வாசனைத்திரவியங்களில் சகல- உபயோககிரீமும் ஸ்நோவும் உள்ளன- எல்லாவித சருமங்களுக்கும் ஏற்ற இரு பிரபல வதன கிரீம்கள்

CH-TP6/5

அநுமகரத்வஜா

ஷட்குண மகரத்வஜா சக்தி வாய்ந்தது



சுத்தமான ஷட்குணத் தங்கத்தினால் மிகவும் சிறிய அளவில் ஆனால் பிரமாத சக்தி வாய்ந்ததாக உயர்ந்த முறையில் தயாரிக்கப்பட்டுப் பிறகு மாத்திரை வடிவம் ஆக்கப்பட்டிருக்கிறது. உபயோகிப்பதற்கு மிகவும் சுலபம். மற்ற மகரத்வஜங்களை விடச் சக்தி வாய்ந்தது.

○●○

14 மாத்திரைகள் ஒரு புட்டியில் இருக்கின்றன. (7 முழு அளவுகள்)

○●○

பெங்கால் கெமிகல்

கல்கத்தா - பம்பாய் - கான்பூர்

சென்னை ராஜ்ய டிஸ்ட்ரிப்யூட்டர்கள்

ஆர். எல். கௌடர் & கம்பெனி

59, பந்தர் தெரு : சென்னை - 1

ஆந்திர ராஜ்ய டிஸ்ட்ரிப்யூட்டர்கள்

சத்ய நாராயண பார்மஸி

குமரி தெரு, விஜயவாடா-1 & விஜயநகரம்




மதிப்பில் சிறந்த ப்ளேட் எதுவென்று நீங்கள் எளிதில் சொல்லமுடியும்

ஒரு ப்ளேடின் மேன்மையை நிர்ணயிக்க உறுதியான பரீக்ஷை அதைக்கொண்டு க்ஷவரம் செய்துகொள்வதுதான்! ஒரு சிறந்த, கூர்மையான ப்ளேட் சுக க்ஷவரத்தை ஒரு தடவையல்ல, அநேகம் தடவைகள் அளிக்கிறது.

ஸெவன் ஓ'க்ளாக் ப்ளேடுகளை ஏது தயாரிப்பான வேறெந்த ப்ளேடுகளுடன் ஒப்பிட்டுப் பாருங்கள். உங்கள் முகத்தில் எவ்வளவு சுலபமாக வழுக்கிக்கொண்டு செல்லுகிறது. அதற்குப் பிறகு எவ்வளவு மழுமழுப்பாக உங்கள் முகம் ஆகிறது என்பதையும் கவனியுங்கள். அதே போல் அதன் கூர்மை எவ்வளவு காலத்திற்கு நீடித்திருக்கிறதென்றும் பாருங்கள், நாளுக்கு நாள் அதன் சுக க்ஷவரத்தை அனுபவிப்பீர்கள்.

ஸெவன் ஓ'க்ளாக் ப்ளேடுகள் எவ்வளவு நேர்த்தியாக இருக்கின்றன என்பதை, அவைகளைக்கொண்டு க்ஷவரம் செய்துக்கொண்டு பாருங்கள். இதில் தவறுதலுக்கு இடமேற்படுவதில்லை. ஸெவன் ஓ'க்ளாக்தான் உங்கள் பணத்திற்குப் பெறுமானம் கொடுக்கிறது என்று தெரிந்துகொள்ளுவீர்கள்.

7 o'clock



BLADES

ஸெவன் ஓ'க்ளாக் ப்ளேடுகள்

போட்டிக் கதை



கணவனின் தெய்வம்

காழையடி சபாரத்தினம்

அன்று நடந்த விருந்துக்கு அழைப்பு வந்ததின் பேரில் போயிருந்தேன். அங்கு வேணுவும் வந்திருந்தான். அவன் பால்ய நண்பன். அவனோடு பேசிக் கொண்டிருக்கும் போது ஒரு மேல் நாட்டு உடை அணிந்த பெண் உள்ளே நுழைந்தாள். பெரிய செல்வந்தர்கள் போல் தோன்றிய மூவர் எழுந்து அவளுக்கு மரியாதை செலுத்தினர். அவளும் பதில் மரியாதை செலுத்தினாள். அவள் மரியாதை செலுத்திய விதம் அவளொரு இந்துப் பெண் மணியோ வென்று எண்ணத் தூண்டியது. இரண்டு கரங்களையும் குவித்து நமஸ்கரித்தாள்.

என்னுடைய கவனத்தை மட்டுமல்ல, என் நண்பன் கவனத்தையும் அவள் கவர்ந்திருந்தாள். அவளது நிர்மலமான—களங்கமற்ற முகத்தோற்றம் அவள்மீது எனக்கு ஒருவித மரியாதையை உண்டு பண்ணியது. அது தவிர, அவள் முகம் எங்கேயோ நன்றாகப் பார்த்துப் பழகியது போலிருந்தது.

ஆனால் என் நண்பன் அவளைப்பற்றிக் கொண்டுள்ள அபிப்பிராயம் என்னுடையதற்கு முற்றிலும் மாறானது என்பது பின்னால்தான் எனக்குத் தெரிய வந்தது.

"என்னடா, அவளை அப்படியே விழுங்கி விடுவாய் போலிருக்கிறதே!" என்றான் வேணு. நான் சட்டென்று திரும்பினேன்.

"இல்லை……இவளை எங்கேயோ பார்த்த மாதிரி யிருக்கிறதே யென்று…" என்று இழுத்தேன்.

"பார்த்திருப்பாய்" என்று ஏளனமாகக் கூறி விட்டு உரக்கச் சிரித்தான்.

ஏனோ என்னால் அந்தச் சிரிப்பைத் தாங்க முடியவில்லை. தான் சிரிப்பதை என்னால் சகிக்க முடியவில்லை என்பதை அவன் உணர்ந்து கொண்டுதா னிருக்கவேண்டும். இல்லாவிடில் அவன் சிரிப்பை நிறுத்திவிட்டு என் முகத்தை ஏன் அப்படிப் பச்சாத்தாபத்தோடு பார்க்கப் போகிறான்!

"அவளை உனக்குத் தெரியுமா!" என்றேன்.

"தெரியாமலென்ன. அவளொரு அமெரிக்கப் பெண். அவள் இங்கு வந்து சுமார் எட்டு வருஷங்கள் ஆகின்றன. அவள் தன்னைத் திருமதி ரபேட்ஸன் என்று கூறிக் கொள்ளுகிறாள். ஆனால் இவள் ஒரு ஜப்பானியப் போர் வீரனை மயக்கித் தன் வலையில் போட்டுக் கொண்டவள் என்று பேசிக் கொள்ளுகிறார்கள். இப்பொழுது சுமார் முப்பத்தைந்து வயதிருக்கும். பார், எவ்வளவு அழகாயிருக்கிறாள். யுவதியா யிருந்தபோது எத்தனை பேரை மயக்கி யிருப்பாளோ!"

"சீ, என்ன பேச்சு பேசுகிறாய்!" என்றேன் ஆத்திரத்தோடு.

அவன் என்னை ஆச்சரியத்தோடு பார்த்தான். "ஆமாம், இவளை எங்கோ பார்த்த மாதிரி இருக்கிறதென்றாயே, எங்கேயென்று கண்டு பிடித்து விட்டாயா!"

"நிச்சயமாக இவளை எங்கேயோ பார்த்திருக்கிறேன். ஆமாம், இவளுடைய பெயர் என்னவென்று சொன்னாய்!"

"உண்மைப் பெயர் என்னவென்று எனக்குத் தெரியாது. திருமதி ரபேட்ஸன் என்று கூறுகிறாள்."

"ஏன் அவளுடைய பெயரைக்கூட நீ சந்தேகிக்கிறாய்!"

"அவளைப் பற்றி அப்படி வதந்திகள் இங்கே உலாவி வருகின்றன. ஒரு தனி வீட்டில் அவள் மட்டும் பத்து வயசு மகனோடு வசித்து வருகிறாள். செலவுக்குப் பணம் எங்கிருந்து வருகிறதோ, தெரியாது. அவள் வீட்டில் ஒரு சிங்களப் பெண் வேலைக்கு இருக்கிறாள். அவளுக்குக்கூட இந்த வெள்ளைக்காரியின் மர்ம வாழ்வு புரியாத புதிராகவே இருக்கிறதாம்."

நான் அவளிருந்த மேசைப் பக்கம் திரும்பினேன். அவள் என்னையே உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தாள். அவள் என்னைப் பற்றி ஏதாவது தப்பாக எண்ணிவிடப் போகிறாளே என்று நான் முகத்தை மறுபக்கம் திருப்பிக் கொண்டேன்.

அவள் என்னை நோக்கி வந்து கொண்டிருக்கிறாளென்பது எனக்கு நிழலாட்டம் போல் தெரிந்தது. அவள் முன்னால் வந்ததும் நான் இருக்கையை விட்டு எழுந்தேன்.

அவளைப் பற்றி வேணு என்னதான் கூறினாலும் எனக்கென்னவோ அவள் மீது மதிப்புத்தான் ஏற்பட்டது.

"மன்னிக்க வேண்டும். நீங்கள் மலேயாவில் இருந்தீர்களா!" என்று கேட்டாள். நான் "ஆமாம்" என்றேன். அவள் குரல்கூட நன்கு பரிச்சயப் பட்டது போலவே யிருந்தது.

"ஏன், நீங்களும் மலேயாவில் இருந்தீர்களா!" என்று கேட்டேன் பதிலுக்கு.

"ஆம், கோலாலம்பூரில் என் கணவரோடு இருந்தேன். நீங்கள்கூட எங்கள் வீட்டுக்கு அடிக்கடி வருவீர்கள். இப்பொழுது மறந்து விட்டீர்கள் போலிருக்கிறது."

சிறிது சிறிதாக அவன் யாரென்பது நினைவுக்கு வந்தது. அவளுடைய கணவர் திரு ரபேட்சன் ஒரு கம்பெனிக்குச் சொந்தமான ரப்பர் தோட்டத்தில் சூப்பிரின்டெண்டெண்டாக இருந்தார். ரப்பர் ஏற்றுமதி செய்வதற்குப் பெருங் கணக்காக நான் சரக்கு வாங்குவது உண்டு. வியாபார முறையில் அடிக்கடி நான் அவரைச் சந்திக்க வேண்டியிருந்தது. ஓரளவில் அவரை என் நண்பரென்றுகூடக் கூறலாம். எங்கள் பழைய கதைகளையெல்லாம் அவளிடம் கூறி நட்பைப் புனருத்தாரணம் செய்து கொண்டேன்.

"ஆமாம், திரு ரபேட்ஸன் இப்பொழுது இங்குதான் இருக்கிறாரா!"

திடீரென்று அவள் முகம் மாறி விட்டது. அங்காங்கே துன்பத்தின் ரேகைகள் மெல்லப் படர்ந்தன. விழிக்கோணத்தில் கண்ணீர் திரையிட்டது. 'நாம் ஏன் இந்தக் கேள்வியைக் கேட்டோம்' என்று வருந்தினேன்.

"அவர் இறந்து ஏழெட்டு வருடங்களாகின்றன!"—இந்த வசனம் அவளது இதயத்தின் அடியிலிருந்து வெளி வந்தது.

'ஏன் இறந்தார்! எப்படி இறந்தார்!' என்ற கேள்விகளைக் கேட்டு அவளை மேலும் துக்கத்திலாழ்த்த நான் விரும்பவில்லை. நான் பேச்சை மாற்ற விரும்பி, "நீங்கள் இங்கு வந்து எவ்வளவு காலமாகிறது!" என்று கேட்டேன்.

"ஏழு வருஷங்களுக்கு மேலாகிறது. நாளை உங்களுக்குச் சௌகரியப்பட்டால் என் வீட்டுக்கு வாருங்கள். அங்கு சாவகாசமாய்ப் பேசலாம்" என்று கூறிவிட்டுத் தன் விலாசத்தையும் கொடுத்தாள்.

நான் அவள் கொடுத்த விலாசத்தைப் பெற்றுக் கொண்டு விடை கோரினேன். அவள் சென்று தன் பழைய இடத்தில் உட்கார்ந்து கொண்டாள்.

"அவளைப் பார்த்தால் எவ்வளவு நல்லவள் போல் தெரிகிறது; இந்த உலகம் அவளைப் பற்றி எவ்வளவு வதந்திகளைக் கட்டிவிட்டிருக்கிறது, பார்த்தாயா!" என்றான் வேணு.

"உலகமென்று தனியே வேறொன்றிருக்கிறதா! நீதான் உலகம். அவதூறு கூறிய வாயாலேயே இப்போது மாற்றிக் கூறுகிறாய். தீர விசாரியாமலே தீர்ப்புக் கூறுகிறது உலகம். உலகத்தை நம்பி நம்மை நாமே ஏமாற்றிக் கொள்ளக் கூடாது."

"நாளை அவள் வீட்டுக்குப் போகிறாயா!"

"ஆமாம், தனியேயல்ல. உன்னையும் அழைத்துச் செல்லப் போகிறேன்!"

"என்னை அவள் அழைக்கவில்லையே! நான் வலிய எப்படி வருவது!"

"அதனாலென்ன! நீ கட்டாயம் வரவேண்டும். வந்து அவளிடம் மன்னிப்புக் கோர வேண்டும். நீ மறுத்தால் உன் சார்பில் நான் அவளிடம் மன்னிப்புக் கோருவேன்."

"உனக்குப் பைத்தியம் பிடித்து விட்டதா, என்ன!" என்று கேட்டான் வேணு.

"எனக்குப் பைத்தியமில்லை. என் மனத்தில் சரியென்று தோன்றியதைத்தான் சொல்லுகிறேன். கட்டாயம் மன்னிப்புக் கோரத்தான் வேண்டும் என்று நான் வற்புறுத்துகிறேன். ஏனெனில் என்றும் நீ என் நண்பனாக இருக்க வேண்டும் என்பதையே நான் விரும்புகிறேன்."

மறுநாட் காலை நானும் வேணுவும் அவள் வீட்டுக்குச் சென்றோம். வேலைக்காரி வெளியில் வந்து, 'உட்காருங்கள்! அம்மா தியானத்திலிருக்கிறார்!" என்று கூறினாள். இருவரும் உட்கார்ந்தோம். நண்பன் கண்ணைச் சிமிட்டியபடியே பாதி திறந்திருந்த கதவு ஊடாகப் பார்க்கும்படி சைகை செய்தான். கதவினூடாக என் கண்களும் சென்றன.

அறையினுள்ளே அவள் தியானத்தில் ஆழ்ந்திருந்தாள். அவளுக்கு முன்னால் உயரமான பீடத்தில் ஏசுநாதரின் படமொன்றிருந்தது. கீழே சரி சமனாக இரண்டு படங்கள் இருந்தன. ஒன்று அவள் கணவரின் படம். மற்றது ஒரு ஜப்பானியப் போர்வீரனின் படம். 'இந்த ஜப்பானியன் யார்! இவனுக்கும் இவளுக்கும் உள்ள தொடர்பென்ன! இவனை ஏன் இவள் தெய்வமாகப் போற்ற வேண்டும்!' இந்தக் கேள்விகள் என் உள்ளத்தே தோன்றி என்னைச் சிந்தனைக்குள்ளாக்கின. நண்பன் என்னை அர்த்தத்தோடு நோக்கிப் புன்னகை புரிந்தான்.

தியானம் முடிந்து அவள் வெளியே வந்தாள். "உங்களை அதிக நேரம் காக்க வைத்து விட்டேனா!" என்று வினவினாள்.

"இல்லை. இப்பொழுதுதான் வந்தோம். உங்கள் பூசை அறையின் அமைப்பையும் ஒழுங்குகளையும் பார்த்தால் நீங்கள் இந்து மதத்தைத் தழுவுகிறீர்களோ என்று எண்ணத் தோன்றுகிறது" என்றேன் நான்.

"இல்லை. நான் கிறிஸ்துவ மதத்தையே தழுவுகிறேன். ஆனால் பிற மதங்களின் வைரி யல்ல."



"மூன்று படங்களை வைத்து வணங்குகிறீர்களே. அவைகளில் யார் உங்கள் தெய்வம்!"

"மூன்றும் தெய்வங்கள்தான்!"

"ஆச்சரியமாயிருக்கிறது. நான் இந்து. எங்கள் பெண்கள் கணவனைத் தெய்வமாகப் போற்றுவார்கள். ஆனால் பிற புருஷனை அவர்கள் தெய்வமாக வணங்க மாட்டார்கள். மறு மணம் செய்வதே எங்கள் மதத்துக்கு ஒவ்வாத செயலாகும்."

நான் கூறியதைக் கேட்டு அவள் வெட்கமோ ஆத்திரமோ கொள்ளவில்லை. அவள் முகத்தில் சாந்தமும் அமைதியும் குடிகொண்டிருந்தன.

"இந்த ஜப்பானியப் போர்வீரனையும் என்னையும் பற்றிப் பலர் பலவிதமாகக் கதைகள் கட்டிவிட்டிருக்கிறார்கள். ஆனால் இவனை இங்குள்ளவர்கள் யாராவது கண்டிருக்கிறார்களோ வென்றால் அதுதானில்லை. இந்த அரூபி மனிதனையும் என்னையும் பற்றி உலகம் உருவாக்கியுள்ள கதைகளைக் கேட்டு நான் பயந்து விடவில்லை. இவ்வளவுக்கும் இந்த உலகத்திடம் நான் ஒரு நாளும் உதவி கோரியதில்லை. அப்படியிருந்தும் உலகம் என் மீது எவ்வளவு அக்கறை கொண்டிருக்கிறது."—சிறிது நேரம் அவள் பேசாமல் நின்றாள். அவள் முக பாவம் அவள் ஆழ்ந்த சிந்தனையில் இருக்கிறாள் என்பதைத் தெளிவுபடுத்தியது. சிறிது நேர மௌனத்துக்குப் பின் அவள் தொடர்ந்தாள்.

"இவனைப் பற்றி யாரும் என்னிடம் இதுவரை கேட்டதுமில்லை, நான் சொன்னதுமில்லை. இன்றுதான் உங்கள் இருவருக்கும் இதன் ரகசியத்தைச் சொல்லுகிறேன்.

"எனக்கும் என் கணவருக்கும் சிங்கப்பூரில் விவாகமாயிற்று.



"எங்களைப்போல் அன்னியோன்னிய தம்பதிகள் வேறு யாரும் இருந்ததில்லை என்றுதான் நான் இன்றும் எண்ணுகிறேன். 'அவரில்லாமல் நான் வாழ முடியாது. நானில்லாமல் அவர் வாழ முடியாது' என்பதுதான் எங்கள் இருவர் அபிப்பிராயமும். இதைப் பல முறை அவர் வாய் விட்டே கூறியிருக்கிறார். ஆனால் இன்று அவரில்லாமல்தான் நான் வாழுகிறேன்........." இந்த இடத்தில் அவள் தொண்டை கம்மியது.

"அவரைப் பிரிந்து நான் வாழ வேண்டியதற்கு ஒரு முக்கிய காரணமிருந்தது. அதுதான் என் குழந்தை. அவர் இறக்கும் போது அவனுக்கு இரண்டு வயது.

"என் மகனுக்கு ஒரு வயதிருக்கும், சிங்கப்பூர் பிடிபட்டபோது. நிரபராதிகளாய்—நிராயுதபாணிகளாய்—நிராதரவாய் நின்ற போது பொதுமக்களைக்கூட ஜப்பானியர்கள் இம்சித்ததை நினைக்க இப்பொழுதும் என் உடல் நடுங்குகிறது. இதயமில்லாத சில ஜப்பானியர்கள் வேட்டை நாய்களைப் போல் வெள்ளையர்களைத் தேடித் தேடி வதைத்தார்கள்.

"ஒரு நாள் இரவு என் கணவர் அவசரமாய் வந்தார்: 'இப்பொழுதே புறப்பட்டுவிட வேண்டும். ஒரு நிமிஷங்கூடத் தாமதிக்கக்கூடாது. ஜப்பானியர்களின் அக்கிரமத்தைச் சகிக்க முடியாது. ஐயோ!...இதுபோல் நான் கேள்விப்பட்டதே யில்லை. பத்து மாதக் கர்ப்பவதி பதைக்கப் பதைக்கக் கற்பழிக்கப்படுகிறாள். பச்சைக் குழந்தைகள் பட்டாக் கத்திக்கு இரையாகின்றன. இன்னும் இங்கிருந்தால் ஆபத்துத்தான் உடனே புறப்படு' என்றார். சாமான்களை அப்படியே போட்டுவிட்டு மறுநாள் புறப்படவிருந்த கப்பலைப் பிடிக்கப் புறப்பட்டோம்.

"உடனே தூங்கிக் கொண்டிருந்த குழந்தையைத் தூக்கச் சென்றேன் நான். யாரோ உள்ளே வரும் செருப்புச் சத்தம் கேட்டது. வெளியே வந்து எட்டிப் பார்த்தேன். என் சர்வ நாடியும் ஒடுங்கி விட்டது. துப்பாக்கி சகிதமாக மூன்று ஜப்பானியப் போர்வீரர்கள் உள்ளே நின்றார்கள். ஒருவனின் துப்பாக்கி முனை என் கணவனின் மார்பில் பொருந்தியிருந்தது. மற்ற இருவரின் பார்வையும் என்மீது விழுந்தது. காட்டு மிருகத்தைப் போல் என்மீது பாய்ந்தார்கள். நான் உள்ளே ஓட எத்தனித்தேன். இருவரும் என் கையைப் பிடித்து வெளியே இழுத்து வந்தார்கள். சிங்கத்தைப் போன்ற வீரமும், மலையைப் போன்ற உருவமும் கொண்ட என் கணவர் துப்பாக்கி முனையில் கைகளை உயரத் தூக்கியபடியே செயலற்று நின்றார். அவரைத் தூணோடு சேர்த்துக் கட்டினான் ஜப்பானியன்."

இவ்விடத்தில் தன் கதையைச் சிறிது நிறுத்தினாள். அவள் பார்வை பூஜை அறைக்குள் சென்றது. விடுவிடென்று அறைக்குள் சென்றாள். அந்த ஜப்பானியனின் படத்தைக் கொண்டு வந்து என்னிடம் கொடுத்துக் கொண்டே கூறினாள்.

"இவன்தான் என் கணவனைத் தூணோடு கட்டியவன். ஆளைப் பாருங்கள், என் கணவனின் தேக வலிமையில் நாலில் ஒரு பங்கு இவனிடம் இருக்குமா! மற்ற இருவரும் என்னைத் தூணோடு கட்டினார்கள். நான் வாய் விட்டுக் கதறினேன்: மன்றாடினேன், அவர்கள்



தமிழ் நாடகங்கள் புதுமை ஒளி வீசிக் கொண்டு நவ நவமான கருத்துக்களோடு அரங்கேற்றப்பட்டு வருகின்றன. அவற்றுள் சென்ற மார்ச் 11-ம் தேதி திருச்சி தேவர் மன்றத்தில் ரஸிக ரஞ்சன சபையாரால் நடத்தப்பட்ட "மனோரமா"வை முக்கியமாகக் குறிப்பிட வேண்டும். மனித இதயத்தில் நிகழும் உணர்ச்சிகளையும் போராட்டங்களையும், மனித வாழ்வின் சிக்கல்களையும், களங்கமற்ற காதலின் சிறப்பையும் எடுத்துக் காட்டும் சிறந்த நாடகமாக அதை அமைத்துள்ளார் ஸ்ரீ ரா. வீழிநாதன். நடிகர்கள் பாத்திரங்களின் குண விசேஷங்களை அறிந்து நடித்து நாடகத்தை வெற்றிகரமாக்கிச் சபையோரின் பாராட்டுதலைப் பெற்றனர். உள்ளத்தை உருக்கும் மேற்படி நாடகத்தில் ஒரு காட்சியை மேலேயுள்ள படத்தில் காணலாம்.

காதில் ஒன்றுமே ஏறவில்லை. ஜப்பானிய பாஷையில் ஏதோ கூறி உரக்கச் சிரித்தார்கள். ஒருவனுடைய இரும்புக் கை என் சட்டையைப் பற்றியது. நான் 'ஐயோ' என்று அலறினேன். கட்டிய கணவனின் கண் முன்னேயே கற்பழிக்கப் படுவதா! இதை என்னால் கற்பனைகூடச் செய்ய முடியவில்லை. ஆனால் திடீரென்று இந்தப் படத்திலிருக்கும் ஜப்பானியன், அவரை விட்டுவிட்டு என்னிடம் வந்தான். ஜப்பானிய பாஷையில் மற்ற இருவரோடும் ஏதேதோ பேசினான். சிறிது நேரம் அவர்களுக்கிடையே பலத்த வாக்குவாதம் நடந்தது. அவர்கள் பாஷை எனக்குப் புரியாவிட்டாலும் அவர்கள் எதுபற்றி வாதிக்கிறார்கள் என்பது ஓரளவுக்கு விளங்கியது. அவர்கள் இருவரது மிருகத்தனமான ஆசையைக் கண்டித்துத் தாங்கள் வந்தது கொள்ளையடிக்கவே யாதலால் உள்ள பொருட்களைச் சுருட்டிக் கொண்டு போவோம் என்று வாதாடினான், இந்தப் படத்திலிருக்கும் ஜப்பானியன். அவன் கூறியவைகளை அவர்கள் இருவரும் ஒப்புக்கொள்ளவில்லை. வேட்டை நாயைப் போல் என்மேல் பாய்ந்தான் ஒருவன். அவன் முரட்டு முகம் என் கன்னத்தில் உராய்ந்தது. திடீரென்று வெடிச் சத்தம் கேட்டது. இரு ஜப்பானியர்களும் சுருண்டு விழுந்தார்கள். இவன் துப்பாக்கியோடு விழுந்தவர்களையே பார்த்துக் கொண்டு நின்றான். அவன் வாய் ஏதோ முணுமுணுத்தது. அவன் முகம் இறந்தவர்களுக்காக வருந்துகிறான் என்பதைப் படம் பிடித்துக் காட்டியது.

"பரபரப்போடு என்னை முதலில் கட்டவிழ்த்து விட்டான். பிறகு அவரையும் அவிழ்த்து விடும்படி என்னிடம் கூறினான். கடைசி வரையில் அவன் துப்பாக்கியை அவர் மார்புக்கு நேரே பிடித்தபடியே நின்றான். என் கணவர் நன்றி கூறினார். 'நீ செய்த இந்த உதவியை—எங்கள் உயிரைக் காப்பாற்றியதல்ல—என் மனைவியின் மானத்தைக் காப்பாற்றியதை என் உயிருள்ளளவும் மறக்கமாட்டேன்' என்று நன்றிப் பெருக்குடன் கூறினார்.

"இவனுக்கு ஆங்கிலம் நன்றாகப் பேச வராது. அரைகுறை ஆங்கிலத்தில் 'எனக்கும் ஒரு மனைவி இருக்கிறாள்' என்றான். ரத்தினச் சுருக்கமாய் அவன் கூறிய அந்த ஒரு வாசகத்தில் எவ்வளவோ அர்த்தங்களைக் கண்டோம். அவன் துப்பாக்கியை நீட்டிப் பிடித்தபடியே பின்காட்டிப் போய்க் கொண்டிருந்தான். என் கணவர் 'உன் நினைவாக ஏதாவது கொடு' என்று கேட்டார். அவன் சிறிது நேரம் தயங்கிவிட்டு, டைரிக்குள்ளிருந்த தன் உருவப்படமொன்றை எடுத்துக் கொடுத்தான்.

"நாங்கள் இங்கிலாந்துக்கு வந்தோம். வந்ததும் அவர் ஞாபகமாக அவனது புகைப்படத்தைக் கண்ணாடி போட்டு வைத்தார்.

"இரண்டு மாசங்களுக்குப் பின் அமெரிக்கா சென்றோம். அங்கு ஆறு மாசங்கள்தான் எங்கள் வாழ்க்கை இன்பமாய்க் கழிந்தது. என் கணவர் மோட்டார் சைக்கிள் விபத்தில் மாண்டு விட்டார் என்று அன்று வந்த செய்தி என் தலையில் கல்லைப் போட்டுவிட்டது. பிரமை பிடித்தவள்போல் காலத்தை ஓட்டினேன். கொழும்பில் ராஜர் அன்ட் கம்பெனியில் எங்களுக்கு ஒரு பங்குண்டு. என் மகனின் பிற்காலத்தை உத்தேசித்து இங்கு புறப்பட்டு வந்தேன். இன்றுவரை எங்கள் வாழ்க்கை ஆடம்பரமில்லாமல் அமைதியாய்ப் போய்க் கொண்டிருக்கிறது.

"இப்போது சொல்லுங்கள். எங்களை விட உங்கள் பெண்கள் கற்பை உயர்வாக மதிப்பவர்கள் என்று கூறுகிறீர்களே, அவர்கள் வாழ்க்கையில் இப்படி ஒரு சம்பவம் நிகழ்ந்திருந்தால் இந்த ஜப்பானியனை எப்படிக் கௌரவிப்பார்கள்! அவர்கள் எப்படியாவது செய்யட்டும், நான் உங்களைக் கேட்கிறேன், நான் மாசற்றவளாக வாழ உதவி புரிந்த இந்த ஜப்பானியனை நான் தெய்வமாகப் போற்றினால் அது குற்றமா!" என்று உணர்ச்சி வசப்பட்டுக் கூறி முடித்தாள்.

என்னால் வாய் திறந்து பேச முடியவில்லை. இதுவரையில் என் கையிலேயே இருந்த அந்த ஜப்பானியனின் படத்தை அவளிடம் கொடுத்தேன். அந்தப் படத்தின்மீது உண்மையில் தெய்வத்தின் படம் போலவே எனக்கும் பக்தி பிறந்தது.

விடைபெற்றுக் கொண்டு திரும்பும்போது திடீரென்று என் நண்பன் வேணு அவள் காலைத் தொட்டு நிமிர்ந்தான். அவள் ஒன்றும் புரியாது திகைத்துப் போய் நின்றாள்.

சேவைக்கும் பாதுகாப்பிற்கும்

PANDYAN INSURANCE COMPANY LIMITED

பாண்டியன் இன்ஷ்யூரன்ஸ் கம்பெனி லிமிடெட்

நெருப்பு - கப்பல் - விபத்து

ஆஸ்திகள் : ரூ. 1 கோடிக்கு மேல்

தலைமைக் காரியாலயம்: பாண்டியன் பில்டிங் : மதுரை

கிளைகள் : பம்பாய், கல்கத்தா, டெல்லி, சென்னை, நாகபுரி, ஷோலாப்பூர், பெங்களூர், திருவனந்தபுரம், கோயம்புத்தூர், கொச்சி

2

பருக்களும் விகாரமான சருமமும் 24 மணி நேரத்தில் குணமடைகிறது


நிக்ஸோடெர்ம் (Nixoderm) கண்டு பிடித்தது முதல் யாருமே எக்ஸிமா, பரு, ரத்தக் கட்டி ஆகிய சரும வியாதிகளால் அவதியுறவும், உங்களுக்கும் பிறருக்கும் வெறுப்பு ஏற்படவும் வேண்டாம். ரஸாயன முறையில் தயாரித்த நிக்ஸோடெர்ம் (Nixoderm) உதவியால் சருமத்தை சுத்தமாக்குங்கள். அனாயாசமாக வைத்துக் கொண்டு பிறர் உங்களை வியாதியஸ்தரெனக் கருத இடம் தராதீர்.

ஒரு புதிய சாதனம்

நிக்ஸோடெர்ம் (Nixoderm) ஒரு புதிய களிம்பு. ஆனால் நீங்கள் உபயோகித்த இதர களிம்பைப் போன்றதல்ல. பிசுக்கற்றது. மேலே தடவும் போதே ஒரு பவுடரைப்போல உணருவீர்கள். சருமத் துவாரங்களினூடே சென்று வியாதிக்கு மூலமான இடத்தை தாக்குகிறது. நிக்ஸோடெர்ம் (Nixoderm) மூன்று வழிகளில் உபாதையைத் தாக்குகிறது: (1) நோய்க்குக் காரணமாகும் கிருமிகளைக் கொல்லுகிறது. (2) அரித்து, எரிந்து வெந்துபோவதை 7 முதல் 10 நிமிஷத்தில் தடுத்து சருமத்தை மென்மையாக்குகிறது. (3) இயற்கையாகவே ஆற்றி, சுத்தமாக மிருதுவாகப் பட்டுப் போல வழுவழுப்பாகவும் ஆக்குகிறது.

விரைவில் பலனளிக்கிறது

சரும நோய்களை நிவர்த்திக்கவே விஞ்ஞான முறையில் தயாரான நிக்ஸோடெர்ம் (Nixoderm) மற்றதைவிட சீக்கிரம் வேலை செய்கிறது. நமைச்சல், எரிச்சலை சில நிமிஷத்தில் நிறுத்தி விரைவில் சருமத்தை சுத்தமாக ஆற்றி, மிருதுவாகவும் வழுவழுப்பாகவும் செய்கிறது. ஓரிரண்டு தினங்களில் கண்ணாடியில் பார்த்துக் கொள்ளுங்கள். தேடிய சஞ்சீவி—நாடிய வைத்தியம் கிடைத்ததை உணர்வீர்கள். நிக்ஸோடெர்ம் (Nixoderm) ஆயிரக்கணக்கானவர்களது சருமத்தைச் சுத்தமாக்கி



BEFORE AFTER

புஷ்டியாக்கியது. அவர்களில் ஒருவரான மிஸ்டர் R. K. கூறுகிறார். "12 வருஷமாக நமைச்சலும் எரிச்சலும் தரும் எக்ஸிமாவினால் கஷ்டப்பட்டேன். பல மருந்துகளுக்குப்பிறகு நிக்ஸோடெர்ம் (Nixoderm) உபயோகித்தேன். 10 நிமிஷத்தில் நமைச்சல் நின்று மறுநாளே சருமம் சுத்தமாயிற்று. என் தோற்றத்தின் மாறுதலைக் கண்ட நண்பர்கள் ஆச்சரியமடைந்தனர்."

திருப்திக்கு உத்தரவாதம்

சருமம் திருப்தியாகாத வரை நிக்ஸோடெர்ம் (Nixoderm) மதிப்பை இழக்கிறது. இன்றே நிக்ஸோடெர்ம் (Nixoderm) வாங்குங்கள். தோற்றத்தில் ஏற்படும் அபிவிருத்தியைக் காண ஆச்சரியப்படுவீர்கள். ஒரு வாரத்துக்கு உபயோகித்தால் சருமம் வழுவழுப்பாயும் மிருதுவாயும் சுத்தமாயும் வசீகரமாகவும் ஆவது நிச்சயம். இல்லையேல் காலிப் பெட்டியைத் திருப்பிக் கொடுத்து, கொடுத்த விலையை வாபஸ் பெறுங்கள். இன்றே நிக்ஸோடெர்ம் (Nixoderm) வாங்குங்கள். அதற்களித்த உத்தரவாதமே உங்களுக்கான உறுதி

வட்ட மேஜை

கிராம உத்தியோகஸ்தர்கள் பரம்பரை

கிராம உத்தியோக பரம்பரையை ரத்துச் செய்ய வேண்டுமென்று சட்ட சபையில் சில அங்கத்தினர்கள் பேசுகிறார்கள். கிராம உத்தியோகஸ்தர்கள் பரம்பரையை ரத்துச் செய்வது நல்லதல்ல, நியாயமுமல்ல.

பரம்பரையாக வார்சு வார்சாகவே கிராமங்களில் இரு குடும்பத்தார் (கி. மு. கர்ணம்) சர்க்காருக்கு ஜீவநாடியும் சர்க்காருக்கு அஸ்திவாரமும் போன்றவர்களாவார்கள்.

அக்காலத்திலிருந்து சர்க்காருக்குக் குறைந்த சம்பளத்தில் கௌரவத்துக்காகக் கிராம உத்தியோகஸ்தர்கள் ஊழியம் செய்து வருகிறார்கள். தற்சமயம் சர்க்காரின் எல்லா இலாகாக்களது சம்பளம் உயர்த்து விட்டநிலையும், அக விலைகள் கூடிய நிலைமையினாலும் கொஞ்சம் சம்பளம் கூடுதலாகக் கேட்கிறார்கள்; முறையிடுகிறார்கள்.

இதற்காகப் பரம்பரையை ரத்துச் செய்வது சரியல்ல. மேலும் பரம்பரையை ரத்துச் செய்து படித்தவர்கள் வந்து அலுவல் ஒப்புக் கொண்டாலும், மேற்படி கிராமத்தின் நிலையையும் பண்பையும் தெரிந்து கொள்ள முடியாது. இப்போதோ குடிஜனங்களும் கிராம உத்தியோகஸ்தர்கள் இன்னார் என்று பரம்பரை வார்சுப் புகழோடு குறிப்பிட்டு, கிராமங்களில் கட்டுப்பாட்டுடன் ஒற்றுமையாக நடந்து வருகிறார்கள்.

ஆகவே பரம்பரையை ஒருகாலமும் ரத்துச் செய்யக் கூடாது என்று சர்க்காரிடம் பணிவுடன் வேண்டிக் கொள்கிறேன்.

அம்பலசேரி
16—3—56 மு. ம. முத்தையாபிள்ளை

★

முதல்தரத் தொடர்கள்

ரவி சந்திரிகா, "சோமு" அவர்களின் கற்பனைத் திறமையோடு தத்ரூபமான கிராமக் காட்சிகளைப் படம் பிடித்துக் காட்டுகிறது. நாட்டுப் பாடல், நல்லதோர் உணர்ச்சியின் எழுச்சிச் சித்திரந்தான். கள்ளங்கபடற்ற மனத்தைப் படைத்தோரின் உள்ளத்தே எதிரொலி செய்கிறதெனில் மிகையல்ல. தொடர்ந்து படித்த எம்போன்றோர் மகிழ்ச்சியின் மகிமை நன்னறிவோம். ஏனென்றால் வங்காளி அறிஞர் செய்துள்ள "கற்பனா சக்தி" இதனிடம் எதிர் நிற்க முடியாதல்லவா! அத்தனை உண்மை பின்னிய ஓவிய நடையை இந்த நவீனத்தில் காண்கிறோம்.

வட இந்திய யாத்திரை, "பரதன்" அவர்களின் விசேஷ அநுபவ யாத்திரையில் நம்மையும் இழுத்துச் செல்கிறது. உள் நாட்டிலும் வெளி நாட்டிலும் அநேக பட்டணங்களைச் 'சரித்திர நோக்குடன்' சுற்றிப் பார்த்து விட்டு வந்த யாம், பரதன் அவர்களின் வரலாற்றுச் சுவைநிரம்பிய வாசகத்தை அநுபவித்து உணர்ந்து வருகின்றோம்.

குழந்தைகளுக்கென, நமது மதிப்பின் மிக்க "ராஜாஜி"ப் பெரியார் எழுதி வருகின்ற ஒவ்வொரு கதையிலும் உண்மை அறிவை உந்திக் கிளப்பி, யோசிக்க வைக்கின்ற அநுபவக் கலை அடங்கியுள்ளது. பெரிய வயதடைந்தவர்களும், அவசியம் படிக்கும்படி அபார விஷயம் அறிவுறுத்துகிறது. ஒவ்வொரு வாரமும் 'கல்கி'யில் வெளி வரும் இக்கதைகள் ஒரு பக்கமாயிருந்தாலும் அவை அறிவுக் களஞ்சியம் என்பதில் சந்தேகமில்லை.

ஒரு தவளைக் கதை. 'பழிக்குப் பழி' வாங்க எண்ணுகிற மனம் மறுபடியும் மறுபடியும் பிறந்து பிறந்து உழன்றாலும் கதிமோட்சமில்லை என அறிவு புகட்டுகின்றது. பிற்காலச் சந்ததிகளும் பாதுகாத்து வைக்க வேண்டிய கட்டுரைக் கதைகளாகும்.

மாந்தலே (பர்மா) "ஜெய்ஹிந்த் சேதுராமன்"
4—3—56

★

கடல் கண்ட கனவு

ஆசிரியர் சோமு எழுதும் சரித்திரத் தொடர் கதை—கடல் கண்ட கனவு, ஏப்ரல் 15உ "கல்கி" இதழில் ஆரம்பமாகிறது என்ற மகிழ்ச்சி யூட்டும் செய்தியை வாசித்த என் மனம், மூவேந்தர்களின் வளம் நிறைந்த ஆட்சி காலத்துச் சரித்திர சாரத்தை விரைவில் பருகப் போகிறோமென்னும் கற்பனையில் திளைத்திருப்பதைப் பொங்கும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

என் போன்ற லட்சோப லட்சம் வாசகப் பிரியர்களின் உள்ளத்தைக் கவரும் ஏப்ரல் 15உ இதழ் எப்போது வருமென்று மிகுந்த ஆவலுடன் எதிர்பார்த்திருக்கிறேன்.

மக்கள் வாழ்க்கைத் தரம் உயர—கருத்து மிக்க கதைகளின் மூலம் இலக்கியச் சேவை செய்து வரும் மதிப்புக்குரிய ஆசிரியர் திரு சோமு அவர்களுக்கு எமது நன்றியை உரிமைப் படுத்தி யனுப்புகிறேன்.


தமிழ்நாட்டுப் பண்பாட்டுக்கொப்ப எளிய நடையில் கருத்துமிக்க கதைகளை அமைத்து வழங்கி வந்த 'கல்கி திரு ரா. கி.' அவர்களின் பிரிவை ஈடுகட்டும் முறையில் அமைந்துள்ளது ஆசிரியர் சோமு அவர்களின் தேன் சொட்டும் தெவிட்டாத தமிழ் நடை. சமீபத்தில் முடிவு பெற்ற ரவிசந்திரிகா ஆசிரியர் சோமு அவர்களின் கற்பனை விருட்சத்தில் பழுத்துக் கனிந்த தித்திக்கும் தமிழ்க் கனி, ஈடு இணையற்றதோர் கருத்தோவியம்.

ரவிசந்திரிகாவின் துரித முடிவால் ஏமாற்றமடைந்துள்ள என் போன்ற 'கல்கி' நேயர்களின் ஏமாற்றத்தை மாய்க்கக் 'கடல் கண்ட கனவு' என்னும் சரித்திரக் கதையை வழங்க முன்வந்த ஆசிரியர் சோமு அவர்களுக்கு வாசக உலகம் நன்றி செலுத்துகிறது.

கோலார் தங்கவயல்
10—3—56 சு. மாதவகிருஷ்ணன்


இணையற்ற
எழிலுக்கு...
Remy
BORATED
TALCUM POWDER
ரெமி
டால்கம் பவுடர்

உழைத்துப் பிழை



ஒரு ஏழைக் குடியானவன் கண்ண பிரானை மிக பக்தியுடன் பூஜை செய்து வந்தான். கண்ணன் அவனுக்கு இரங்கி, "உனக்கு என்ன வேண்டும்? கேள், தருவேன். ஆனால் உனக்குத் தருவதை எல்லாருக்கும் தருவேன். எதையும் உனக்கு மட்டும் தருவதற்கு முடியாது" என்றான்.

"கோபாலா! எனக்கு வேண்டியதை நீ தந்தால் போதும். அதை நீ எல்லாருக்கும் தந்தாயானால் எனக்கு என்ன ஆட்சேபனை? நான் அப்படித் துர்புத்திக்காரன் அல்ல. எனக்கு யார் பேரிலும் அசூயை இல்லை" என்றான் குடியானவன்.

"நீ மிகவும் நல்லவன். எனக்குத் தெரியும். உனக்கு வேண்டியதைக் கேள். மனைவியுடன் யோசித்துக் கேள். பிறகு மாற்றிக் கொள்ள முடியாது" என்றான்.

"அப்படியே சரி! மனைவியைக் கேட்டுச் சொல்லுகிறேன். எனக்கு மூளை உன்னைப் பார்த்ததும் கலங்கிப் போயிற்று. நாளைக் கேட்கலாமா?" என்றான்.

"அப்படியே!" என்றான் கண்ணன்.

குடியானவன் அன்றிரவு தன் மனைவியுடன் யோசனை செய்தான். தன் புருஷன் பெற்ற வரத்தைக் கேட்டு மனைவிக்கு வெகு சந்தோஷம். இதைக் கேட்கலாமா, அதைக் கேட்கலாமா என்று இருவரும் வெகு நேரம் யோசித்துக் கடைசியாக முடிவு செய்து கொண்டார்கள்.

மறுநாள் குடியானவன் கண்ணனை தியானித்தான். ஆண்டவன் சிரித்துக் கொண்டே தரிசனம் தந்தான்.

"தம்பீ, என்ன கேட்கிறாய்?" என்றான்.

"கருணைக் கடலே, கோபித்துக்கொள்ள வேண்டாம். நான் ஏழை, எனக்கு அறிவு அதிகமில்லை. ஆனபடியால் நீ சொல்லிய படி என் மனைவியுடன் யோசித்தேன்" என்று ஆரம்பித்தான்.

கண்ணன்: "என்ன வேண்டுமோ அதைக் கேட்டுப் பெறுவாய். அது ஊரில் எல்லாருக்கும் கிடைக்கும் என்பதை நினைவில் வைத்துக் கொள்."

"ஆண்டவனே! என் பெட்டி நிறையப் பணம் வெள்ளி ரூபாயாக இருக்க வேண்டும். எவ்வளவு எடுத்தாலும் குறையக் கூடாது. இதைக் கேட்கிறேன்" என்றான்.

"அப்பனே உனக்கு ஏன் பண ஆசை பிடித்து விட்டது?" என்று சொல்லிக் கோவிந்தன் தாமதித்தான்.


தான் கேட்ட வரத்தையே தர வேண்டும் என்று குடியானவன் வணக்கத்தோடு பிடிவாதம் செய்தான்.

"சரி, அப்படியே!" என்று சொல்லிக் கோவிந்தன் மறைந்து விட்டான்.

பணம் இருந்தால் எல்லாமே பெறலாம், அவ்வப்போது என்ன வேண்டுமோ அதைப் பெறலாம், எது வேண்டுமாயினும் பெறலாம், ஆனபடியால் இந்த வரத்தைக் கேள், என்று தன்னுடைய மனைவி சொன்னதைக் குடியானவன் சரி என்று ஒப்புக் கொண்டு இவ்வாறு கேட்டுவரம்பெற்றான்.

வரத்தின்படி பெட்டியில் ரூபாய் நிறைந்து விட்டது உடனே கை நிறைய ரூபாய் எடுத்துக்கொண்டு அடுத்த ஊரில் துணிக் கடைக்குச் சென்றான். வீட்டுக்காரிக்கு நல்ல புடவை இரண்டு வாங்க வேண்டுமெனச் சென்றான்.

அவன் சென்ற வழியில் ஜனங்கள் எல்லாரும் ஏதோ வெகு குதூகலமாக இருப்பதைக் கண்டான். தனக்குக் கோவிந்தன் தந்த வரம் எல்லாருக்குமே பயன்பட்டு விட்டதை அவன் முதலில் மறந்து விட்டான். பிறகு நினைவுக்கு வந்தது. ஊரில்



எல்லாரும் சந்தோஷமாக இருப்பதைப் பார்த்து அவனும் மகிழ்ந்தான். ஜவுளிக் கடைக்குள் நுழைந்தான்.

நல்ல புடவைகள் இரண்டு எடுத்துத் தரச் சொன்னான்.

"நீ என்ன கொடுப்பாய்?" என்றார் கடைக்காரர்.

"என்ன விலை சொல்லுகிறீரோ அதைத் தருகிறேன்."

"விலையா? எங்களுக்குப் பணம் வேண்டாம். பணத்தை இப்போது மதிப்பார் இல்லை. அது எல்லாரிடமும் ஏராளமாக இருக்கிறது. எத்தனை மூட்டை அரிசி தருவீர் சொல்லும்" என்றார் கடைக்காரர்.

"ரூபாய்க்கு ஏன் மதிப்பில்லை? அதற்கு என்ன வாயிற்று?" என்றான் குடியானவன். கடைக்காரர் வேடிக்கை செய்கிறார் என்று எண்ணி இப்படிக் கேட்டான்.

"எல்லாரிடமும் ரூபாய் வேண்டியளவு குறையாமல் இருக்கிறது. இப்போது யாருக்கும் பணம் வேண்டியதில்லை. இது உமக்குத் தெரியாதா?" என்றார் கடைக்காரர். குடியானவனுக்கு விஷயம் விளங்கவில்லை. அடுத்த கடைக்குப் போனான். அங்கேயும் "அரிசியோ, பருப்போ, கடலையோ ஏதாவது கொண்டு வா, பணம் வேண்டாம். அது நம்மிடம் ஏராளமாக இருக்கிறது" என்றார்கள்.

குடியானவன் துக்கமடைந்தான். பிறகு எந்தக் கடைக்கு எந்தப் பண்டம் வாங்கப்போனாலும் இதையே கண்டான். ரூபாய்க்கு மதிப்பே இல்லாமல் போயிற்று. மனைவியும் புருஷனும் துயரத்தில் மூழ்கினார்கள்.

"கோவிந்தா, ஏமாற்றி விட்டாயே" என்று அழுதான்.

"உன்னை நீயே ஏமாற்றிக் கொண்டாய்" என்றான் கோவிந்தன்.

"நானும் குடும்பமும் பசியில் செத்துப் போவோமே!" என்று குடியானவன் அழுதான்.

"வரத்தைத் திருப்பிக் கொடுத்து விடுகிறாயா?" என்று கேட்டான் கண்ணன்.

"உன் வரத்தை நீயே எடுத்துக்கொண்டு போ. நான் முன்போல் உழைத்துப் பிழைப்பேன். அதற்கு நீ உதவினால் போதும்" என்றான் குடியானவன் தைரியமாக.

"அதுவே சரி. நீயும் உழைத்துப் பிழை. எல்லாரும் உழைத்துப் பிழைக்கட்டும்" என்றான் கோவிந்தன்.




உலக மார்க்
அசல் ஷண்முகம்
பட்டணம்
பொடி
100 வருடங்களுக்கு மேலாக பிரக்யாதி பெற்றது
SHUNMUGAM
MADRAS SNUFF
ORIGINAL SHUNMUGAM SNUFF (ESTD-1839) CO.
POST BOX 140 MADRAS-1


காஸல்ஸ்
விசிறிகள்
மிக சமீபத்திய டிசைன்
மிகச்சிறந்த சேவை


எங்கள் 40 குச்சி கோபுரம் மார்க் சிம்கோ ஜெட் மார்க், சிம்கோ சைகிள் மார்க், மைனர் சைஸ் சிறு லேடி மார்க், 60 குச்சி வேட்டை சிங்கம் மார்க் தீப்பெட்டிகள்
கடற்கரை குளிர்ப் பிரதேசங்களுக்கும் மற்றும் மலபார் மழைக்கும் உகந்தது
சிறந்த சரக்கு உற்பத்தி! சிறப்பான பொதுஜன ஆதரவு!!
தினம் குடிசைத் தொழிலாகத் தயாராகும் 3,300 குரோஸ் தீப்பெட்டிகளும் எங்களுடைய டெப்போக்களிலேயே செலவாகி வருகின்றன
SIMCO
சிம்கோ, சிவகாசி. S.I. போன். 63. தந்தி. SIMCO



பர்மா ரமணி

பாலர் தொடர் கதை

அழ. வள்ளியப்பா

38. ரமணியின் கலவரம்

சந்தேகமில்லை. அவன் ரமணிதான். காணமற்போன ரமணியேதான் அங்கு படுத்துக் கொண்டிருந்தான். உடனே "ரமணி! ரமணி!" என்று குதூகலத்துடன் தட்டி எழுப்பினாள் காமாட்சி அம்மாள். ரமணி மெதுவாகக் கண்களைத் திறந்து பார்த்தான். காமாட்சி அம்மாளைக் கண்டதும், "அம்மா!" என்று அவளைப் பாசத்தோடு கட்டிப் பிடித்துக் கொண்டான்.

மறு நிமிஷம், "என்ன இது? கனவா! நனவா! எப்படி நான் இங்கு வந்தேன்? பக்கத்தில் படுத்திருந்த சுந்தரம் எங்கே?" என்று ஆச்சரியத்துடன் கேட்டான் ரமணி.

"என்ன ரமணி, உனக்கே தெரியாதா! நடப்பதெல்லாம் ஆச்சரியமாகத்தான் இருக்கிறது......சரி வா, உள்ளே போகலாம்" என்று கூறி அவனை அப்படியே அணைத்துக் கொண்டு அழைத்துச் சென்றாள் காமாட்சி அம்மாள்.

உள்ளே செல்லும் போதே, "இதோ ரமணி! ரமணி வந்து விட்டான்!" என்று இரைந்து கொண்டே சென்றாள். சத்தத்தைக் கேட்டதும், படுக்கையில் கவலையுடன் உட்கார்ந்திருந்த சிற்சபேசன் திரும்பிப் பார்த்தார். ரமணியைக் கண்டதும் 'சட்'டென்று எழுந்தார். ஒரே தாவாகத் தாவி அவனிடம் ஓடிவந்தார். "ஆ, ரமணி!" என்று கட்டித் தழுவிக் கொண்டார். அதற்குள் காமாட்சி அம்மாள் தூங்கிக் கொண்டிருந்த மாலதியைத் தட்டி எழுப்பி, "மாலதி! மாலதி! ரமணி அண்ணா வந்து விட்டான்! ரமணி அண்ணா வந்து விட்டான்! எழுந்திரு; எழுந்திரு" என்று ஆனந்தமாகக் கூறினாள். உடனே மாலதி பரபரப்போடு எழுந்தாள். நிமிர்ந்து பார்த்தாள். அதற்குள் ரமணி மாலதியின் எதிரே ஓடி வந்து, அவளது இரு தோள்களையும் பிடித்துக் கொண்டு, "மாலதி!" என்றான்.

"அண்ணா! எங்களையெல்லாம் விட்டு விட்டு நீ எங்கே அண்ணா போயிருந்தாய்? நீ இல்லாதது எங்களுக்கெல்லாம் எவ்வளவு கவலையாக இருந்தது! விளையாட முடியவில்லை; கதை கேட்க முடியவில்லை. எதுவுமே செய்ய முடியவில்லை" என்றாள் மாலதி.

சற்று நேரத்துக்குள் ரமணி திரும்பி வந்த விஷயம் அந்த வட்டாரம் முழுவதும் தெரிந்து விட்டது. குழந்தைகளெல்லாரும் குதூகலத்தோடு 'ரமணி அண்ணா'வைப் பார்க்க ஓடோடி வந்தார்கள். பெரியவர்களும் வந்திருந்தார்கள். எல்லோரும் அவனைச் சூழ்ந்து கொண்டு, அவன் எங்கே போனான், எப்படிப் போனான், என்னென்ன செய்தான் என்றெல்லாம் விசாரிக்க ஆரம்பித்தார்கள்.

அப்போது சிற்சபேசன், "ரமணி, அன்று இரவு நீ காணமற் போனதிலிருந்து நடந்ததையெல்லாம் விவரமாகச் சொல்லு. குழந்தைகளெல்லாம் கேட்கட்டும். எங்களுக்கும்தான் நீ இன்னும் சரியாகச் சொல்லவில்லையே!" என்று கூறினார்.

உடனே ரமணி, "இவ்வளவு நாளும் நீங்களெல்லோரும் எந்த எந்தக் கதைகளையோ கேட்டீர்கள். இப்போது என் சொந்தக் கதையையே கேட்கப் போகிறீர்கள். சொல்லுகிறேன், கேளுங்கள்" என்று கூறிச் சொல்ல ஆரம்பித்தான். தன்னை முரடர்கள் தூக்கிச் சென்றது, குகையில் கொண்டு போய் வைத்தது, கடிதத்துக்குப் பதில் எழுதச் சொல்லிப் பிரம்பால் அடித்தது, பிறகு எதிர்பாராமல் எப்படியோ வீட்டு வராந்தாவில் தான் படுத்திருந்தது-எல்லாவற்றையும் கூறினான். அப்போது அவனுக்குச்

அப்படியானால், சுந்தரமும் வீட்டுக்கு வந்திருக்க வேண்டுமே!'' என்றான் ரமணி திகைப்புடன்.

"இருக்கலாம். அவன் வீடு எங்கே இருக்கிறது? உனக்குத் தெரியுமா?'' என்று கேட்டார் சிற்சபேசன்.

"அமராபுராவில் இருக்கிறதாம். அவன் அப்பா ஒரு பெரிய மரவியாபாரியாம்."

"அப்படியா! சரி, இப்போதே ஒரு ஆள் அனுப்பி விசாரித்து வரச் சொல்கிறேன்'' என்று கூறி விட்டு உடனே ஒரு வேலைக்காரனை அமராபுராவுக்கு அனுப்பி வைத்தார் சிற்சபேசன். அமராபுரா ஐராவதி நதியின் அக்கரையில் உள்ளது. மாந்தலே இக்கரையில் உள்ளது. 'ஆவா பிரிட்ஜ்' என்ற பாலத்தைக் கடந்து விட்டால் அமராபுராவுக்குப் போகலாம்.



தெய்வத் தமிழ் நாட்டுக்குத் தீஞ்சுவைக் கனியமுதம் வழங்கினாள் அவ்வைப் பாட்டி. என்றும் அழியாத் தமிழ்ச் செல்வம் அருளிய அருட்கவிக்கு அன்று அதியமான் அமுதக் கனியாகிய நெல்லிக்கனியை அளித்தான். இன்று, தருமபுர ஆதீனகர்த்தர் நடிப்புக் கலையினால் முத்தமிழையும் வளர்த்து வரும் அவ்வை திரு டி. கே. சண்முகத்துக்கும், திரு டி. கே. பகவதிக்கும் பொன்னாடை போர்த்திக் கௌரவித்தார். மார்ச் 3, 4 தேதிகளில் தருமபுர ஆதீனம் திருநெறிய தெய்வத் தமிழ் மன்றத்திலே "அவ்வையார்", "ராஜராஜ சோழன்" என்னும் இரு நாடகங்களையும் டி.கே.எஸ். சகோதரர்கள் நடித்துக் காட்டினர். அவர்களது இனிய தமிழ்க் கவிதையோடு மிளிரும் நாடகங்களைத் தருமபுர ஆதீனகர்த்தர் கண்டு களித்தார்; கலைஞர்களுக்குத் தமது மனமார்ந்த நல்லாசிகளையும் வழங்கினார்.

அன்று முழுவதும் ஓயாமல் குழந்தைகளும் பெரியவர்களும் ரமணியைப் பார்க்க வந்து கொண்டேயிருந்தார்கள். எல்லோரும் ரமணி திரும்பி வந்ததைக் கண்டு ஆனந்தமடைந்தார்கள். அத்துடன் அவன் எப்படித் திரும்பி வந்தான் என்பது தெரியாததால் ஆச்சரியமும் அடைந்தார்கள்.

வந்தவர்கள் எல்லோரிடமும் "வழக்கம் போல் நாளை சாயங்காலம் கதை உண்டு. எல்லோரும் வந்து விடுங்கள்'' என்று சொல்லி அனுப்பினான் ரமணி. எல்லோரும் அளவு கடந்த உற்சாகத்தோடு வீடு திரும்பினார்கள்.

விளக்கு வைக்கும் நேரம். அமராபுராவுக்குச் சென்ற வேலைக்காரன் திரும்பி வந்தான். அவன் மட்டும் வரவில்லை. கூடவே, சுந்தரத்தின் அப்பாவும் வந்து சேர்ந்தார். அவர் வந்ததும், வராததுமாக ரமணியைப் பார்த்து, "தம்பி, தம்பி, என் மகன் இன்னும் திரும்பி வரவில்லையே! அவனை நீ பார்த்திருப்பாயே! அவனுக்கு ஒன்றும் ஆபத்து இல்லையே! அந்தப் படுபாவிகள் இன்னும் அவனைக் கொண்டு வந்து விடாமல் ஏமாற்றுகிறார்களே!'' என்று அழாக் குறையாகச் சொன்னார்.

சுந்தரம் நினைவு வந்து விட்டது. உடனே சுந்தரத்தைப் பற்றியும், அவனுடைய தங்கமான குணத்தைப் பற்றியும் எல்லோருக்கும் எடுத்துக் கூறி விட்டு, "பாவம், அவனை அவர்கள் என்ன பாடுபடுத்துகிறார்களோ! நான் ஒருவன் தான் அவனுக்குத் துணையாக இருந்தேன். இப்போது நானும் வந்து விட்டேன்!'' என்று வருத்தப்பட்டான்.

அப்போது சிற்சபேசன், "ரமணி, நீ குகையில் இருந்தது உண்மைதானா? அவர்கள்தான் பணம் கேட்டு எழுதினார்களா? அப்படியானால், பணம் வாங்காமல் எப்படி உன்னைக் கொண்டு வந்து விட்டார்கள்!'' என்று கேட்டார் வியப்புடன்.

"நடந்ததெல்லாம் உண்மைதான். ஆனால், எப்படி நான் இங்கு வந்தேன் என்பதுதான் எனக்கும் புரியவில்லை! ஒரு வேளை அவர்களே என்னை இங்கு கொண்டு வந்து விட்டு விட்டார்களோ!..

"சுந்தரம் குகையில்தான் இருக்கிறான். நான் வரும்வரையில் அவர்கள் அவனைத் தொந்தரவு எதுவும் செய்யவில்லை. பணம் அனுப்பச் சொல்லி அந்த முரடர்கள் உங்களுக்கு எழுதியிருந்தார்களாமே!"

"ஆமாம் தம்பி, கடிதம் வந்த அன்றைக்கே அவர்கள் சொன்ன இடத்தில் பத்தாயிரம் ரூபாயையும் கொண்டுபோய் வைத்து விட்டோமே!"

"என்ன! அவர்கள் கேட்டபடி பணம் கொடுத்து விட்டீர்களா?"

"ஆமாம் தம்பி, என்னுடைய தேக்கு மரக் காட்டிலே மேஸ்திரி வேலை பார்க்கும் கந்தசாமியிடம் அனுப்பினேன்."

"அப்படியா! அவர்கள் பணம் வந்ததாகவே சொல்லவில்லையே?"

"வந்ததாகவே சொல்ல வில்லையா! ஒரு வேளை, நான் கொடுத்த பணத்தை எடுத்துக் கொண்டு, சுந்தரத்தைக் கொண்டு வந்து விடுவதற்குப் பதில் உன்னைக் கொண்டு வந்து விட்டு விட்டார்களோ!...... இருக்கும்! எதற்கும், நான் அன்றைக்கே பணம் அனுப்பி விட்டதாக ஒரு கடிதம் எழுதி, முன்பு பணத்தை வைத்த இடத்திலே அதையும் வைத்துவிட்டு வரச் சொல்கிறேன்" என்று கூறிப் புறப்பட்டு விட்டார்.

சுந்தரத்தின் அப்பா பணத்தை மேஸ்திரி கந்தசாமியிடம் கொடுத்தனுப்பியது உண்மைதான். ஆனால், அந்தப் பணம் எங்கே போனது, எப்படிப் போனது என்பது அவருக்குத் தெரியுமா? பாவம்! முரடர்கள்தான் எடுத்துக் கொண்டு ஏமாற்றுவதாக அவர் நினைக்கிறார்.

அன்று இரவு ரமணிக்குச் சரியாகத் தூக்கம் வரவில்லை. முதல் நாள் அடி விழுந்த இடங்களெல்லாம் வலிக்க ஆரம்பித்தன. காமாட்சி அம்மாள் அந்த இடங்களில் எண்ணெய் போட்டு மெது வாகத் தடவிக் கொடுத்தாள். அப்போது ரமணிக்குச் சுந்தரத்தின் நினைவு வந்து விட்டது.

"அம்மா, இதுபோல்தான் நேற்று இரவு வெகுநேரம் வரையில் சுந்தரம் தடவிக் கொடுத்துக் கொண்டிருந்தான். பாவம், மிகவும் நல்லவன்" என்றான்.

மறுநாள் மாலை வழக்கம்போல் ஏராளமான குழந்தைகளும், சில பெரியவர்களும் கதை கேட்க வந்து சேர்ந்தார்கள். அந்தக் கும்பலில் வயதான ஒரு கிழவரும் இருந்தார். அவர் கறுப்பாக இருந்தாலும் அவரது தாடி வெளுப்பாக இருந்தது. நெற்றியில் பட்டையாக விபூதியும் நடுவே பெரிய சந்தனப் பொட்டும் அணிந்திருந்தார். மேலே சரிகை அங்கவஸ்திரத்தைப் போர்த்துக் கொண்டிருந்தார்.

ரமணி கதை சொல்லும்போது, அந்தக் கிழவர் 'பேஷ், பேஷ்; சபாஷ்!' என்று அடிக்கடி தலையை ஆட்டினார். அப்படி அவர் சொல்லச் சொல்ல ரமணிக்கு மிகவும் உற்சாகமாயிருந்தது.

சின்னச் சின்னக் கதைகளாக இரண்டு கதைகளைக் கூறிவிட்டு, மூன்றாவதாக ஒரு கதையைச் சொல்லிக் கொண்டிருந்தான் ரமணி. அந்தக் கதையில் இரண்டு நண்பர்கள் வருகிறார்கள். அவர்கள் இருவரும் ஒருவருக்காக ஒருவர் உயிரையும் கொடுக்கத் தயாராயிருக்கிறார்கள். இந்தக் கதையைக் கூறிக்கொண்டிருந்த ரமணி, திடீரென்று நடுவிலே நிறுத்தி விட்டான். அவன் இதுபோல் ஒரு நாள் கூட நிறுத்தியதில்லை. அப்போது, அவன் முகத்தில் ஏதோ கலவரம் தெரிந்தது.

உடனே கிழவர் எழுந்து நின்றுவிட்டார். காமாட்சி அம்மாளுக்கும் ஒன்றும் புரியவில்லை. மாலதி, "என்ன அண்ணா, கதையை நிறுத்தி விட்டாய்?" என்று கேட்டாள். மற்றவர்களும் விஷயம் புரியாமல் விழித்தார்கள். (தொடரும்)



"அம்மா!......அப்பா வந்திருக்கா!...பாரு!" என்ற நிர்மலாவின் கூச்சல் கேட்டுக் கட்டிலில் படுத்திருந்த ஜானகி கண் விழித்தாள். பக்கத்தில் புதிதாகப் பிறந்திருந்த இரண்டாவது குழந்தை தூங்கிக் கொண்டிருந்தது.

"வாருங்கள்...!" என்று ஜகதீசனை வரவேற்ற அவள் அதரங்களிலே நாணப் புன்னகை பனித்திட்டது.

நிர்மலாவைத் தூக்கிக் கொண்ட ஜகதீசன், பக்கத்திலிருந்த நாற்காலியில் உட்கார்ந்தவாறே, "உடம்பு எப்படியிருக்கிறது?" என்று ஜானகியை விசாரித்தான்.

மறுபடியும் அதே நாணப் புன்னகை.

இதற்குள் மருமகன் வரவை அறிந்த மாமியார், ஒரு டம்ளரில் காப்பியைக் கொண்டுவந்து வைத்து விட்டு நிர்மலாவைத் தூக்கிக் கொண்டு சென்றாள்.

இலேசாகப் புன்முறுவல் பூத்தவாறே காப்பியை எடுத்தான் ஜகதீசன். திடீரென்று குழந்தை விழித்துக் கொண்டு அழ ஆரம்பித்தது.

காப்பியைக் கீழே வைத்துவிட்டு, பையிலிருந்த கிலுகிலுப்பையை எடுத்து ஆட்டி அழுகையை நிறுத்த முயன்றான் ஜகதீசன். குழந்தை அழுகையை நிறுத்தவில்லை.

"இதென்ன!...ரயிலா?...கார்டு வேலை பார்க்கும் நீங்கள் பச்சைக் கொடியைக் காட்டியதும் கிளம்புவதற்கும், சிவப்புக் கொடியைக் காட்டியதும் நிற்பதற்கும்!" என்று சிரித்த வண்ணம் குழந்தையை எடுத்து மார்போடு அணைத்துக் கொண்டாள் ஜானகி.

குழந்தை அழுகையை நிறுத்தியது.

"போக்கிரி!" என்று கூறிய ஜகதீசன் மனைவியின் முகத்தில் தாய்மையின் பெருமையைக் கண்டான்.

"ஆமாம்!...குழந்தைக்கு என்ன பெயர் வைப்பது? நாளை நின்றால் புண்யாஹவசனம் இல்லையா?" என்றாள் ஜானகி.

"ஏன்?...எங்கம்மா பெயரை வைத்தால் போயிற்று! குழந்தைதான் எங்கம்மாவையே உரித்து வைத்திருக்கிறதே!"

ஜகதீசனின் குரலில் உறுதி தொனித்தது.

ஜானகியிடமிருந்து சற்று நேரம் பதில் இல்லை.

"முடியாது! எங்கம்மா பெயர்தான் வைக்க வேண்டும். நிர்மலாவுக்குத் தான் உங்கள் அக்காவின் பெயரை வைத்தாகி விட்டதே!" ஜானகி சற்றுக் கோபமாகவே அவனிடம் பேசினாள்.

ஜகதீசனுக்கு முன்னால் அவன் தாயாருக்கு நிர்மலா என்றொரு குழந்தை பிறந்தது. முதல் குழந்தை என்பதுடன் நிர்மலா அசாதாரணமான பொலிவுடனும், புத்திக் கூர்மையுடனும் விளங்கி வந்தாள். ஜகதீசனின் பெற்றோரை அதிர்ஷ்டசாலிகள் என்று கூறாத பேர் அவ்வூரில் கிடையாது. நிர்மலாவின் மேல் உயிரையே வைத்திருந்தனர் பெற்றோர்.

ஆனால் விதியின் சதியினால் ஜகதீசன் பிறந்த நான்காவது வருஷம், பன்னிரண்டு வயது நிரம்பிப் பூரணப் பொலிவுடன் விளங்கிய நிர்மலா, திடீரென்று 'டைபாயிட்' சுரத்தால் காலமானாள். அந்த ஊரே கண்ணீர் விட்டது. பெற்றோர்களுக்குப் பைத்தியம் பிடிக்காதது தெய்வச் செயல்!

எனவே ஜகதீசனுக்கு முதல் பெண் குழந்தை பிறந்தபோது, அவன் சகோதரியின் ஞாபகார்த்தமாக 'நிர்மலா' என்று அதற்குப் பெயரை இடும்படி சொன்னாள் அவன் தாயார்.

"அதெல்லாம் முடியாது! என் அம்மாவின் பெயர்தான் வைக்க வேண்டும். 'பெற்றுச் சலித்தால்தான் பிறந்தகம்'" என்றான் ஜகதீசன் ஏளனமாக.

"என் குழந்தைக்கு ஒரு அமங்கலியின் பெயரை வைக்க முடியாது"—ஆத்திரத்தில் சற்று அதிகமாகவே பேசிவிட்டாள் ஜானகி. மாமியார் அமங்கலி என்பதைக் குத்திக் காண்பித்து விட்டாள்.

"என்ன சொன்னாய்?" என்று ஆத்திரத்தோடு கத்தினான் ஜகதீசன். அதுமட்டும் அல்ல: அவளை அடிப்பதற்குக் கையையும் ஓங்கி விட்டான். ஆனால் மறு விநாடி அவன் நிலைமை அவனுக்கு ஞாபகத்துக்கு வரவே ஓங்கிய கரம் மடங்கியது. ஆத்திரத்துடன் வெளியேறினான் ஜகதீசன்.

மாலைத் தென்றல் 'ஜில்' லென்று வீசிக் கொண்டிருந்தது. நடந்து கொண்டிருந்த ஜகதீசனுக்கு படபடப்பு சற்று அடங்கியது; ஆத்திரம் குறைந்து சிந்திக்கத் தொடங்கினான்.

"ஒரு பெண்ணுக்குத் தன் தாயாரின் பெயரை இரண்டாவது குழந்தைக்காவது வைக்க வேண்டும் என்று தோன்றுவது நியாயம்தானே?" என்று வாதாடியது அவன் மனம்.

"நியாயமாக இருக்கலாம்! அதற்காக என் தாயாரை எப்படி அவள் நிந்திக்கலாம்?" என்று தன் மனத்தை மடக்கினான்.

அடங்கியிருந்த புயல் மறுபடியும் எழ ஆரம்பித்தது. அவன் உள்ளத்தில் எழுந்த



எண்ணச் சுழலில் அவன் திக்குமுக்காடிப் போய் விட்டான்.

* * *

தாயார் என்றால் ஜகதீசனுக்குத் தெய்வம்போல். நிர்மலா இறந்த மறு வருடம் அதே ஏக்கத்தால் அவனுடைய தகப்பனார் காலமாகி விட்டார். அப்போது அவனுக்கு வயது ஐந்துதானிருக்கும். அன்றிலிருந்து இன்றுவரை தாயின் அன்பைத் தவிர வேறு ஒன்றையுமே அறியாதவன் ஜகதீசன். 'தகப்பன் இல்லாக் குழந்தை' என்பது தெரியாதபடி அவனுக்குத் தாயும் தகப்பனுமாக இருந்து அவனை வளர்த்துப் படிக்க வைத்து இன்று மனிதனாக்கியது அவன் தாயார்தானே?

"நீ மட்டும் 'பெற்றுச் சலித்தாள்தான் பிறந்தகம்' என்று அவளை ஏளனம் செய்யலாமா? பிறந்தகத்தை ஏளனம் செய்தால் எந்தப் பெண்தான் சும்மா இருப்பாள்?" என்று கேட்டது முதல் மனம்.

தண்ணீர் விட்டு அணைத்த தீ மாதிரி 'கப்' பென்று அடங்கியது அவன் ஆத்திரம்.

"உண்மை தான்! நாம் அவளிடம் என்ன முரட்டுத்தனமாக நடந்து கொண்டு விட்டோம்......?" என்று முணுமுணுத்தது அவன் வாய், அவனை யறியாமலே.

"நம் அம்மாவின் பெயரை வைத்து, அவள் அம்மாவின் பெயரால் அழைத்தால் என்ன?" என்று தோன்றியது.

இந்த யோசனை தோன்றியதும் சடாரென்று மனைவியின் பிறந்த வீட்டை நோக்கித் திரும்பினான் ஜகதீசன்.

* * *

மருமகன் கோபமாக வெளியேறியதைக் கண்ட அவன் மாமியார் பதற்றத்துடன், ஜானகியிடம் சென்று அதற்கான காரணத்தை வினவினாள். வெகு நேரம் பதிலளிக்காமல் விம்மிய ஜானகி, கடைசியில் ஒருவாறு விஷயத்தைக் கூறினாள்.

உடனே அவள் தாயார் 'கட கட' வென்று சிரித்தாள். ஜானகி காரணம் புரியாமல் விழித்தாள். கூடவே அசட்டுக் கோபமும் வந்தது.

"அட பைத்தியங்களா! இதற்குப் போயா சண்டை போட்டுக் கொண்டீர்கள்? உங்கள் சண்டையிலே, என் பெயரும், உன் மாமியார் பெயரும் ஒன்றுதான் என்பதை மறந்து விட்டீர்களே!" என்று கூறி மேலும் சிரித்தாள் ஜானகியின் தாயார் மீனாக்ஷி.

ஜகதீசன் வீட்டினுள் நுழையவும் இது அவன் காதில் விழவும் சரியாக இருந்தது.

"அடாடா! மறந்து போச்சே!" என்று கையை உதறினாள் ஜானகி.

"ஆஹா! இந்த விஷயம் நம் ஞாபகத்துக்கே வரவில்லையே! இப்பொழுது தானே தெரிகிறது!" என்று கூறியவாறே ஜகதீசன் உள்ளே நுழைந்தான்.


அவன் மாமியார் சிரித்தவாறே வீட்டினுள் சென்றாள்.

"கோபமா, ஜானகி?..." என்று கூறிய ஜகதீசன் ஜானகியின் நெற்றியில் புரண்ட கேசத்தை ஒதுக்கி விட்டான்.

"நம் மீனாவைப் பாருங்கள்!" என்று கூறிய ஜானகியின் குரலில் கோபத்தின் சின்னமே காணவில்லை.

ஜகதீசன் குழந்தையைப் பார்த்தான். குழந்தை தூக்கத்தில் சிரித்தது.

Simpson's



1. ஸிங்கில் வீல் பாரோ (Pan Type)
2. ஸாக் டிரக்
3. டிராக்டர் ட்ரெயிலர்
4. தண்ணீர் கைவண்டி
5. டபிள் வீல் பாரோ (Box Type)
6. தண்ணீர் வண்டி —
   250 காலன் அளவுள்ளது

1840 - இல் வண்டிகள் செய்யும் தொழிலைச் சிறிய அளவில் ஆரம்பித்து இன்று நாங்கள் உயர்தரச் சேவையினால் தனிப்பட்ட மேம்பாடு பெற்றிருக்கிறோம். எங்கள் சேவைக்கு ஈடு இணை எங்கும் இல்லாத பெருமை அடைந்திருக்கிறோம்.

114 வருஷங்களாக வண்டிகள் தயாரித்தும் இலேசான என்ஜினியரிங் சாதனங்கள் தயாரித்தும் சேவையில் அனுபவமடைந்த, தொழிலில் எந்தச் சிக்கலையும் சமாளிக்கும் திறமையுள்ளவர்களைப் பெற்றிருப்பதனால் நாங்கள் மிகவும் உயர்ந்த பொருள்களையே உங்களுக்கு அளிக்கிறோம்.

ஸிம்ஸன் & கோ. லிட்.

மதராஸ்-2.

கிளைகள் : பெங்களூர் – உதகமண்டலம் – திருச்சிராப்பள்ளி – செகந்திராபாத் (டெக்கான்)

இளவரசன் ஐவான்



மொழிபெயர்ப்பு: எஸ்.வி.எஸ்

(சென்ற வாரத் தொடர்ச்சி)

இளவரசன் ஐவானுடன் வாஸிலிஸா தான் எவ்வளவு நேர்த்தியாக நடனமாடினுள்! பிறகு அவன் ஐவானை விட்டு விட்டுத் தனியாகவே நடனமாடினுன். அங்கிருந்தவர்கள் எல்லாரும் அவனையே இமை கொட்டாமல் பார்த்துக் கொண்டிருந்தனர்.

இப்படி அவன் நடனமாடிக் கொண்டே தனது இடது கரத்தை நீட்டினுன். ஆகா! என்ன ஆச்சரியம்! அவன் ஒளித்து வைத்திருந்த தின்பண்டம் வெளியே தெறித்து விழுந்தது. எப்படி? ஒரு அழகிய தடாகமாக மாறி விழுந்தது.

அடுத்தாற்போல் தனது வலது கரத்தையும் ஆடிக் கொண்டே நீட்டினுன். இப்பொழுது என்னவென்று சொல்வது! வலது கரத்தில் ஒளித்து வைத்திருந்த தின்பண்டங்களிலிருந்து அன்னப் பறவைகள் தோன்றின. அவை முதலில் தோன்றிய அந்தத் தடாகத்தில் நீந்தத் தொடங்கின.

இதைப் பார்த்துக் கொண்டிருந்த ஸார் மன்னனும், அவன் புதல்வர்களும், விருந்தினர்களும், அடைந்த வியப்பு கொஞ்ச நஞ்சமல்ல. பேச்சற்றுப் போய்ச் சிலைகளாகவே அமர்ந்து விட்டனர். இத்துடன், வாஸிலிஸாவும் தன் நடனத்தை முடித்துக் கொண்டு தன்னுடைய இடத்துக்கு வந்து சேர்ந்தான்.

அடுத்தாற்போல் ஸார் அரசனின் மற்ற இரு குமாரர்களும், மருமகன்மாரும் நடனமாடச் சென்றனர். அவர்களும் வாஸிலிஸாவைப் போல் நடனமாடிக் கொண்டே தங்கள் கரங்களை நீட்டினர். அந்தக் கரங்களில் அவர்கள் ஒளித்து வைத்திருந்த தின்பண்டங்கள், அங்கே உட்கார்ந்திருந்த விருந்தினர்கள் மேல்தான் போய் வேகமாக விழுந்தன. அதில் ஒரு பண்டம் அரசனின் வலது கன்னத்தின் மீது பலமாக விழுந்து விட்டது. அரசனுக்கு உண்டான கோபம் இவ்வளவு அவ்வளவு அல்ல. அந்தக் கணமே அவர்களை, "நீங்கள் நடனமாடிய லட்சணம் போதும், போங்கள்" என்று அவ்விடத்தை விட்டு விரட்டி விட்டான்.

* * *

இப்படி இங்கு குழப்பமும் கலவரமுமாக இருந்த போது, இளவரசன் ஐவான் ஒரு காரியம் செய்தான். ஐவான் யாருக்கும் தெரியாமல் அங்கிருந்து மெள்ள நழுவித் தன் அரண்மனைக்கு ஓடிப் போய்ச் சேர்ந்தான். அங்கே தன் அறையில் வாஸிலிஸாவின் தவளை உடையிருந்தது. அதை நெருப்பில் போட்டு எரித்து விட்டான்!

நடனங்கள் எல்லாம் முடிந்து வாஸிலிஸா வீட்டுக்குத் திரும்பி வந்து பார்த்தான். தன் தவளைத் தோலைக் காணவில்லை. எங்கெல்லாமோ தேடித் தேடிப் பார்த்தான். கிடைக்கவில்லை. உடனே புத்திசாலியாகிய வாஸிலிஸா என்ன நடந்திருக்க வேண்டும் என்பதை ஊகித்தறிந்து விட்டான். தான் ஊகித்தது சரி என்று அறிந்ததும் அவன் அடைந்த வருத்தம் சொல்லி முடியாது. அப்படியே இடிந்து போய் உட்கார்ந்து விட்டான். சற்றுப் பொறுத்து இளவரசன் ஐவான் அங்கு வந்தான். அவனைப் பார்த்து, "ஆகா! என்ன காரியம் செய்து விட்டீர்கள்! இதைவிட அசட்டுத்தனமான காரியம் வேறு இருக்க முடியாது. நீங்கள் மட்டும் இன்னும் மூன்று நாட்கள் பல்லைக் கடித்துக் கொண்டிருந்திருந்தீர்களானல், நான் என்றும் உங்களுடைய வாஸிலிஸாவாகவே இருந்திருப்பேனே. என்றும் உங்கள் மனைவியாக இருந்திருப்பேனே. இப்பொழுது எல்லாம் கெட்டு விட்டதே! என்ன செய்ய முடியும்? நடந்தது நடந்து விட்டது. இனி இதைப் பற்றி வருத்தப் பட்டுப் பயனில்லை. நான் உங்களை விட்டுப் பிரிந்து போயேயாக வேண்டும். இருபத்தொன்பது உலகங்களுக்கு அப்பால், முப்பது நாடுகளுக்கு அப்பால் சாவில்லாத கோஷ்சி வசிக்கும் நாட்டில்தான் இனி என்னைப் பார்க்க முடி

யும்! ஆகவே இப்போது நான் போய் வருகிறேன்!'' என்று கூறினன். இப்படிச் சொல்லிக் கொண்டிருந்த போது வாஸிலிஸா ஒரு குயிலாக மாறி விட்டான்! பேசி முடித்ததும் 'விஸ்ஸ்' என்று விண்ணில் பறந்து சென்று விட்டான்.

* * *

இளவரசன் ஐவான் தான் செய்த அசட்டுக் காரியத்தை நினைத்து நினைத்து வருத்தப்பட்டான், அழுதான். இப்படி எவ்வளவு நாள் துயரம் தாங்கமாட்டாமல் அழுதான் என்று யாரால் சொல்லமுடியும்? கடைசியில் அவளைத் தேடிக்கொண்டு போகலாம் என்று தீர்மானித்தான். ஆனல் அவன் எந்தத் திசையில் போனன் என்பது தெரியவில்லையே! எல்லாத் திசைகளையும் நோக்கி வணங்கி இறைஞ்சினன். ''என் வாஸிலிஸா இவ் வழியாகப் போனளா?'' என்று ஒவ்வொரு திசையையும் கேட்டான். ஒரு திசையும் சரியாகப் பதில் சொல்ல வில்லை. கடைசியில் தன் கால் சென்ற வழியே போவது என்று தீர்மானித்தான்.

புத்திசாலி வாஸிலிஸாவைத் தேடிக் கொண்டு புறப்பட்டான், ஐவான்.

எத்தனை நாள் இப்படி நடந்தான் என்று யாரால் சொல்ல முடியும்! நடந்து நடந்து அவன் செருப்புகள் தேய்ந்து விட்டன. அவன் போட்டுக் கொண்டிருந்த அங்கி கிழிந்து விட்டது. வெயிலிலும் மழையிலும் அவன் அணிந்திருந்த குல்லாய் களை இழந்து காணப் பட்டது.

ஒருநாள் வழியில் இளவரசன் ஐவான், ஒரு தொண்டு கிழவனைப் பார்த்தான். அந்தக் கிழவன் இளவரசன் ஐவானிடம், ''தம்பி எங்கே போய்க் கொண்டிருக்கிருய்? என்ன காரியமாகப் போகிருய்?'' என்று பரிவுடன் கேட்டான்.

ஐவான் தன் வரலாறு முழுவதும் அவனிடம் கூறினன்.

அதை யெல்லாம் கேட்ட கிழவன், ''அடாடா! என்ன காரியம் செய்து விட்டாய், இளவரசே! தவளையின் தோலை ஏன் எரித்தாய்? அதை எரிக்காமலிருந் திருக்கக் கூடாதா? உன் சொந்தப் பொருளாக இருந்தால் அதை என்ன வேண்டுமானலும் செய்யலாம். எடுத்துப் பத்திரமாகப் பெட்டியில் வைக்கலாம், அல்லது நெருப்பில் போட்டு எரிக்கலாம், அல்லது தூர விட்டெறியலாம். உன்னுடைய தல்லாத ஒரு பொருளை இப்படிச் செய்வதற்கு உனக்கு என்ன உரிமை யிருக்கிறது? வாஸிலிஸா ரொம்ப அறிவுடைய பெண். தந்தையை விட அவள் புத்திசாலி. இது அவள் தந்தைக்குப் பிடிக்கவில்லை. ஒரு நாள் தந்தைக்குக் கோபம் வந்து விட்டது.



அந்தக் கோபத்தில் ' நீ மூன்று வருஷங்கள் தவளையாகக் கிடப்பாய் ' என்று சாபமிட்டு விட்டார். அந்தச் சாபத்தினலேதான் வாஸிலிஸா தவளையாக இருந்தாள். அந்தத் தவளைத் தோலை எரித்து விட்டாயே! சரி, இப்போது அதை நினைத்து வருத்தப்பட்டு என்ன பிரயோசனம்? அவளை எப்படியும் அடைவது என்று தீர்மானித்து விட்டாய்! அதற்கு ஒரு வழி சொல்லுகிறேன், கேள்! இதோ ஒரு நூல் கண்டு தருகிறேன். அதை உருட்டி விட்டுப் பின் தொடர்ந்து போ. அது எங்கெல்லாம் உருண்டு போகிறதோ, அங்கெல்லாம் நீயும் தைரியமாகப் பின் தொடர்ந்து போ! பயப்படாதே!'' என்று சொல்லி ஒரு நூல் கண்டைக் கொடுத்தான்.

இளவரசன் ஐவான், கிழவனுக்குத் தன் மனமார்ந்த நன்றிகளைச் செலுத்தி விட்டு அங்கிருந்து புறப்பட்டான்.

* * *

நூல் கண்டை உருட்டி விட்டான். அதைப் பின் தொடர்ந்து நடக்கலானான்.



நூல் கண்டு உருண்டு உருண்டு ஒரு பெரிய மைதானத்தை அடைந்தது. அதன் பின்னல் சென்ற ஐவான் அந்த மைதானத்தில் ஒரு கரடியைப் பார்த்தான். அதைக் கொல்வதற்குத் தன் வில்லை எடுத்து வளைத்து, அம்பைத் தொடுத்துக் குறி பார்த்தான்.

அப்போது கரடி, "இளவரசே! தயவு செய்து என்னைக் கொல்லாதீர்கள். நான் என்றைக்காவது உங்களுக்கு உபகாரமாக இருப்பேன். என்னுடைய உதவி தேவைப்படும். இன்று என்னைப் பிழைத்துப் போக விடுங்கள்'' என்றது.

இதைக் கேட்டதும் இளவரசனுக்கு இரக்கம் தோன்றி விட்டது. 'பிழைத்துப் போகட்டும்' என்று அதைக் கொல்லாமல் விட்டான். மேலே நடந்தான்.

திடீர் என்று ஒரு ஆண் வாத்து தலைமீது பறந்தது. ஆம், வாத்துக்களில் பறக்கும் இனமும் உண்டு. அந்த வகையைச் சேர்ந்தது இது. அதைக் கொல்ல அம்பைத் தொடுத்துக் குறி பார்க்கலானான். அப்போது அந்த வாத்து மனிதக் குரலில் பேசத் தொடங்கியது.

"ஐவான் இளவரசரே! என்னைக் கொல்லாதீர்கள். என்னுடைய உதவி உங்களுக்கு என்றைக்காவது தேவைப்படும். அன்று நான் வந்து உதவுவேன்'' என்று கூறியது.

ஐவான் அதையும் கொல்லவில்லை. அதைப் பிழைத்துப் போக விட்டு, மேலே நடந்தான்.

அங்கே ஒரு முயல் ஓடி வந்து அவன் வழியில் குறுக்கிட்டது. அதையும் வில்லை எடுத்துக் குறி பார்த்தான். முயல் மனிதக் குரலில் இறைஞ்சியது.

"இளவரசரே! ஐவானே! என்னைத் தயவு செய்து கொல்லாதீர்கள். நான் உங்களுக்கு என்றைக்காவது ஏதாவது உதவி செய்யக்கூடும். என் உதவி உங்களுக்குத் தேவைப்படலாம்'' என்றது.

முயலையும் பிழைத்துப் போகட்டும் என்று தப்ப விட்டு விட்டு இளவரசன் ஐவான் மேலே நடந்தான். இளவரசன் நடந்துநடந்து அலைமோதும் கடற்கரையை அடைந்தான். கடற்கரையின் மணலிலே ஒரு பெரிய மீன் கிடந்தது. நீரிலிருந்து கரையில் கிடக்கும் மீன் மூச்சுவிட முடியாமல் திணறிக் கொண்டிருந்தது. அதன் உயிர் ஊசலாடிக் கொண்டிருந்தது. அது இளவரசனைக் கண்டதும், "ஆ! இளவரசே! இளவரசே! என் பரிதாப நிலையைக் கண்டு இரங்க மாட்டீர்களா? என்னை மீண்டும் கடலில் எறிந்து காப்பாற்ற மாட்டீர்களா?'' என்று கேட்டுக் கொண்டது.

இளவரசன் மீனை எடுத்துக் கடலில் விட்டு அதற்கு உயிர்ப்பிச்சை அளித்துக் கடற்கரை யோரமாகவே நடந்தான்.

* * *

இப்போது அவனுக்கு முன்னல் போய்க் கொண்டிருந்த நூல் கண்டு கனத்தகாரமான காட்டை அடைந்தது. அந்தக் காட்டில் ஒரு பெட்டைக் கோழியின் காலின் மீது ஒரு சின்னஞ் சிறு குடிசை யிருந்தது. அந்தக் குடிசை ஓயாமல் சுழன்று கொண்டே யிருந்தது.

அதைப் பார்த்ததும், "சின்னக் குடிசையே! சின்னக் குடிசையே! உன் முதுகைக் காட்டு மரங்கள் பக்கமாக

வும் முகத்தை நானிருக்கும் பக்கமாகவும் திருப்பிக் காண்பியேன்!'' என்றான்.

அப்படியே அந்தக் குடிசை செய்தது. உடனே இளவரசன் அந்தக் குடிசைக்குள் நுழைந்தான். உள்ளே அடுப்பங்கரைப் பக்கத்தில் ஒரு கிழவி எலும்பும் தோலுமாக, வளைந்த மூக்கோடு உட்கார்ந்திருந்தாள். அவள் பக்கத்தில் ஒரு துடைப்பமிருந்தது. இந்தக் கிழவிதான் பாபா யாகா என்ற மந்திரவாதிக் கிழவி. கிழவி, இளவரசனைக் கண்டதும் வாசனை முகர்வது போல் மூக்கினால் 'உஸ் உஸ்' என்று மூச்சிழுத்து விட்டு, "ருஷ்ய ரத்தம் போல் அல்லவா தோன்றுகிறது, இதுவரையில் நான் இந்தமாதிரி வாசனையை முகர்ந்ததே கிடையாது! ரஷ்ய ரத்தம் இன்று என் வீட்டு வாசலைத் தேடி வருகிறதே! என்ன ஆச்சரியம்! யார் வருவது? எங்கிருந்து வருகிறார்கள்? எதற்காக வருகிறார்கள்?'' என்று கேட்கத் தொடங்கி விட்டாள்.

"கிழவி, கேள்விகளெல்லாம் பிறகு கேட்கலாம். முதலில் எனக்குப் பசிக்கிறது. குளித்து விட்டுச் சாப்பிட வேண்டும். அதற்கு ஏற்பாடு செய்!'' என்றான்.



அப்படியே கிழவி இளவரசன் இவானுக்கு வெந்நீர் போட்டுக் கொடுத்தாள். ருசியாகச் சமைத்துச் சாப்பாடு போட்டாள். சாப்பிட்டவுடன் அவனுக்குக் கண்கள் சுழன்றன. தூக்கம் வந்தது. இவான், 'நான் தூங்க வேண்டும்' என்றான். பாபாயாகா அவன் படுத்துத் தூங்க நல்ல படுக்கை போட்டுத் தந்தாள்.

இளவரசன் அலுப்புத் தீரத் தூங்கி எழுந்திருந்தான். பிறகு மந்திரவாதிக் கிழவியிடம், தன் மனைவி புத்திசாலி வாஸிலிஸாவைத் தேடிக் கண்டு பிடிக்கப் புறப்பட்ட வரலாற்றைக் கூறினான்.

"உன் மனைவியைத் தேடிக் கொண்டு புறப்பட்டாயா?'' என்று ஏதோ யோசித்த வண்ணம் கேட்டாள் கிழவி பாபாயாகா. அவன் முக பாவத்தைப் பார்த்தபோது வாஸிலிஸா இருக்குமிடமும், அதற்குப் போகும் வழியும் அவளுக்குத் தெரியும் போல் தோன்றியது. அதனால், "ஆமாம்! அவள் இருக்குமிடம் உனக்குத் தெரியுமா, கிழவி?'' என்று கேட்டான் இவான்.

"தெரியும். நன்றாகத் தெரியும்! உன் மனைவி வாஸிலிஸா மரணத்தை வென்ற கோஷ்கியினிடமல்லவா சிக்கிக் கொண்டிருக்கிறாள். அங்கிருந்து அவளை விடுவித்து அழைத்து வருவது என்பது மிகவும் கஷ்டமான காரியமாயிற்றே! கோஷ்கியை உன்னால் வெல்ல முடியாதே! அவன் உன் திறமை, சாமர்த்தியம், பலம் எல்லாவற்றுக்கும், அப்பாற்பட்டவனாயிற்றே! அவன் உயிர் ஒரு ஊசி முனையில் இருக்கிறது. அந்த ஊசி ஒரு முட்டையினுள் இருக்கிறது. முட்டை ஒரு வாத்துக்குள் இருக்கிறது. அந்த வாத்து ஒரு முயலுக்குள் இருக்கிறது. முயல் கற்பெட்டிக்குள்ளிருக்கிறது. கற்பெட்டி ஒரு சிந்தூர மரத்தின் உச்சாணிக் கிளையில் இருக்கிறது. அந்த மரத்தைக் கோஷ்கியே தன் கண்ணைப் போல் காவல்காத்து வருகிறான்!'' என்றாள்.

அன்றிரவை இளவரசன் இவான் பாபாயாகாவின் குடிசையிலேயே கழித்தான். மறு நாள் காலை பாபாயாகா, அந்தச் சிந்தூர மரத்துக்குப் போகும் வழியைச் சொன்னாள். அந்த வழியே நடந்தான்.

எத்தனை நாள் நடந்தான் என்பதையாரால் சொல்ல முடியும்! எப்படியோ பல நாட்கள் நடந்து ஒருநாள் சிந்தூர மரத்தின் அடிக்கு வந்து சேர்ந்தான்!

மரத்தின் உயரத்தைப் பார்த்து, அவனுக்கு ஒரே, மலைப்பாக இருந்தது! 'ஆ! இதில் எப்படி ஏறுவது? மனித முயற்சியில் நடவாத காரியம் போலிருக்கிறதே!' என்று மனத்துக்குள் நினைத்துக் கொண்டான்.

அப்போது எங்கிருந்தோ கரடி வந்து சேர்ந்தது. ஆம், முன்னர் இவான் உயிர்ப் பிச்சை கொடுத்த கரடிதான் அது. கரடியின் பலம் எவ்வளவு என்று சொல்லவும் வேண்டுமா? மேலும், ஒரு காலத்தில் தனக்கு உயிர்ப் பிச்சையளித்த இவானுக்கு உதவ வேண்டும், அப்படி உதவி தன் நன்றியுணர்ச்சியைக் காண்பிக்க வேண்டும் என்று வேறு அந்தக் கரடி தீர்மானித்தது. இதனால் வேறு அந்தக் கரடியின் பலம்

பெருகி விட்டது. அந்த மரத்தைத் தலையினால் முட்டியது. முன் கால்களால் உலுப்பியது. சிந்தூர மரத்தை வேரோடு கெல்லிப் பெயர்த்தெடுத்துக் கீழே தள்ளியது. மரம் விழுந்த வேகத்தில் உச்சாணிக் கிளையிலிருந்த பெட்டி கீழே விழுந்து உடைந்தது. பெட்டிக்குள்ளிருந்த முயல் தப்பி வேகமாக ஓடத் தொடங்கியது.

அப்போது, முன்னர் ஐவான் உயிர்ப் பிச்சை யளித்த முயல் எங்கிருந்தோ வந்து, தப்பி ஓடும் முயலைத் துரத்தியது. அம்முயலும் இளவரசன் ஐவானுக்கு உதவித் தன் நன்றியைக் காண்பிக்க வேண்டிய சமயம் இது தான் என்று தீர்மானித்தது. இந்தத் தீர்மானத்தின் காரணமாக அந்த முயலின் கால்களுக்கு என்றுமில்லாத வேகம் பொங்கியது. அந்த வேகத்தில் துரத்திச் சென்று கோஷ்கியின் உயிரை வைத்திருக்கும் முயலைப் பிடித்துக் கொண்டது. அத்துடன் நீண்ட நேரம் சண்டையிட்டு, அதைச் சுக்கு நூறுகப் பிய்த்தெறிந்தது. முயல் உயிரிழந்து தரையில் கிடந்தது.



உயிரிழந்த முயலின் உடலிலிருந்து வெளிப்பட்ட பெண் வாத்து ஆகாசத்தில் திமுர் என்று பறக்கத் தொடங்கியது! அப்போது எங்கிருந்தோ முன்னம் காப்பாற்றிய ஆண் வாத்து வந்து, ஆகாயத்தில் பறந்து செல்லும் பெண் வாத்தைத் துரத்தியது.

பெண் வாத்து, இனி இந்த ஆண் வாத்தினிடம் தப்ப முடியாது என்று எண்ணித் தான் காப்பாற்றி வரும் முட்டையை ஆகாயத்தில் பறந்த வாக்கிலேயே இட்டு விட்டது. அந்த முட்டை கடலில் விழுந்தது!

இதைப் பார்த்தவுடன் இளவரசன் அழ ஆரம்பித்து விட்டான். ஆம், இந்த மாபெரும் கடலுக்குள் முட்டையை எங்கே என்று தேடுவது? ஐவானுக்கு உண்டான ஆற்றாமை சொல்லி முடியாது. இவ்வளவு முயற்சிகள் எல்லாம் எடுத்து, கைக்கெட்டியது. வாய்க்கு எட்டவேண்டிய சமயத்தில் இப்படியாகி விட்டதே என்று நினைத்த போது அவனுக்கு அழுகையே வந்து விட்டது. ஆனால் அதிக நேரம் அழவில்லை. ஏனென்றால் அந்தச் சமயம், முன்னே ஐவான் உயிர்ப் பிச்சை யளித்த மீன், அந்த முட்டையை வாயில் கவ்விக் கொண்டு அங்கு வந்து சேர்ந்தது.

இளவரசன் ஐவான் முட்டையை உடைத்தான். முட்டைக்குள்ளிருந்து அந்த ஊசியை யெடுத்தான். அதன் முனையை முறிக்கத் தொடங்கினான். ஐவான் ஊசி முனையை வளைக்க, வளைக்கக் கோஷ்கி வலி தாங்கமாட்டாமல் "ஐயோ, அப்பா!" என்று அலறினான். அலறி என்ன பயன்? இளவரசன் ஐவான் ஊசி முனையை முறித்தவுடன் கோஷ்கி துடி துடித்து, 'நெடுஞ் சாண்' கட்டையாகக் கீழே இறந்து விழுந்தான்.

* * *

கோஷ்கி அழகான சலவைக் கல் அரண்மனையில் வசித்து வந்தான். எல்லாச் சுக சௌகரியங்களும் அந்த அரண்மனையிலிருந்தன. இருந்து என்ன பயன்? வாஸிலிஸா அங்கே சோகமே உருவாகச் சிறைபட்டுக் கிடந்தாள். அவள் வாழ்வின் இன்பமெல்லாம், அந்த அரக்கன் கோஷ்கியினால் துறந்து அவதியுற்று வந்தாள். தன் காதலன் ஐவான் மட்டும் அவ்வளவு அவசரப் பட்டுத் தன் தவளை உடையைத் தீயில் போட்டு எரிக்காமல் இருந்திருந்தால் இன்று எவ்வளவு இன்பமாக வாழ்க்கை நடத்தலாம். இளவரசன் ஐவான் என்ன செய்கிறாரோ! தன் பிரிவைத் தாங்கமாட்டாமல் அவரும் வருத்தப்பட்டுக்கொண்டிருப்பார். இப்படியெல்லாம் அவள் எண்ணி எண்ணி உருகினாள்.

இப்படியிருந்தபோது கோஷ்கி உயிர் துறந்து விழுந்தான். புத்திசாலியான வாஸிலிஸா இதைச் செய்திருப்பவர் யார் என்று ஊகித்து மகிழ்ச்சி யடைந்தாள்.

அவன் இறந்தவுடன் அந்த அரண்மனைக்கு இளவரசன் ஐவான் தன் காதலியைக் காண விரைந்து சென்றான். அங்கே புத்திசாலியான வாஸிலிஸா உள்ளத்தில் ஆறாக் காதலுடனும் இதழ்களில் இன்பப் புன்னகையுடனும் இளவரசன் ஐவானை வரவேற்றாள்.

பிறகு இருவருமாகத் தங்கள் அரண்மனைக்குத் திரும்பிச் சென்றனர். அதற்குப் பிறகு அவர்கள் இருவரும் சந்தோஷமாகவே நீண்ட நாள் வாழ்ந்து வந்தனர்.

Printed & Published by T. Sadasivam at the "Kalki" Press, No. 20, Dr. Guruswamy Mudaliar Road, Kilpauk Madras - 10. Editor: Mi. Pa. Somasundaram



HVM. 263-50 TM

REGISTERED No. M. 4392
Registered as a Newspaper in Ceylon

